முத்தமிழ் வித்தகர்

முருகு சுப்பிரமணியன்



முனைவர் எம்.எஸ். ஸ்ரீ லக்ஷ்மி

முத்தமிழ் வித்தகர்
முருகு சுப்பிரமணியன்

முனைவர் எம்.எஸ். ஸ்ரீ லக்ஷ்மி

பதிப்பாசிரியர்கள்

முனைவர். அரங்க.பாரி
முனைவர் தி.குமார்
முனைவர் ஆர்.மோகன தாஸ்
முனைவர் எஸ்.குமரன்
முனைவர் கிருஷணன் மணியம்
முனைவர் ஒப்பிலா மதிவானன்
முனைவர் அபிதா சபாபதி

கலைஞன் பதிப்பகம்
19 கண்ணதாசன் சாலை
தியாகராய நகர்
சென்னை - 600 017

Rs. 120.00

MURUGU SUBRAMANIAM

By
Dr. M.S. Shri Lakshmi

First Edition : 2016

Published by:
KALAIGNAAN PATHIPAGAM
19 Kannadhasan Salai
T.Nagar, Chennai - 600 017.
Ph: 044-24345641; 24313221
Email: anuragam78@gmail.com

Designed & Layout by
Star Graphics, Chennai - 35.
Ph: 94440 77985
Email: stargraphics1997@gmail.com

Printed at
M.K. Graphics, Chennai - 600 021.

பதிப்பாசிரியர்கள் உரை

தமிழ் இலக்கிய மரபில் கவிதைக்கலை தொன்மைக் காலந்தொட்டு மரபாக இருந்து வரும் ஒருகலைக்கூறு ஆகும். பாட்டு-செய்யுள்-மரபுக்கவிதை-புதுக்கவிதை என ஒவ்வொரு காலகட்டத்திலும் கவிதை தன் வடிவமாற்றக்கூறுகளைப் பெற்று வளர்ச்சியடைந்து வந்துள்ளது. உரைநடை வளர்ச்சிப் பெற்ற பின்னர் உரைநடையால் படைக்கப்பெறும் கலைக்கூறுகள் இலக்கியமாக வகைப்படுத்தப் பெற்றன. இவ்வாறு செய்யுள், கவிதை, உரைநடை வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டோர் பலராவர். அவர்கள் காலத்தால், இடத்தால், செய்யும் பணி வெவ்வேறு வகையினராக அமைந்திருந்தாலும் அவர்கள் தமிழால் ஒன்றிணைந்துள்ளனர். அவர்களில் பலரது வாழ்வியலும், இலக்கியப் பணியும் இலக்கிய வரலாற்றில் முழுமையாகப் பதிவு செய்யப்படாமல் இருந்து வந்துள்ளது.

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு, தமிழால் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழறிஞர்களை உலகம் முழுவதும் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்கள் முன் கொண்டுசேர்க்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

புலமை மிக்க தமிழறிஞர்களின் பணிகளை ஆவணப்படுத்தும் அரிய முயற்சியில் கலைஞன் பதிப்பகம் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. அதனுடன் தமிழுக்குத் தரணியெங்கும் புகழ் சேர்த்துக் கொண்டிருக்கும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழியல்துறையும், அயலகத் தமிழர்களை ஒருங்கிணைத்துத் தமிழ் வளர்க்கும் மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையும் கைகோர்த்து இம்மகத்தான பணியினைச் செயலாற்றுகின்றது.

சென்ற ஆண்டில் (2015) ஒரே நாளில் 351 தமிழறிஞர்களின் தமிழ்ப்பணியினை நூலாக்கமாக வெளியிட்டுச் சாதனை படைத்தது. அந்தச் சாதனைப் பயணத்தில் மீண்டும் ஒரு சாதனையாக இப்பதிப்பு முயற்சி அமைவதில் மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகின்றோம்.

பதிப்பாசிரியர்கள்

பதிப்புரை

பார் போற்றும் கலைக்கூடமான அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழியல்துறையும், மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையும், சென்னை கலைஞன் பதிப்பகமும் இணைந்து தமிழறிஞர்கள் - 351 என்ற தலைப்பில் சென்ற ஆண்டில் உலகமெங்கும் பரவிக் கிடக்கும் தமிழறிஞர்களை தமிழுலகிற்கு அறிமுகம் செய்து சிறப்பித்தது.

அவ்விழாவின் போதே அடுத்தகட்டமாக ‘கவிஞர்கள் - பாடலாசிரியர்கள்’ பற்றிய பொருண்மையில் அடுத்த ஆண்டு பதிப்பாக்க முயற்சி நடைபெறும் என்று முறையாக அறிவிக்கப் பட்டு, அதன் விளைவாகத் தற்போது உலகம் முழுவதும் பரவியுள்ள கவிஞர்கள், பாடலாசிரியர்கள், தமிழறிஞர்கள் குறித்த நூலாக்கப் பணி வெளியாகின்றது. எண்ணுவதும் எழுவதும் எல்லோர்க்கும் எளிதான கலை அல்ல. அது சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் போன்றதாகும். மிகச்சிறந்த சிந்தனையாளர்கள் தம் சிந்தனைத்துளிகளைக் கவிதைகளாகச் சமூகத்தின் முன்னர் தவழ விட்டுள்ளனர். அவை வெளிச்சத்துக்கு வருவதற்கு இதுஓர் வாய்ப்பாக அமையும்.

மகாகவி பாரதியாரின் சிந்தனைத் துளிகளால் வேர்விட்டுக் கிளைத்தெழுந்த கவிதைக்கலை இன்றைக்கு வாழும் இலக்கியமாக இருந்து வருகின்றது. இன்றைக்குப் பல கவிஞர்கள் தத்தம் சிந்தனைக் கருத்துகளை வெளியிடுவதற்கு ஏற்ற பல வாய்ப்புக்கள் உள்ளன. அவ்வாறு வெளி உலகுக்குப் புலனாகாமல் விருட்சங்களாய் வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கும் பல கவிஞர்கள் இந்த நூலாக்கப்பணியின் மூலம் எழுத்துலகில் நிலைத்து வாழ்வதற்கு வழி ஏற்பட்டுள்ளது என்பதனை எண்ணிப் பெருமிதமடைகின்றோம்.

தமிழுக்குச் செய்யும் பெரும்பணியாக இதனைக் கருதாமல் தமிழுக்குச் செய்ய வேண்டிய கடமைப்பணியாகக் கருதி இவற்றை வெளியிடுகின்றோம். எங்கள் தமிழ்ப்பணியில் தோளோடு தோள் நிற்கும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழியல்துறை, மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறை ஆகிய நிறுவனங்களுக்குத் தமிழால் கடமைப்பட்டுள்ளோம். நூலாக்கம் செய்யும் பணிக்குத் துணைநின்ற பதிப்பாசிரியர்கள், நூலாசிரியர்கள், அச்சாக்கம் செய்த நிறுவனத்தினர் ஆகிய அனைவர்க்கும் எங்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பதிப்பகத்தார்

என்னுரை

இன்றைய சூழலில் வளர்ந்துவிட்ட எழுத்தாளர்கள் பலர் தாங்கள் ஏதோ சுயம்புவாகவே எழுத்துத்துறையில் தோன்றிவிட்டதாக நினைத்து அகம்பாவம் கொள்வதோடு தங்களை ஊக்குவித்த அல்லது எழுதத் தூண்டியவர்களை மறந்தும் வருகிறார்கள். இது சிங்கப்பூரில் நான் கண்ட விஷயம் மட்டுமின்றி என்னை வருத்திய விஷயமும் ஆகும். புதுமைப்பித்தன் இலக்கியச் சர்ச்சை என்னும் நூலுக்கு அணிந்துரை வழங்கிய திரு வெங்கட் சுவாமிநாதன் ''புதுமைப்பித்தன் என்னும் பன்முக மேதை விபரீத ஆசை என்னும் கதையை மட்டும் எழுதவில்லை என்பதை யாராவது ஒருவர் கூடச் சொல்லவில்லையே'' என வருத்தத்துடன் எழுதினார்.அதைப்போன்ற வருத்தம் தான் முருகுவின் ஒப்பற்ற பணியை மறந்துவிட்ட சிங்கைத் தமிழர்கள் மீது எனக்கும் ஏற்பட்டது. இதுவரை வெளிவந்துள்ள நூல்களும் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் முருகு சுப்பிரமணியனின் பங்கும் பணியும் பற்றிக் கூறாது மறைத்தனவா? அல்லது மறந்தனவா?

திரு முருகு சுப்பிரமணியன் சிங்கப்பூரில் தமிழ்முரசு வழியே ஆற்றிய பத்திரிகைப் பணிகளையும்,அன்னார்தம் இலக்கியப் பணிகளையும், அவர் தம் சமுதாயப் பணிகளையும் இதுவரை ஒருவர் (என்னைத் தவிர) கூடக் குறிப்பிடவில்லையே என்ற ஆதங்கம் எனக்கு உண்டு.முருகு என்னும் பெருந்தகையின் தமிழ்(முரசு)ப்பணி முற்றிலும் இருட்டடிப்பு செய்யப்பட்டு விட்டதாக நான் கருதுகிறேன்.

மற்ற எழுத்தாளர்கள் மறந்துவிட்ட வேளையில் திரு இராம கண்ணபிரான் முருகுவைப்பற்றிச் சிலாகித்துக் கூறியதைக் கேட்டு என் உள்ளம் பேருவகை அடைந்தது.திரு கண்ணபிரான் தமிழ் எழுத்தாளர்களுக்கு மத்தியில் வித்தியாசமானவர். இவர் தம் மாணவப்பருவத்தில் முருகு சுப்பிரமணியனை நேரில் சந்தித்துத் தம் வாசிப்பை வளர்த்துக்கொண்டவர்.

இவர் முருகுவுடன் நேரடித்தொடர்பு கொண்டவர். பவுன் பரிசு பெற்றவர்;அவரால் வளர்ந்தவர்; முருகுவை இன்றும் போற்றுபவர்.

தமிழ்முரசில் ஏழாண்டுகாலம் பணிபுரிந்தவேளையில் என்னவெல்லாம் ஆக்ககரமான பணிகள் செய்தாரோ அவற்றைப் போன்றே தமிழ்நேசனிலும் ஆக்ககரமான பணிகள் செய்தார். ஆனால் மலேசியத் தமிழ் இலக்கியவாதிகள் அவரை இன்றும் மறவாமல் உள்ளனர்.

வாய்ப்புக்கிடைக்கும்போது முருகுவால் தங்கள் வளர்ந்ததை நினைவுகூர்கின்றனர். திரு சை. பீர்முகமது,திரு சாமிமூர்த்தி, அரு.சு.ஜீவானந்தன் போன்றோரை இவ்வகைக்கு எடுத்துக்காட்டாய்க் கூறலாம். திரு சை பீர் திரு முருகுவுடன் அணுக்கமான தொடர்பு கொண்டவர்.ஆயின் மற்றவர்களோ பவுன்பரிசின் மூலம் அவரால் அடையாளம் காணப்பெற்றவர்கள்.

முருகு சுப்பிரமணியன் தமிழகத்தில் பொன்னி என்னும் பத்திரிகையைத் தம் இளம்பருவத்தில் நடத்தியவர். சொ.முருகப்பா நடத்திய குமரன் பத்திரிகையில் பணிபுரிந்தவர். தம் பத்திரிகைப்பணிகளின் வாயிலாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தினரையும், முற்போக்குக் கவிஞரான பாரதிதாசனையும் கவர்ந்தவர். பத்திரிகைத்துறையில் பல புதுமைகளைப் படைத்தவர்.

இவர் .படைப்பிலக்கியவாதிகள் பலரை உருவாக்கியவர். 'எழுத்தாளர் அறிமுகம்' என்னும் பகுதியின் மூலம் இளம் எழுத்தாளர்களுக்கு வாய்ப்பளித்து வளர்த்தவர். பவுன் பரிசுத் திட்டம் என்ற திட்டத்தை உருவாக்கி அதன் மூலம் சிறந்த சிறுகதையாசிரியர்களையும், கவிஞர்களையும் அடையாளம் காட்டியவர். இங்ஙனம் பவுன்பரிசு பெற்ற எழுத்தாளர்கள் பின்னாளில் மிகச்சிறந்த படைப்பிலக்கியவாதிகளாகத் திகழ்ந்தனர்.

மற்றவர்க்கு வழிகாட்டிய முருகுவுக்குள் சிறந்த சிறுகதை ஆசிரியர் மறைந்துள்ளார் என்பது மிகப்பெரும்பாலோருக்குத் தெரியாது. முருகுவின் தன்னலமற்ற சேவை யாராலும் மறக்கப்படவோ அல்லது மறுக்கப்படவோ முடியாதது.காலத்தை

வென்று வாழும் இப்பெருமகனாரின் தமிழ்ப்பணி வருங்காலத்தவர் அறியவேண்டிய அரும்பணி என்பதால் மலேசியத் தமிழ்ப் பெருந்தகையோர் வரிசையில் இவரைப்பற்றி எழுதத் துணிந்தேன். இதன் மூலம் இவருடைய தமிழ்த்தொண்டு ஆவணப்படுத்தப்படும்.

முருகுவின் தமிழ்ப்பணிபற்றி இலக்கியப்பாலம் பங்கும் பணியும் என்னும் என் நூலில் (1991) ஒரு கட்டுரையை எழுதியுள்ளேன். அக்கட்டுரையின் விரிவாக்கமே முருகுவைப் பற்றிய இந்நூல்.

இந்நூலை எழுதுவதற்கு மிகவும் உறுதுணையாக நின்றவர் முருகுவின் மூத்த மகன் திரு பாண்டியன் அவர்களும் அன்னார்தம் குடும்பத்தினரும் ஆவர். அவர் தம் துணைவியார் திருமதி சுசீலா பாண்டியன் முருகு பொன்விழாமலர், முருகு நினைவுமலர், முருகுவின் நிழற்படத்தொகுப்பு ஆகியவற்றைக் கோலாலும் பூரிலிருந்து சிங்கைக்கு வந்து என்னிடம் கொடுத்தார். திரு பாண்டியன் அவர்களின் தமிழ்ப்பற்றுக்கும், தந்தைப் பாசத்திற்கும் தலைவணங்குகிறேன்.

பத்திரிகை உலகின் ஜாம்பவான் என்று புகழாரம் சூட்டப்பட்ட திரு முருகு சுப்பிரமணியன் அவர்களின் மகன்,மருமகள், பேரக்குழந்தைகள் என எல்லோரும் பெருமித உணர்வுடன் எனக்கு உதவியதை எண்ணி என் நெஞ்சம் இறும்பூது எய்துகிறது. அனைவர்க்கும் இதயங்கனிந்த நன்றி.

திரு சை பீர்முகமது அவர்களிடம் முருகுவைப்பற்றிய நேர்காணலை இணையம் வழி நடத்தினேன். அவர் முருகு பற்றித் தாம் எழுதிய மூன்று கட்டுரைகளையும் அனுப்பி வைத்ததோடு நேர்காணலையும் அனுப்பிவைத்தார்.அவை திசை தெரியாக் கப்பலுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்குப் போல அமைந்தன. தம் உடல்நலக் குறைவையும் பொருட்படுத்தாது முருகுவுடன் பழகிய இனிய நினைவுகளை என்னுடன் பகிர்ந்துகொண்ட அன்னார்தம் உதவிக்கு என்ன கைம்மாறு செய்யப்போகிறேன் என்று என் நெஞ்சம் கவல்கிறது. இலக்கியம் தொடர்பாக நான் எந்த உதவி கேட்டாலும் இன்முகத்தோடு உதவும் பீர்முகமது என்னும் பெருந்தகைக்கும் கோடானு கோடி நன்றி.

சுயநலத்தின் சுவடே இல்லாமல் பொது நலச்சிந்தனையுடன் தமிழ்ப்பணி செய்யும் தகைமையாளர் - நான் மதிக்கும் கல்வியாளர் முனைவர் திரு ரெ கார்த்திகேசு அவர்கள். அவர் பவுன் பரிசுத்திட்டத்தின் நீதிபதிகளில் ஒருவர். அவர் திரு முருகு சுப்பிரமணியன் பற்றியும் பவுன் பரிசுத் திட்டம் பற்றியும் அற்புதமான தகவல்களைத் தந்து உதவினார். அவருடைய உடல்நலம் பாதிக்கப்பட்டும் கூட அவருடைய உள்ளம் தமிழ்நலம் நாடும் உள்ளம் என்பதால் உடல்நலத்தினைப்பற்றிய சிந்தனையை ஒரங்கட்டிவிட்டுத் தமிழ்நலச் சிந்தனையுடன் எனக்கு உதவிய அப்பெருமகனார்க்கு மீண்டும் முழுமனத்தோடு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பவுன்பரிசுக்கதைகள் என்னும் தொகுப்பு நூலினைத் தம் அலைபேசியின் வழி அனுப்பி உதவிய தம்பி திரு பச்சைபாலன் அவர்களுக்கும் நன்றி.

திரு இராம கண்ணபிரான் என்னுடன் பிறவாமலே எனக்கு வாய்த்த சகோதரர். சுமார் முப்பது ஆண்டுகளுக்கும் மேலான இலக்கிய நட்பு எங்கள் நட்பு. இலக்கியத்தைப் பொறுத்தவரை அவரது ஆலோசனைகளுக்கு என்றுமே முதலிடம் தருபவள் நான். முருகுவைப்பற்றிய அவரது நேர்காணலுக்கும், சொல்லில் அடங்கா வகையில் எனக்கு உதவிவரும் அந்தச் சோதர உள்ளத்துக்கும் நனிநன்றி.

தமிழ்ப் பெருந்தகையோர் திட்டத்தின் வழி பல நூல்களை வெளியிடப் பெருமுயற்சி எடுத்துவரும் இந்திய ஆய்வியல் துறைப் பேராசிரியர் முனைவர் குமரன் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியன்.

மலேசிய இலக்கியச் சிற்பிகள் வரிசையில் முருகுவைப்பற்றிய இந்நூல் அறிமுக நூலாக வெளிவருகிறது. அவர் பொன்னியில் அறிமுகப்படுத்திய ''பாரதிதாசன் பரம்பரை'' என்னும் தொடரில் இடம்பெற்ற கவிஞர்களின் பட்டியலை இந்நூலில் சேர்க்க முயன்றும் பல காரணங்களால் முடியாமல் போயிற்று. மேலும் குறுகிய கால அவகாசத்துக்குள் முருகுவின் படைப்பிலக்கியங்கள் குறித்த வேட்டை முற்றுப்பெறவில்லை. ஆகவே இந்நூலின் மறுபதிப்பில் மேலும் பல புதிய செய்திகளைச சேர்க்கும் எண்ணம் உண்டு.

முத்தமிழ் வித்தகர் முருகு சுப்பிரமணியன்

அறிமுகம்:

பரந்து, விரிந்திருக்கும் பாருலகைத் தொடர்பு கொள்ளக் கூடிய வகையில் நெருங்கச் செய்வன பத்திரிகைகள். அறிவியலின் வளர்ச்சியால் கனிந்த இப்பத்திரிகைப் பெண்ணின் பெருமைகளைப் பாவேந்தர்,

''காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீதான்! இந்தப்
பாரிடைத் துயில்வோர் கண்ணிற்
பாய்ந்திடும் எழுச்சி நீதான்!
ஊரினை நாட்டை இந்த
உலகினை ஒன்று சேர்க்கப்
பேரறி வாளர் நெஞ்சிற்
பிறந்த பத்திரிகைப் பெண்ணே'

எனப் போற்றிப் பாடுவர். இப்பத்திரிகைத்துறையின் மூலம் மலேசிய, சிங்கப்பூர் மக்களுக்கு அறிமுகமாகி, அவர்களின் அன்பு இதயங்களில் ஏற்றமுடன் வீற்றிருப்பவர் அமரர் முத்தமிழ் வித்தகர் முருகு சுப்பிரமணியன்.

பிறப்பும் வளர்ப்பும்:

செந்தமிழ் வழங்கும் செட்டிநாட்டில் 'கோனாபட்டு' என்னும் சிறுகிராமம் கல்வெட்டுகளில் இடம்பெற்ற அரும்பெருமை கொண்டது. இக்கிராமமே முத்தமிழ் வித்தகராம் முருகுவைத் தமிழ் இலக்கிய உலகிற்குத் தந்தது. முருகப்பன் சிவகாமி இணையர் பெற்ற ஒப்பற்ற ஒரே பிள்ளை முருகு சுப்பிரமணியன் ஆவார். 5.10.1924 இல் இவர் பிறந்தார்.

இளமையில் ஊறிய எழுத்தார்வம்:

திருச்சி அர்ச். சூசையப்பர் உயர்நிலைப் பள்ளியில் 1939ஆம் ஆண்டு ஐந்தாம் படிவத்தில் படித்துக் கொண்டிருந்தபொழுதே

இவருடைய எழுத்தார்வம் பிறங்கி ஒளிவிடத் தொடங்கியது. முருகுவின் கட்டுரையை அவருடைய தமிழாசிரியர் மற்ற மாணவர்களுக்குக் காட்டிக் 'கட்டுரை என்பது இவ்வாறு அமைய வேண்டும்' எனப் போற்றியதோடு அக்கட்டுரையின் சிறப்புக்களையும் விளக்கினார். முருகுவிடம் அமைந்திருந்த எழுத்தாற்றலை அவருடைய ஆசானே மேன்மேலும் வளரச் செய்தார்; தூண்டுகோலானார். முருகுவிடம் ஆற்றலிருப்பதைச் சுட்டிக்காட்டி நிறைய எழுதுமாறு பணித்தார்.

வாலிபத்தின் வாசலில் 'இளந்தமிழன்' உதயம்:

1942 முதல் பல்கலைக்கழக வகுப்போடு படிப்பு முடிந்தது. திருச்சியில் பள்ளியில் படிக்கும்போதே முருகுவிடம் பத்திரிகை ஆர்வம் மிளிர்ந்ததன் தொடர்ச்சியாக 'இளந்தமிழன்' என்னும் பெயரில் மாதமிருமுறை கையெழுத்துப் பத்திரிகையை வெளியிட்டார். 'இளந்தமிழன்' அறிஞர் பார்வையினைப் பிணித்தான். இளந்தமிழனால் கவரப்பட்டு அதில் கட்டுரை எழுதியவர் பலர்.

அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் சர்.சி.வி. ராமனின் துணைவியார் திருமதி. லோகசுந்தரி ஆவார்.'' இளந்தமிழன் அச்சுத்தேர் ஏறித் தமிழுலகில் வலம் வரவேண்டும்' என்று கரந்தைத் தமிழ்ச்சங்க ஏடான தமிழ்ப்பொழில் தன் மதிப்புரையில் வாழ்த்திற்று. ஆயின் இளந்தமிழன் மூன்றாண்டுகட்குப் பின் அச்சூர்தி ஏறாமலேயே நின்றான்.

புனைபெயரும் புலமையின் வெளிப்பாடும்:

இளந்தமிழனில் முருகு என்னும் புனைபெயரில் எழுதி வந்தார். இளந்தமிழன் பத்திரிகை 'இளந்தமிழனின் ஆசிரியர் முருகு' என்னும் பெயரோடு வெளிவந்தது. இப்பத்திரிகை அடையாளங் காட்டிய இப்பெயரே இவருடைய இயற்பெயரோடிணைந்து 'முருகுசுப்பிரமணியன்' என நிலைத்துவிட்டது.

ஆயின் சிங்கப்பூர் வானொலியின் தமிழ்ப்பிரிவுத் தலைவராய் விளங்கிய அ.முருகையன் என்பவரும் முருகு என்னும் புனைபெயரில் பல சிறுகதைகள் எழுதியுள்ளார். (எதிர்காலத்தில்பெயர்க்குழப்பம் ஏற்படாமல் இருக்கவேண்டும்.) மலேசியா, சிங்கப்பூர் நாடுகளில் முருகு என்னும் பெயர்

பத்திரிகைத்துறையில் ஜாம்பவான் என்று போற்றப்படும் முருகு சுப்பிரமணியன் அவர்களையே குறிக்கும் என்பதை வருங்கால ஆய்வாளர்கள் கருத்தில் கொள்ளவேண்டும்.

இளந்தமிழனில் 'கண்ணாடி' என்னும் கவிதையை முருகு 1942இல் எழுதி வெளியிட்டார். இக்கவிதை முருகின் புலமையைக் காட்டும் கண்ணாடியாய் இலங்குகிறது. அக்கவிதை கண்ணாடியின் பல்வேறு பயன்களையும் எளிய தமிழில் இனிதுற இயம்புகிறது.

''மூக்கி லணிவதுங் கண்ணாடி
முகத்தைப் பார்க்கவுங் கண்ணாடி
காப்பி குடிக்கவுங் கண்ணாடி
கடியாரத் துள்ளதுங் கண்ணாடி
படத்தை மறைக்கவுங் கண்ணாடி
பாங்காய்ச் சீவவுங் கண்ணாடி
நிலையில் வைக்கவுங் கண்ணாடி
நெடுகப் பதிக்கவுங் கண்ணாடி
விளக்கைச் சுற்றியுங் கண்ணாடி
வீட்டுச் சுவற்றிலுங் கண்ணாடி
சாளரம் அமைக்கவுங் கண்ணாடி
தள்ளுங் கதவிலுங் கண்ணாடி
மேசை விரிப்புங் கண்ணாடி
மெதுவாய் வைப்பதுங் கண்ணாடி
ஊடே பார்க்கவுங் கண்ணாடி
உடைந்து போவதுங் கண்ணாடி
மண்ணா லானதுங் கண்ணாடி
மதிக்கப் படுவதுங் கண்ணாடி
எங்கே பார்த்தாலுங் கண்ணாடி
எண்ணில் உலகமே கண்ணாடி'

இக்கவிதை, வடிவத்தில் நீண்டிருந்தாலும் சிறுவர்களுக்கு ஏற்ற எளிய, இனிய கவிதையாக அமைந்துள்ளது.

முருகுவின் மலரும் நினைவுகள்:

தம் எழுத்தார்வத்தைப் பெருக்கிய புலவர் பெருமக்களை முருகு நன்றிப்பெருக்குடன் நினைவுகூர்கிறார். முருகுவின்

மலரும் நினைவுகளைக் கீழே காண்க:

''மற்றும், மூன்று பெரியார்களை நான் குறிப்பிடவேண்டும். புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், பன்மொழிப்புலவர் அப்பாதுரை, கோநகர்ப்புலவர் வித்வான் விசு, திருநாவுக்கரசு ஆகிய மூவரும்என்னுள்ளே தமிழுணர்வு, இலக்கிய ஆர்வம், எழுத்தாற்றல் ஆகியவை வளர்வதற்குப் பெருந்துணைபுரிந்தனர் என்பதனை நன்றியுடன் குறிப்பிடுகிறேன்'

என முருகுவே கூறியுள்ளார்.

இலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் விற்பன்னராக விளங்கியவர் முருகு. தொடக்க காலத்தில் கவிதைத் துறையில் பேரார்வம் காட்டிய முருகு, தம் கவிதைத்துறை ஈடுபாட்டைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு கருத்துரைக்கிறார்.

''கவிதையே எனக்கு மிகவும் பிடித்த இலக்கியவடிவம். ஆரம்பத்தில் எழுத்துத்துறையில்அடியெடுத்துவைத்த நேரத்தில் கவிதைகளையும் நான் எழுதியதுண்டு. பாரதிதாசனையும் பாரதியாரையும் ஈடுபட்டுப் படிக்கத் தொடங்கிய பிறகு என்னுடைய கவிதை ஆக்கத்தில்எனக்குள்ள நம்பிக்கை குறைந்து நான் கவிதை எழுதுவதை நிறுத்திக் கொண்டேன்'

இப்பகுதியிலிருந்து முருகுவின் நேர்மையுள்ளமும், அடக்கமும் தெள்ளிதின் புலனாகின்றன. ஒரு கவிதை எழுதியதும் 'எனக்குப் பாவேந்தரிடம் ஈடுபாடு; நான் அவருடைய பரம்பரைக் கவிஞர்' என்றெல்லாம் கவிஞர்கள் போலிப் புகழ்தேடும் இன்றைய உலகில் முருகுவின் கூற்று,தெரிந்தததைக் கூடத் தெரியாது போலப் பேசும் முருகுவின் தன்னடக்கத்தையன்றோ காட்டுகிறது? அவர் 'ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்' என்பதையல்லவா இப்பகுதி புலப்படுத்துகிறது!

'குமரனும்' கொஞ்சு தமிழ்ப்பணியும்:

சீர்திருத்தச் செம்மலும், பெருந்தமிழறிஞருமான சொ. முருகப்பாவின் பத்திரிகை குமரன். இது காரைக்குடியிலிருந்து வெளிவந்தது. இது வார இதழாக வெளிவந்தது. இவ்விதழில் 1944ஆம் ஆண்டு துணையாசிரியராகவும், நிர்வாகியாகவும் பணியாற்றினார் முருகு. பத்திரிகைத்துறையில் பரந்த அனுபவம்

பெறுதற்கு உறுதிமிக்க அடித்தளத்தை இட்டவன் 'குமரன்' என்பர் முருகு.

பொன்னி'யும் பொங்கிவரு தமிழ்ப்பணியும்:

தமிழ் இதழியல் துறையிலே பொன்னி ஒரு காவியம். தமிழிதழ்களை நடத்தத் தயங்கிய நாற்பதுகளில் பெருந்துணிவோடு 'பொன்னி' என்னும் இலக்கிய இதழைத் தொடங்கினார் முருகு. 1947ஆம் ஆண்டு, விடுதலை பெற்ற இந்தியாவில், தமிழர் திருநாளன்று (பொங்கல்) வெளிவந்தாள் 'பொன்னி'.

பல இளம் எழுத்தாளர்களையும் கவிஞர்களையும் தமிழ் இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்திய பெருமை பொன்னியையே சாரும். பொன்னி முதலில் புதுக்கோட்டையி லிருந்தும், பின்னர்ச் சென்னையிலிருந்தும் வெளிவந்தாள். முதலில் மாதமொருமுறை இலக்கிய நெஞ்சங்களைச் சந்தித்த பொன்னி, பின்னர் மாதமிருமுறை தமிழன்பர்களுக்கு இலக்கிய விருந்தளித்தாள்.

பொன்னி இதழில் தமிழறிஞர்கள் பலரும், சமூகத் தலைவர்களும், புகழ்மிக்க எழுத்தாளர் பலரும் எழுதியுள்ளனர். புதிய எழுத்தாளர்களைப் பொன்னியில் அறிமுகப்படுத்தி அவர்களின் வளர்ச்சிக்குப் பாதை சமைத்தார் முருகு.இவ்வாறு பாரதிதாசன் பரம்பரை என்னும் தொடரில் முருகுவால் பொன்னியில் அறிமுகப்படுத்தப்பட்டோர் எண்ணிக்கை நாற்பதுக்கும் மேலாகும்(நாற்பத்தெட்டு என்பர்).

பின்னாளில் இவர்கள் கவிதையுலகில் பெரும்புகழ் அடைந்தனர்.(பாரதிதாசன் பரம்பரை என்னும் தலைப்புப் பற்றித் தமிழகத்தில் ஆய்வு செய்து ஒருவர் ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெற்றிருக்கிறார் ஈ.வே.ரா).

பெரியார், அறிஞர் அண்ணாதுரை, கலைஞர் கருணாநிதி போன்ற அரசியல் - சமூகத்தலைவர்களும்; பாவேந்தர் பாரதிதாசன், சுப. நாராயணன், இளவழகனார், கா. அப்பாதுரை (பன்மொழிப் புலவர்) என்.வி. நடராசன், க. அன்பழகன், விசு திருநாவுக்கரசு முதலிய தமிழறிஞர்களும் பொன்னியில் எழுதியுள்ளனர். இவர்களின் இலக்கியப்பணி தொடர்வதற்கும்,

பெருகுவதற்கும் பொன்னியே வாய்ப்பளித்தாள். அகிலன், சுகி, இராதாமணாளன், இளமைப்பித்தன், மா. இளஞ்செழியன், நாரணதுரைக்கண்ணன், நாரா. நாச்சியப்பன், கோவை இளஞ்சேரன், கண. இராமநாதன் முதலிய எழுத்தாளர்களும் பொன்னிக்கு மெருகூட்டியுள்ளனர்.

பொன்னியின் இலக்கிய மணம் அகிலனைப் பெருவியப்புக்கு உள்ளாக்கிற்று. சென்னையிலிருந்துகொண்டு இதழைச் சிறப்பாகக் கொண்டு வர இயலா நிலையில், அச்சுவசதிகளோ, சிறந்த ஓவியர்களோ, இதழை வெளிக்கொண்டுவரத் தேவைப்படும் பிற வசதிகளோ இல்லாத புதுக்கோட்டை யிலிருந்து இப்படிப்பட்ட இதழை எவ்வாறு கொண்டுவர இயலுகிறது? என அகிலன் வியப்படைந்துள்ளார். மேலும் பொன்னியின் தனித்தன்மையை வெகுவாகப் பாராட்டியும் உள்ளார்.

''பொன்னியில் நான் கண்ட ஒரு முக்கியமான சிறப்பு அதன் தனித்தன்மை கொண்ட போக்காகும். ஒரு வகைத் தனித்தன்மையின் முத்திரை- stamp of individuality அதில் இருந்தது. சென்னையிலிருந்து வந்த எந்தப் பிரபலமான பத்திரிகையைப் போலவும் அது இல்லை. எதையும் அது பின்பற்றவில்லை. இளம் எழுத்தாளர்கள் சிலரையும் புதிய கவிஞர்கள் சிலரையும் அது துணிந்து அறிமுகம் செய்திருந்தது'

பத்திரிகைகள் வணிகநோக்குடன் வெளிவரும்போது அவை தரத்தில் குறைந்து விடுவது இயல்பு. ஆயின் பொன்னி இலக்கிய இதழாகத் தான் கொண்ட இலக்கினில் ஒரு சிறிதும் பிறழாது இலக்கிய இதழாக – இலட்சிய இதழாகவே (குறிக்கோள் இதழாக) வெற்றி நடையிட்டது.

பொருளாதார நோக்கில் பொன்னி பல நெருக்கடிகளை முருகுவிற்குத் தந்தாள். ஆனால், முருகுவின் இலட்சியப்பிடிப்பு உடும்புப்பிடியாய் அமையவே முருகுவின் போராட்டமே வெற்றியடைந்தது.

இலக்கிய வளர்ச்சி கருதி முருகு அடைந்த சோதனைகள் எல்லாம் அவரைச் சாதனை வீரராகவே மாற்றின. முருகு நடத்திய பொன்னி இதழைத் தமிழகத்தின் கலைமகள் இதழோடு

ஒப்பிட்டும், அதனைவிட உயர்த்தியும் பேசிய எழுத்தாளர்களின் கூற்றுகளே பொன்னிக்குச் சூட்டப்பட்ட புகழ் மாலைகளாகும்.

மலேசியாவில் மணக்கும் தமிழ்ப்பணி:

உலகில் தமிழில் தோன்றிய தாளிகைகளுள் சுதேசமித்திரனை அடுத்துத் தோன்றிய பெருமை கொண்டது 'தமிழ்நேசன்' நாளிதழே! சீர்பெற்ற இந்நாளிதழின் துணை ஆசிரியராகப் (13.7.1953இல்) பணியேற்றார் முருகு. இப்பணி 1954ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வரை நீடித்தது. பின் இவ்வாண்டு நவம்பர் முதல் தமிழ்முரசு நாளிதழில் துணையாசிரியராகப் பணியாற்றினார். தமிழ்முரசில் முருகுவின் தமிழ்ப்பணி ஏறத்தாழ ஏழு ஆண்டுகள் நீடித்தது.

1962ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் தமிழ்நேசனின் தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்று மீண்டும் மலேசியாவுக்கு வந்தார். தமிழ்நேசன் மூலம் மலேசியத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த முருகுவை வானளாவப் புகழினும் வார்த்தைகள் கிடையா. சுருங்கக்கூறின் தலைவனின் அன்பைப் போற்றும் குறுந்தொகைத்(சங்க இலக்கியம்) தலைவி ஒருத்தியின் கூற்றே முருகுவின் மலேசியத் தமிழ் இலக்கியப் பணிக்கும் பொருந்துவதாம்.

''நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே'

மலேசியத் தமிழ் இலக்கியத்துக்கும் முருகுவுக்கும் உள்ள நட்பை விளக்கும் வகையில் குறுந்தொகைப் பாடலின் முதலிரு அடிகளைக் கூறலாம்.

பவுன்பரிசுத்திட்டமும் எழுத்தாளர் தரமும் :

எழுத்தாளர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் வழங்கும் பணியை மலேசியாவில் தமிழ்நேசனிலும் தொடங்கினார். இதன் மூலம் மலேசியாவில் தமிழ் இலக்கியம் வளர்வதற்கு முருகுவே வழிகோலினார். தமிழ்நேசனில் 'பவுன்பரிசுத் திட்டத்தை' அறிமுகப்படுத்தினார். இப்பரிசுத் திட்டம் எழுத்தாளர்களிடையே

ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தியது.மண் மணம் கமழும் மலேசியத் தமிழ்ச் சிறுகதைகள் வெளிவருவதற்கு முற்றிலுமாகத் தம் நல்லாதரவை வழங்கியவர் முருகுவேயாவார். இத்திட்டத்தைப்பற்றிச் சோதனை முயற்சி என்னும் தலைப்பில் பவுன் பரிசுக்கதைகள் என்னும் நூலிற்கு முன்னுரை எழுதியுள்ளார் முருகு.

''தமிழ்நேசன் பவுன்பரிசுச் சிறுகதைத் திட்டம், மலேசிய இலக்கிய முயற்சிகளின் தரத்தைப் பத்தரை மாற்றுத் தரத்திற்கு உயர்த்துகின்ற குறிக்கோளிலேயே தொடங்கப்பட்டது. இந்தக் குறிக்கோளுக்கு நூற்றுக்கு நூறு வெற்றி உடனே கிட்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை.நாளடைவில் நமது சிறுகதைகளின் மதிப்பு மாற்றுக் குறையாத தங்கமாக உயர்ந்து நிற்கும் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உண்டு.

நேசனின் பவுன்பரிசினைப் பெற்றிருக்கும் இந்த 12 முன்னோடிச் சிறுகதைகளும் மலேசியத் தமிழ்ச் சிறுகதைகளின் வளர்ச்சியினை அளவிட்டுக்காட்டும் ஒரு மதிப்பீட்டுத் தொகுப்பாக அமைந்திருப்பதாகவே சொல்லவேண்டும். வளர்ச்சிக்கும் முதிர்ச்சிக்கும் இன்னும் நிறைய இடமிருக்கிறது என்பதையும் நமது எழுத்தாளர்கள் நன்கு உணர்ந்து அந்தத் திசையில் அவர்கள் விடாமுயற்சியுடன் செல்லவேண்டும் என்பதும் எனது விருப்பமாகும்.

இந்தத் தொகுப்பு '' நேசன்'' வெளியிடுகிற முதல் நூலாகும். ஒரு சோதனை முயற்சி என்றும் குறிப்பிடலாம். அதற்கு வாசகர்களிடம் தக்க ஆதரவு கிட்டுமானால் நூல் வெளியீட்டுத் துறையிலும் ''நேசன்'' முனைப்போடு அடியெடுத்து வைக்கமுடியும். முறையாகப் புத்தகம் வாங்கிப்படிக்கிற ஒரு வாசகர்வட்டத்தை இங்கு நாம் உருவாக்க இத்தொகுப்பு பயன்படுமென்று நம்புகிறேன்.''

இந்த முன்னுரையின் வழி மலேசியத் தமிழ் இலக்கியம் வளர்வதற்கான தொலைநோக்குச் சிந்தனையுடன் செய லாற்றினார் என்பதையும், அச்சிந்தனையின் அடிப்படையில்தான் முருகுவின் திட்டங்கள் அமைந்தன என்பதையும் தெளிவாக அறியமுடியும். நேசனின் பவுன்பரிசுத்திட்டம், நேசனின் நூல் வெளியீட்டுத்திட்டம், நேசனின் வாசகர்வட்டத்திட்டம் முதலிய

பன்னோக்குத்திட்டங்களை அவர் மனத்திற்கொண்டு பணியாற்றினார்.

ரெ.கார்த்திகேசுவின் மலரும் நினைவுகள்:

நேசன் பவுன்பரிசுத்திட்டத்தில் ஜுன் 1972 முதல் மே 1973 வரை கலந்துகொண்ட எழுத்தளர்களின் படைப்புக்கள் முருகு தலைமை நீதிபதியாலும், டாக்டர் இரா தண்டாயுதம், ரெ கார்த்திகேசு, டாக்டர் பிரமீளா கணேசன் , எஸ் மூர்த்தி (ஆகஸ்ட் 1972 வரை), எஸ்.ஆர்.எம் பழனியப்பன் (செப்டெம்பர் 1972 முதல்) ஆகிய நீதிபதிகளாலும் தேர்வு செய்யப்பட்டன.

இன்றும் நம்மிடையே வாழும் முனைவர் ரெ கார்த்திகேசு அவர்கள் இப்போட்டிக்கு நீதிபதியாகப் பணியாற்றியது பற்றிய மலரும் நினைவுகளை இந்நூலாசிரியர் முனைவர் எம் எஸ் ஸ்ரீ லக்ஷ்மியுடன் பகிர்ந்துகொண்டார்.

நீதிபதிகளின் வீட்டிலும் , முருகுவின் வீட்டிலும் கதைகளைத் தெரிவுசெய்யும் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டன எனவும், புத்திலக்கிய வளர்ச்சியில் முருகுவுக்கு இருந்த பொறுப்புணர்ச்சியையும் , தலைமை நீதிபதி என்ற முறையில் முருகு அவர்கள் மற்ற நீதிபதிகளின் கருத்துக்களை உள்வாங்கிக்கொண்டு கதைகளை முடிவெடுப்பதில் காட்டிய நிதானத்தையும் மிகவும் பாராட்டிப் பேசினார்.

தாம் நீதிபதியாகப் பணியாற்றிய தருணத்தில் மலேசிய வானொலியில் பணியாற்றியதாகவும், முருகுவுக்கும் தனக்கும் இடையே இருந்த நெருக்கமான தொடர்பு இலக்கியம் சார்ந்து அமைந்தது என்பதையும் குறிப்பிட்டார். அனைத்திற்கும் மேலாகப் பவுன்பரிசுக்கதைகள் என்னும் தொகுப்பு நூலுக்கு அற்புதமான ஆய்வுரை ஒன்றையும் வழங்கியுள்ளார்.

மலேசியத் தமிழ் எழுத்துலகில் சுறுசுறுப்பு காணப்படுவதையும்,இது வரவேற்கத்தக்கது என்பதையும் பாராட்டும் ரெ.கா எழுத்தாளர்களிடையே ஏற்பட்டுள்ள புதிய உத்வேகத்தையும் தட்டிக்கொடுக்கிறார்.

''வெகு காலமாகப் பேனாவை ஓயப் போட்டுவிட்ட நல்ல எழுத்தாளர்கள் மீண்டும் எழுதத் தொடங்கியிருக்கிறார்கள்.புதிய

எழுத்தாளர் தலைமுறை ஒன்றும் தோன்றியுள்ளது.ஏற்கனவே இருந்த எழுத்தாளர்களும் புதிய எழுத்தாளர்களுமாகக் கூடி, எழுத்தாளர் அமைப்புகள்,கருத்தரங்குகள், கருத்துப்பரிமாற்றங்கள், இலக்கியவட்டங்கள் ஆகியவற்றை ஏற்படுத்தி எழுதவேண்டும் – இந்நாட்டு எழுத்துக்களைப் படிக்கவேண்டும் என்ற ஆர்வத்தை ஏற்படுத்தி வருகிறார்கள்.

இதற்கிடையே எழுத்தாளர் ''கிளிக்''குகள் சிலவும் உருவாக்கி வருவதையும் மறுக்கமுடியாது.ஆனால் எழுத்தாளர் இயக்கங்கள் என்ன உருவத்தில் இருந்தாலும் அவை வரவேற்கப்படக் கூடியவையே.இவையனைத்தும் இருந்தால்தான் எழுத்தாளர் உலகம் உயிர்த்துடிப்போடு இருக்கின்றது என்று பொருளாகும்''

எழுபதுகளின் தொடக்கத்தில நேசன் பவுன்பரிசுத்திட்டத்தால் எழுத்தாளர்களிடையே ஏற்பட்டுள்ள வரவேற்கத்தக்க மாற்றங்களைப் பதிவு செய்துள்ளார்.

தமிழ்நேசனின் சேவைக்குப் பாராட்டு:

''எழுத்துலகச் சுறுசுறுப்பிற்குத் தமிழ்நேசன் ஆற்றியுள்ள முக்கியப்பங்கினை எழுத்தாளர்களும் அபிமானிகளும் இந்தக்கட்டத்தில் நினைவு கூர்வது மிகப்பொருத்தம் ''என ரெ.கார்த்திகேசு தம் அணிந்துரையில் கூறியுள்ளார்.

''இந்த நாட்டு எழுத்துலகத்திற்கு பத்திரிகைகள் தாம் உயிர் கொடுக்கும் தெய்வங்களாக இருந்து வந்திருக்கின்றன.எழுத்துலக வளர்ச்சியின் ஒவ்வொரு காலகட்டத்தையும் பத்திரிகைகளே தொடக்கிவைத்துள்ளன என்று கூறுவது தவறாகாது.தமிழ் முரசுவின் ரசனை வகுப்பு , எழுத்தாளர் பேரவை, தமிழ்நேசனின் கதைவகுப்பு ஆகியவை எழுத்தாளர் சமுதாயம் ஒன்றினை இந்நாட்டில் உருவாக்க அடிப்படைகளாக இருந்து வந்துள்ளன.

இந்நாட்டு எழுத்து வரலாற்றினை எழுதும் எவரும் இவற்றை நன்றியோடு நினைவுகூரவேண்டியிருக்கும். அதன்பின் மாணவர் மணிமன்ற மலர் இன்றைக்கு நாம் காணும் எழுத்தாளர்கள் பலரை உருவாக்கப் பெரும் துணைபுரிந்துள்ளது. இந்தப்பட்டியலில் வாராந்திர, மாதாந்திர இதழ்களான மலைமகள், திருமுகம் ,மலைநாடு, நவரசம் போன்ற இன்னும் பல பத்திரிகைகளையும் நாம் சேர்க்கவேண்டும்.''

தொடக்கப்புள்ளி:

பத்திரிகைகளின் பணிகளுக்கு மேலாகத் தமிழ்நேசன் தங்கப்பதக்கப் பரிசளிப்புத் திட்டம் இந்நாட்டு எழுத்தாளர் களிடையே பெரியதொரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தும் தொடக்கப்புள்ளியாக அமைந்துவிட்டது என்பது மறுக்கமுடியா உண்மை என்று ரெ.கார்த்திகேசு கருதுகிறார்.

இத்திட்டத்தால் எழுத்தாளர்களிடையே ஏற்பட்டுள்ள போட்டி மனப்பான்மையைப் பெரிதாக எடுத்துக்கொள்ளாமல் ஆரோக்கியமான போட்டியாக எடுத்துக் கொள்ளவேண்டும் என அறிவுரை கூறும் ரெ.கா இவ்வாறு ஆரோக்கியமான போட்டி இருப்பதால் பல எழுத்துக்கள் நமக்குக் கிடைக்கின்றன என்ற உண்மையைச் சுட்டத்தவறவில்லை. அதற்கும் மேலாக ஐந்து திறனாய்வாளர்களின் கடுமையான சோதனைகளுக்கு உள்ளாக்கப் பட்டு அதன்பின் இந்தக் கதைகள் தேர்ந்தெடுக்கப்படுவதால் அந்தக் கதை நல்ல கதை என்ற முத்திரையைப் பெற்றதாகின்றது எனக் குறிப்பிடுவதிலிருந்து போட்டிக் கதைகளைத் தேர்வு செய்வதில் கையாளப்பட்ட நேர்மையான அணுகுமுறைகளையும் ,கதைகளின் தரத்தைக்கட்டிக்காப்பதில் நீதிபதிகளுக்கு இருந்த பொறுப்புணர்ச்சியையும் அறிய முடிகின்றது.

இன்று போட்டிகளுக்கு நீதிபதிகளாக இருப்பவர்கள் தங்களுக்கு விருப்பமானவர்களுக்குத் தகுதியை ஓரங்கட்டிவிட்டு, நடுவுநிலையின்றி, ஒருதலைப்பட்சமாகச் செயல்பட்டுப் பரிசுகள் வழங்கும் சூழலில் நேர்மையாகவும் இலக்கிய வளர்ச்சியைக் கருத்தில்கொண்டும் செயல்பட வேண்டியதன் அவசியத்தையும் பவுன் பரிசுத்திட்ட நீதிபதிகள் உணர்த்தியுள்ளனர்.

திறனாய்வுகள் பரிசு பெற்ற எழுத்தாளர்க்கும், பரிசு பெறத் தவறிய எழுத்தாளர்க்கும் நல்ல வழிகாட்டியாகின்றன என்பது மறுக்கமுடியா உண்மையாகும். ஆனால் இன்று பாராட்டுமுறைத் திறனாய்வையே எதிர்பார்க்கும் பெரும்பான்மையான எழுத்தாளர்கள் மத்தியில் பவுன்பரிசுத் திட்டத்தின் நீதிபதிகள் எவ்வளவு கடுமையான அணுகுமுறையை - பார்வையைக் கையாண்டிருந்தனர் என்பதை நினைவில் கொண்டால் தங்களை வளர்த்துக்கொள்ளமுடியும் என்பதையும் பவுன்பரிசுத்திட்ட நீதிபதிகள் உணர்த்துகின்றனர். முருகுவின் இலக்கிய

நேர்மையையும், இலக்கிய அறத்தினையும் மற்ற நீதிபதிகளும் பின்பற்றி இன்றளவும் இலக்கிய வரலாற்றில் இடம்பெறுகின்றனர்.

மலேசிய நாட்டு எழுத்தின் தரத்தினை உயர்த்துவதற்கு ஒரு 'சக்கர இயக்கமாக' எழுந்ததே இந்தப்பவுன் பரிசுத்திட்டம். இத்திட்டத்தின் தொடர்ச்சியாக மலேசியத்தமிழ் எழுத்தாளர் சங்கம் நடத்துகின்ற மாதந்திர சிறந்த சிறுகதைத் தேர்வும் மலேசியத்தமிழ் எழுத்தாளர்களிடையே பெரும் உற்சாகத்தைத் தந்துள்ளது என்பதும் ரெ.கா அவர்களின் கருத்தாகும்.

பவுன்பரிசுத்திட்டமும் நேசனின் பெருந்தன்மையும்:

பவுன் பரிசு எழுத்தாளர்களுக்கு நற்சான்று வழங்கும் விழாவையும் விருந்தையும் *07.09.1973* அன்று பிலால் உணவகத்தில் தமிழ்நேசன் நடத்தியது. அப்போது ஆற்றிய உரையில் பவுன் பரிசுத் திட்டத்தின் தொடர்ச்சி பற்றிக் கருத்துரைக்கிறார்.

''பவுன் விலை கிடுகிடுவென்று ஏறி ஏறக்குறையப் பழைய விளையைப்போல் இரண்டு மடங்கு வந்த போதும் கூட, ஒரு பவுனை அரைப்பவுனாகக் குறைக்காமல் தொடர்ந்து எழுத்தாளர்களைக் கவுரவப்படுத்தி வந்துள்ள நேசன் உரிமையாளர் திரு நாகப்பனுக்கும் எங்கள் மாதாந்திர நீதிபதிகள் கூட்டத்தில் அடிக்கடி கலந்துகொண்டு சில சமயங்களில் சமரசம் செய்து வைப்பவராக விளங்கி வந்த்துள்ள நிர்வாகி புலவர் சேதுராமன் அவர்களுக்கும் , பத்திரிகையின் ஆசிரியராக இருந்தும், ஒரு முறை கூடத் தமது கருத்தை சர்வாதிகாரமாகத் தொடர்ந்து திணிக்க முனையாதவரும், எழுத்தாளர் இயக்கங்களுக்குத் தொடர்ந்து துணையாக இருப்பவரும் உண்மை எழுத்தினையும், உண்மை நோக்கங்களையும், அடையாளம் கண்டு மதித்துப் போற்றுபவருமான திரு.முருகு சுப்பிரமணியன் அவர்களுக்கும், நீதிபதிகளின் சார்பில் நன்றியையும் பாராட்டையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

பவுன்பரிசுத்திட்டமே ஒரு காலத்தில் நிறுத்தப்பட நேர்ந்தாலும் கூட ,வேறு ஏதாகிலும் ஓர் உருவத்தில் பொன்விழாக் கண்ட தமிழ் நேசன் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் பணியை ஆற்றிக்கொண்டிருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்''

என்ற விண்ணப்பத்தினையும் முன்வைத்தார். இந்த உரையில் எழுத்தாளர்களின் கடமை, அவர்கள் கையாளவேண்டிய பிரச்னைகள், திறனாய்வுகள், திறனாய்வாளர்களின் கடமை, சமுதாயப்பார்வை போன்ற விஷயங்களைப்பற்றியும் மிக விரிவாகக் குறிப்பிட்டுள்ளார் ரெ,கார்த்திகேசு.

இந்தப்பவுன்பரிசுத்திட்டம் இருமுறை சிறுகதைக்கும்,ஒரு முறை கவிதைக்கும் என நடத்தப்பட்டுப் பின் நின்றுபோனது. இவ்வாறு நிறுத்தப்பட்டதற்குத் தங்கத்தின் விலை உயர்வும், தமிழ்நேசன் நிர்வாகத்தின் முடிவும் காரணமாக இருக்கலாம் என எண்ணவேண்டியுள்ளது.

தமிழ்நேசன் பவுன் பரிசுத்திட்டத்தில் பவுன் பரிசு பெற்றவர்களின் சிறுகதைகள் தொகுக்கப்பட்டு பவுன்பரிசுக் கதைகள் என்னும் நூலாகத் தமிழ் நேசனால் வெளியிடப்பட்டது. தமிழ்நேசனின் இலக்கியப்பணியை ஆவணப்படுத்தும் இந்த அரிய முயற்சியை மேற்கொண்ட முருகுவைப் பாராட்டுவதற்கு வார்த்தைகளே இல்லை. இத்தொகுப்பில் இடம்பெற்ற கதைகளையும் அவற்றை எழுதியோரையும் கீழே காண்க:

- பாசத்தின் பரிசு – சி.அன்பானந்தம்
- ஒரு நிர்வாணமான மனம் – அரு.சு.ஜீவானந்தம்
- சத்து ரிங்கிட் – பாரி (இராம வீரசிங்கம்)
- அட்டைகள் – மு. அன்புச்செல்வன்
- இருபத்தைந்து ஆண்டுகள் – இராம கண்ணபிரான் (சிங்கப்பூர்)
- தெருப்புழுதி – எம் ஏ. இளஞ்செல்வன்
- ஒன்றில் மூன்று – ஆர். சண்முகம்
- இந்த வயதில் – குமாரி இ தெய்வானை
- நேர்கோடுகள் – தேவகி மணாளன் (சாமி மூர்த்தி).
- ஓடும் பிள்ளை – சா.ஆ. அன்பானந்தன்
- இங்கேயும் ஒரு கங்கை – பாவை
- அக்கா அழறாள் – சீ. முத்துசாமி

இரண்டாம் முறை பவுன் பரிசு பெற்றவர்களில் ந. மகேசுவரியும் அடங்குவார்.பாவை மூன்று முறை பவுன் பரிசு பெற்றிருக்கிறார்.இரண்டு முறை முருகு பத்திரிகை ஆசிரியராக இருந்தபோது பவுன் பரிசு பெற்றிருக்கிறார்.மூன்றாம் முறை முருகுவின் இறப்புக்குப்பின் பரிசு பெற்றார். சுந்தராம்பாள் போன்ற எழுத்தாளர்களும் அடையாளம் காணப்படப் பவுன்பரிசுத் திட்டம் காரணமாகும்.

முருகு அவர்கள் புதிய எழுத்தாளர்களையும், புதுவித எழுத்துக்களையும் அறிமுகப்படுத்தினார். '' இலக்கிய ஏரியில் புதிய ஊற்றுக்கள் பெருகவேண்டும் என்றும், புதிய ஊற்றுக்களிலிருந்து புதிய நீர் பெருகாவிட்டால் அது சேறாகிக் குழம்பிக் குட்டையாகிவிடும்''என்று ரெ,கா கூறியது போன்று புதிய எழுத்தாளர்களை வரவேற்க ஆவலுடன் காத்திருந்த முருகு மலேசிய இலக்கிய நீரோட்டம் வறண்டுவிடாமல் வளப்படுத்திக் காத்தவர் ஆவார்.

பவுன்பரிசுக்கதைகளின் கருப்பொருள்:

தமிழ்ச் சமுதாயம் விழிப்புணர்ச்சியைப் பெறவேண்டும் என்ற நன்னோக்கில் சமுதாயப் பிரச்னைகளைக் கருவாகக் கொண்டு கதைகள் படைப்பதை ஊக்குவித்தார். மலேசியத் தோட்டப்புறங்களில் வாழும் மக்களில் பெரும்பாலோர் உழைத்துப் பெறும் பொருளை ஒழுங்காகப் பேணிச் சேமித்து வைக்காததனால் நிரந்தரக் கடனாளியாக வாழ்ந்து வருகின்றனர்.

இச்சிக்கல் முருகு காலத்தில் இன்னும் தீவிரமடைந்திருந்தது. மது அருந்துதல், குழந்தைகளின் கல்வி பற்றியோ, எதிர்காலம் பற்றியோ திட்டமிட்டு வாழாமை ஆகிய பிரச்னைகள் இவர்களிடம் குடி கொண்டிருந்தன.

இந்நிலையை மாற்றிப் புதிய எழுச்சியை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் பவுன் பரிசுக் கதைகள் அமைந்தன.

கவிதைக்கும் பவுன் பரிசுத் திட்டம் :

சிறுகதையைப் போல் கவிதைக்கும் பவுன் பரிசுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இப்போட்டியில் யோகேந்திரன், கரு.வேலுசாமி, ஆதம்குமார், எல்லோன்,கன்னல்கவி கரீம்,

வீரமான், காரைக்கிழார், சோமசன்மா, கரு திருவரசு, எஸ் கே வடிவேலு, சங்குசண்முகம் முதலியோர் பரிசுபெற்றனர்

முருகுவின் இலக்கியப்பணி : அகிலனின் மதிப்பீட்டில்:

மலேசியத் தமிழ்ச் சமுதாயத்தின் விடிவுக்கும், இலக்கியங்களுக்கும் உள்ள தொடர்பைச் சுட்டிக்காட்டி, முருகுவின் இலக்கியப் பணி எவ்வாறு அமைந்தது என மதிப்பிடும் அகிலன் கீழ்க்கண்டவாறு கருத்துரைப்பர்.

''இவர்களுக்கெல்லாம் (மலேசியத் தமிழ்ச் சமுதாயத்தினருக்கு) புறவாழ்க்கைச் சட்டங்கள் மட்டிலுமே துணைபுரிய மாட்டா. மனிதனின் அகம் வளர்ந்தாகவேண்டும். அறிவிலும், பண்பாட்டிலும் நம்மவர் சிறந்து விளங்க வேண்டும். அந்தச் சிறப்பைத்தருவதில் மொழிக்கும் இலக்கியத்துக்கும் பெரும்பங்கு உண்டு.

ஆகவேதான் மொழிக்கும் இலக்கியத்துக்கும் உழைப்பவர்களை நாம் போற்றுகிறோம். இலக்கியப் புரவலராக ஒரு கால்நூற்றாண்டுக் காலத்துக்குமேல் இடைவிடாது உழைத்து வருபவர் முருகு. அவர் நம் பாராட்டுதலுக்கு உரியவர் '

மலேசியத் தமிழ் எழுத்தாளர் கழகத்தலைவராய்ப் பணியாற்றிய வேளையில் பேராசிரியர் க.அன்பழகன்(தி.மு.க)சிறப்புப் பேச்சாளராக வரவழைக்கப்பட்டார்.பெருங்கூட்டம் கூடியது. தம் உரையில் அவர் முருகுவைப் பெரிதும் பாராட்டினார். தம்மைத் தமிழின் பாலும், பாரதிதாசன் பாலும் ஈர்த்தவர் முருகுவே ஆவார். இவ்வாறு தமிழகத்தலைவர்களும் போற்றும் வண்ணம் தமிழ்ப்பணி புரிந்த தகைமையாளர் அவர்.

எழுத்தாளர் சங்கத் தலைவராக முருகு:

எழுத்தாளர் சங்கத்தின் தலைவராகப் பல ஆண்டுகள் சேவை செய்த முருகு உண்மையான இலக்கியவளர்ச்சியைக் கருத்தில் கொண்டு பல நல்ல செயல்திட்டங்களை நடத்தினார். நூல் வெளியீடு, கருத்தரங்குகள் முதலியவை முருகுவின் ஆக்ககரமான இலக்கியச் சேவைக்குச் சான்றாவன.

எழுத்தாளர் சங்கத்தின் மூலமாகத் திரு. ரெ. கார்த்திகேசு அவர்கள் அகிலனை மலேசியாவுக்கு அழைக்க முழு முயற்சிகள்

எடுத்துக்கொண்டபோது அம்முயற்சிக்குப் பேராதரவு நல்கினார் முருகு. இந்நிகழ்ச்சியின் மூலம் இலக்கிய வளர்ச்சிக்கு உழைப்பவர்களுக்குத் தோள்கொடுத்துத் துணை அளிக்கும் உயர்ந்த உள்ளமுடையார் முருகு என்பதனை அறியலாம். இந்நாட்டு எழுத்தாளர்களுக்கத் தக்க பயிற்சி பெறுவதற்குரிய வாய்ப்பாக அகிலனின் வருகை அமைந்தது.

மலேசிய எழுத்தாளருடைய படைப்புகளுக்குத் தமிழக அரசு பரிசளித்து அங்கீகாரம் வழங்க வேண்டும் என்னும் வேண்டுகோளை விடுத்தவர் முருகுவேயாவர். இர.ந. வீரப்பன் அவர்களின் 'உலகத் தமிழர்' என்னும் நூலுக்குத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் பரிசு கிடைத்ததை மலேசியத் தமிழ் மக்கள் மறந்திருக்க முடியாது. முருகுவின் கோரிக்கை நிறைவேறியதையன்றோ இச்செயல் காட்டுகிறது?

பத்திரிகை சமுதாயத்தின் குரலாக ஒலிக்கும் சாதனம். இதனை நன்குணர்ந்தவர் முருகு ஆதலின் தமிழ்நேசனைச் சமுதாயத்தின் குரலாக ஒலிக்கச் செய்தார். பத்திரிகைத் துறையினரையும் மக்களையும் இணைத்த பாலமே முருகு!

தமிழ் நேசன் வழியே சமுதாயப்பணி:

பலரும் நினைப்பது போல முருகுவின் சமுதாயப் பணி முதன்முதலில் சிங்கப்பூரில் தொடங்கியது அன்று. தமிழகத்தில் அவர் வாழ்ந்த பொழுது திராவிடக் கழகத்திலும், பின்னர்த் திராவிட முன்னேற்றக் கழகத்திலும் முக்கியப் பொறுப்பேற்றிருந்தார். முருகுவின் முட்டுப்பாடில்லாத சமுதாயப் பணியைப் பாராட்டும் ஆழி அருள்தாசனின் சொற்கள் இவண் நினையத்தக்கவை.

''பேரறிஞர் அண்ணா அவர்களின் பாசறையில் தோற்றமுற்று, பெருந்தலைவர் தமிழவேள்கோ. சாரங்கபாணி அவர்களால் ஏற்றமுற்று, இன்று சமுதாய நல்லுணர்வு கொண்ட தொண்டர்களின் நெஞ்சங்களில் தலைவராய்ப் பரிணமிக்கும் முருகு அவர்கள், வாழும்நாளிலேயே வாழ்த்துப்பெறும் வாய்மைமிக்க விழுமியோர் ஆவார்'

முருகு தமிழகத்தில் தொடங்கிய சமுதாயப்பணி மிகச் சிறிதே. ஆயினும் அவரின் பணி ஏற்றம் பெற்றது கோ. சாவினாற்றான்.

முத்தமிழ் வித்தகரும் முறையோடு இதனை நினைவுகூர்கிறார்.

''தமிழ்முரசு இதழில் துணையாசிரியராக ஏழாண்டு காலம் பணியாற்றியபோது தமிழவேள் தலைமையின்கீழ் பத்திரிகைத் துறையில் முதிர்ந்த அனுபவம் பெற்றதோடு சமுதாயப் பொதுவாழ்விலும் என்னை ஈடுபடுத்திக்கொள்கிற பரந்த வாய்ப்பும் எனக்குக் கிட்டிற்று. சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் வாழ்கின்ற தமிழ்ச்சமுதாயத்தின் பிரச்னைகளையும் மனத்தில் கொள்வதற்குத் தமிழவேள் நல்கிய இந்த வாய்ப்பு எனக்குப் பெரிதும் பயன்பட்டது.

சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரோடு நேருக்கு நேர் பழகுவதற்கும், எண்ணற்ற ஊர்களில் பல்வேறு கூட்டங்களில் பங்குகொள்வதற்கும் இது எனக்கு வாய்ப்பை வழங்கியது'

தமிழவேளின் பொதுவாழ்க்கைப் பயணத்தின் தொடர்ச்சியாக முருகு அவர்களின் பணியைக் கூறுவது பொருத்தமாக அமையும்.

அநீதி கண்டு அடர்த்தெழும் உள்ளம் படைத்தவர் முருகு. சுயநலமின்றி - ஒருதலைப்பட்சமின்றி நீதி தெரிவிப்பதிலும், நீதிக்குக் குரல் கொடுப்பதிலும் முன்னிற்பவர் முருகுவேயாவார்.

மலேசியத் திருநாட்டின் பெரிய இயக்கங்களான மலேசியன் இந்திய காங்கிரஸ் (ம.இ.கா), தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கம், தேசிய நிலநிதிக் கூட்டுறவு சங்கம், தமிழ் இளைஞர் மணிமன்றப் பேரவை ஆகிய முக்கிய அமைப்புகளுக்கும் முருகுவின் சமுதாயச் சிந்தனை பக்கபலமாகப் பயன்பட்டுள்ளது.

முருகு தமிழ்நேசன் மூலமாகத் திரட்டிக் கொடுத்துள்ள நிதிகள் மலைக்கத்தக்கவை! சிங்கப்பூர் ஜெகதாம்பாள் நிதி, செல்வி கிருஷ்ணவேணி நிதி, சனநாயகக் காப்பு நிதி எனப் பல நிதிகளைத் தமிழ்நேசன் மூலமாகத் திரட்டித் தமிழ்ச் சமுதாயத்துக்கும், அரசிற்கும் உதவியதை யாரும் மறக்க முடியாது.

முருகு கணக்கிலடங்காப் பொதுநிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சமுதாயப் பணியைச் செவ்வனே செய்துள்ளார். தமிழர் திருநாள் கூட்டங்கள், தலைவர்களின் பிறந்தநாள் கூட்டங்கள், கருத்தரங்குகள், கவியரங்குகள் ஆகியவை சமுதாயப் பணியின் களங்களாக முருகுவுக்கு அமைந்தன.

சமுதாயப் பணியின் சிகரம்:

தமிழர் நலத்தில் - தமிழர் நல்வாழ்வில் என்றென்றும் அக்கறை காட்டியவர் முருகு. தமிழினத்தின் கல்வி வளர்ச்சியில் அவர் அதிகக் கவனம் செலுத்தினார். இதற்குக் கட்டியம் கூறுவது 'தமிழ்ப்பள்ளி மாணவர் கல்வி நிதி' ஒரு கோடி வெள்ளி நிதி திரட்டத் திட்டமிட்டார் முருகு. தமிழ்நேசன் பத்திரிகையிலிருந்து விலகிய முருகு தம் சமுதாய உணர்வு, சமுதாய அக்கறை, சமுதாயச்சிநதனை ஆகியவற்றின் வெளிப்பாடாக '' புதிய சமுதாயம்'' என்னும் பத்திர்கியை ஆரம்பித்தார்.

சிங்கையில் சீர்மிகு தமிழ்ப்பணி:

குமரன் இதழில் 'வெண்பாப் போட்டி' என்றோர் அங்கத்தைத் தொடங்கிக் கவிஞர்களிடையே புத்தெழுச்சியைக் கொணர்ந்தது போன்றே தமிழ் முரசு இதழிலும் வெண்பாப் போட்டியை நடத்தினார். இப்போட்டியை மிகவும் போற்றிப் பாராட்டியுள்ளார் கண்ணதாசன். அப்பாராட்டுரை தென்றல் இதழில் கீழ்க்காணுமாறு இடம்பெற்றுள்ளது.

''வெண்பாப்போட்டி என்னும் ஒரு முறையைப் பிறப்பித்ததற்கான முழு உரிமையையும் நாங்கள் பெற முடியாது. அதை ஆரம்பித்துச் சிறிய அளவில் செய்துகொண்டிருந்த ஒருவரைத்தான் அது சாரும்..... சுமார்ர் பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்பு *(1945)* காரைக்குடியிலிருந்து, மறைந்த சீர்திருத்தச்சிற்பி சொ.முருகப்பா அவர்கள் வெளியிட்டு வந்த 'குமரன்' என்னும் இதழில் தோழர் முருகு சுப்பிரமணியம் அவர்களை ஆசிரியராகப் பணியாற்றிய போதுதான் இந்த வெண்பாப்போட்டியை ஆரம்பித்தார்கள்!...

வெண்பாப்போட்டியின் தந்தையான முருகு சுப்பிரமணியம் அவர்களுக்குத் தான் முதன்முதலில் என் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.'' (மலேசியத் தமிழ் இலக்கிய வரலாற்றுக்களஞ்சியம் , பக் *– 139-140)*

எனத் தென்றல் வார இதழில் வெண்பாப் போட்டியை நடத்தி ஆயிரம் வெண்பாக்களைத் தொகுத்து வெளியிட்ட கண்ணதாசன் கூறியுள்ளார். மலேசியாவில் கவிஞர்கள் பல்குவதற்கும் மரபுக்கவிதைப்பயிர் செழித்து வளர்ந்ததற்கும் இப்போட்டியே

காரணம் எனத் துணியலாம். தமிழ் முரசு நாளிதழில் 'கவிதைப் பக்கம்' என்றோர் அங்கமும் மலரும் கவிஞர்களுக்கு வாய்ப்பளித்தது.

புதிய எழுத்தாளர்களுக்கு முருகு என்றுமே ஊக்கம் தந்ததுண்டு. சிங்கையிலும் 'எழுத்தாளர் அறிமுகம்' என்ற பெயரில் பல இளம்-புதிய எழுத்தாளர்களைத் தமிழ்முரசு வாயிலாக அறிமுகப்படுத்தினார். சான்றாக இராம.கண்ணபிரான், வலயன்வயல் முத்து, எம் கே நாராயணன் போன்றோர் முருகுவால் அறிமுகப்படுத்தப்பட்டவர்கள் ஆவர். இவ்வறிமுகத்தால் எழுத்தாளர் பலர் நற்பலன் அடைந்தனர்.

நல்ல தமிழில் நாட்டம்:

ரேடியோ, கலாச்சாரம் ஆகிய பிறமொழிச் சொற்களை ரசிகமணி டி.கே.சி. அவர்கள் வானொலி, பண்பாடு என அழகு தமிழில் மொழிபெயர்த்தார். இதனைத் தமிழகத்துத் தமிழறிஞர்கள் பலரும் அறிவர். இச்சொற்களை மலேசிய,சிங்கைத் தமிழர்கள் அறியுமாறு தமிழ்முரசில் முருகு பயன்படுத்தினார். 'ரேடியோ நிகழ்ச்சி' என்னும் பகுதி முருகுவின் வருகைக்குப் பின் 'வானொலி நிகழ்ச்சி' என்று எளிய, இனிய தமிழில் அச்சானது.

நுவலரும் நூலாசிரியர் முருகு:

முருகு நல்ல எழுத்தாற்றல் உடையவர் என்பதனாலன்றோ பத்திரிகைப் பொறுப்புகள் தாமாக அவரைத் தேடி, நாடி வந்தன? பத்திரிகை ஆசிரியராக விளங்கியதுடன் அன்றி முருகு அவர்கள் தேர்ந்த நூலாசிரியராகவும் விளங்கினார். நீதிவெண்பாவின் நெறிமுறைகள், தமிழ்கூறு நல்லுலகம் ஆகிய இரு நூல்கள் மட்டுமே வெளிவந்துள்ளதாக அறிகிறோம். இவை இன்றளவும் கிட்டில.

'நீதிவெண்பாவின் நெறிமுறைகள்' என்னும் நூல் நீதிவெண்பா என்னும் அற இலக்கியம் பற்றிய கட்டுரைகளின் தொகுப்பாகும். சிங்கப்பூர் வானொலியின் பள்ளிக்கூட ஒலிபரப்பில் நீதி இலக்கியம் பற்றிய கட்டுரைகளைத் தொடர்ச்சியாகப் படைத்தார் முருகு. இக்கட்டுரைகள் தமிழ் முரசிலும் தமிழகத்தில் கண்ணதாசன் நடத்திய 'தென்றல்' இதழிலும் வெளிவந்தது தென்றலாக இன்பம் பயந்தன.

சென்னையில் *1968*இல் நடந்த இரண்டாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டினைப் பற்றி எழுதிய கட்டுரைகள் 'தமிழ்கூறு நல்லுலகம்' என்னும் பெயரில் நூலாக வெளிவந்துள. முருகு இருபதுக்கும் மேற்பட்ட நூல்கள் எழுதியிருப்பதாகப் பரிதாமணாளன் குறிப்பிட்டுள்ளார் (முருகுவின் வாழ்க்கைக் குறிப்பு, முருகு நினவு மலர்). ஆயின் அவை முறையாகப் பேணப்படாததால் இன்று கிடைக்கவில்லை. திரு சை பீர்முகமது அவர்களுடன் நடத்தப்பட்ட நேர்காணலில் சிங்கப்பூர் வானொலியில் 'நற்றிணைக் காட்சிகள்' என்னும் பொருளில் முருகு தாம் ஆற்றிய சொற்பொழிவுகளின் தொகுப்பாக ஒரு நூலை வெளியிட்டிருந்தார் என்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

கன்னற்கட்டுரையாளர் முருகு:

முருகுவின் கட்டுரையாற்றலுக்கு '' மலைநாடு கண்ட தமிழ் முனிவர் '' என்னும் கட்டுரையே சிறந்த சான்றாகும். இக்கட்டுரையில் தமிழவேள் கோ சாரங்கபாணியின் பன்முக ஆளுமைகளையும் அன்னார்தம் உயரிய பண்புகளையும் தெளிவாகவும் அழகாகவும் எழுதியுள்ளார் முருகு.

பொதுப்பணியில் ஈடுபடுவோர் முனிவரைப் போன்ற மனநிலையோடு விருப்புவெறுப்பின்றிச் செயல்படவேண்டும் என்பதையும் அத்தகைய மனநிலையோடுதான் கோ.சா. சமுதாயப்பணி செய்தார் என்பதையும் உணர்த்தியுள்ளார். தமிழ்முரசு நாளிதழில் ''தமிழரின் அடிப்படைக் குறைகள்' என்னும் தலைப்புடைய முருகுவின் கட்டுரை ஞாயிறு முரசில் வெளிவந்தது. தமிழ்ச் சமுதாயத்தினரின் குறைகளைத் துணிவுடன் சுட்டிக்காட்டி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினார் முருகு.

பத்திரிகை ஆசிரியர் என்னும் முறையில் முருகு பல துறை சார்ந்த கட்டுரைகளை எழுதியுள்ளார். அவற்றிலும் தமிழ்ச்சமுதாயத்தின் மீது அவர் கொண்டிருந்த அக்கறை எதிரொலிக்கிறது. சான்றாகப் புதிய சமுதாயத்தில் ''பற்றாக்குறைப் பல்லவிக்கு முற்றுப்புள்ளி வையுங்கள்'' *(10.08.1977)* என்னும் தலைப்பில் தமிழ்ச்சமுதாயம் நிதிநிலையில் முன்னேற ஆலோசனைகளை வழங்கியுள்ளார். முருகு சொல்வீரர் அல்லர்; செயல் வீரர். தாம் சிக்கனமாக வாழ்ந்ததோடு சமுதாயமும்

சிக்கனமாக வாழவும் ,பணப் பற்றாக்குறையைச் சமாளிக்கவும் அவர் அறிவுரை கூறுவது உண்டு என்பதை அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் நன்கு அறிவர். அவர் எவ்வளவு சிக்கனக்காரர் என்பதை சை பீர் தம் பேட்டியில் தெரிவித்திருந்தார்.

பயண இலக்கியத் துறை மலையகத்தில் செழித்து வளர்ந்திட ஆக்கங்கொடுத்தவர் முருகு. அவர் பத்திரிகையாளர் என்ற முறையில் அரசுப் பயணங்கள் பலவற்றிலும் பங்குகொண்டவர்.

''சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்'

என்பது பாரதியாரின் வேண்டுகோள். இதற்குச் செயலுருவம் கொடுத்தவர் முருகு ஆவார். இவர் சென்று வந்த நாடுகள் பல. சீனா, ரசியா, பிரிட்டன், தைவான், சுவிட்சர்லாந்து, இத்தாலி, சப்பான், கம்போடியா, வியட்னாம், இந்தோனேசியா, அல்சீரியா, எகிப்து முதலான நாடுகளுக்குச் சென்றுள்ளார் முருகு. இந்நாடுகளில் இவர் பெற்ற அனுபவங்களைத் தம் பயணக் கட்டுரைகளின் வழியே தமிழ்ச் சமுதாயத்தினருடன் பகிர்ந்து கொண்டுள்ளார்.

பேரரசர் தம்பதிகளுடன் சப்பானுக்கும், பிரதமர் துன்ரசாக் அவர்களுடன் சீனாவிற்கும் சென்று வந்துள்ளார் முருகு. இது தமிழ்ப் பத்திரிகைத்துறைக்கும் - மலேசியா வாழ் தமிழ்ச் சமுதாயத்தினருக்கும் ஏற்றந்தரும் நிகழ்ச்சியெனில் மிகையன்று.

முருகு அவர்களின் எண்ணற்ற கட்டுரைகள் நூலுருப் பெறாமல் உள்ளன. தமிழுணர்வு மிக்க மொழி அமைப்புகள், சமூக அமைப்புகள் அல்லது பதிப்பகத்தார் முருகுவின் கட்டுரைகளை நூலுருவாக்க வேண்டும். இச்செயலொன்றே முருகுவின் இலக்கியச் சேவைக்கு மலேசியத் தமிழர்கள் செய்யும் கைம்மாறாகும்.

நூற்கொடை வழங்கிய நுண்ணறிவாளர்:

முருகுவின் பெயரால் இயங்கும் நூலகங்களும் மலேசியாவில் உள்ளன. பல அரிய நூல்களை முருகு இந்நூலகங்களுக்கு வழங்கியுள்ளார். தமிழ்ச் சமுதாயத்தின் கல்வி மேம்பாட்டில் கருத்தூன்றிய முருகு, தொட்டனைத்தூறும் மணற்கேணி போல

அறிவு ஊற்றெடுப்பதற்காக வழங்கிய நூற்கொடை சீரிய கல்விப்பணியன்றோ? இந்தோனேசியாவில் மேடான் என்னுமிடத்தில் 'முருகு சுப்பிரமணியன் நூலகம்' பல ஆண்டுகளாக இயங்கி வருகிறது. கோலாலம்பூரில் கம்போங் பிரம்பாங் என்னும் இடத்தில் 'முருகு நூலகம்' 1976ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தமிழகத்தில் வாழ்ந்த போது முருகு அவர்கள் இளம் பருவத்தில் பழநியாண்டவர் வாசகசாலை நடத்தியதனை நினைவுகூர்வர் வித்வான் விசு. திருநாவுக்கரசு.

முருகு ×படைப்பிலக்கியம் தந்தவர்:

முருகு அவர்கள் நல்ல படைப்பிலக்கியவாதியும் ஆவார். அவரிடம் புதிய தேடலும், பன்முகபட்ட ஞானமும் அமைந்திருந்தன.அவர் எழுத்தாற்றல் வல்லவர் என்பது பத்திரிகைத் துறையில் அவர் நிகழ்த்திய சாதனைகளின் வழி அறிய வரும். அவர் சோர்விலாச் சொல்லாற்றல் உடையவர் என்பது அவர் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய கருத்தரங்குகள், ஆய்வரங்குகள், தமிழர் திருநாள் கூட்டங்கள் ஆகியவற்றின் வழி அறிய வரும். முருகுவின் படைப்பாற்றலை அவர் எழுதிய சிறுகதைகளும், நாடகங்களும் செவ்விதின் புலப்படுத்தும். சின்னப்பயல் போன்ற சிறுகதைகளும், மலேசிய வானொலியில் ஒலிபரப்பான நாடகங்களும் முருகுவின் படைப்புத்திறனை வெளியிடுவனவாம்.

''தனையீன்ற சமுதாயத்தின் தரத்தினை உயர்த்தவேண்டி
நினைப்பெல்லாம் தேக்கி யிந்த நெடும்புவி
நிலைகளைல்லாம் முனைப்புற்றுத் தீட்டிக் காட்டி
முன்னேற்றப் பாதைபோட்டுத் தனையதற்
கர்ப்பணிக்கும் தமிழெழுத்தாளன் நண்பன்'

எனத் தம் எழுத்தாள நண்பர்கள் இன்னார் என்பதை இனங்காட்டுவர் பாவாணர் ஐ. உலகநாதன். இவர் எழுத்தாளர்களுக்குக் கூறியுள்ள இலக்கணங்களையெல்லாம் நாம் முருகுவிடம் காணலாம்.

முருகுவின் சிறுகதைகள்:

முன்னர்க் குறிப்பிட்டது போன்று முருகுசுப்பிரமணியன் என்னும் பெயரில் தான் சிறுகதைகள் எழுதியுள்ளார்.(முருகு

என்னும் பெயரில் தமிழ்முரசில் வெளிவந்த கதைகள் அ.முருகையன் என்பவரால் எழுதப்பட்டவை என்பது முன்னர்க் கூறப்பட்டது.)இந்நூலாசிரியருக்குக் கிடைப்பவை நான்கு சிறுகதைகள் மட்டுமே. அவை தமிழ்முரசில் வெளிவந்தவை. அவற்றையும், அவற்றைப்பற்றிய ஆய்வையும் அடுத்த பகுதியில் காணலாம்.

சிறுகதையின் ஆர்வநிலையைத் தூண்டும் வகையில் அமைந்த பகுதியைத் தெரிவுசெய்து கட்டம்கட்டிப் பதிப்பித்திருந்தது தமிழ்முரசு.

சிறுகதை - 1

23.10.1955 இல் வெளிவந்தது. ஆபரேஷன் முடிந்தது. குழந்தையை படுக்கையிலேயே கொண்டுவந்து போட்டார்கள். அவன் பேசவில்லை. கண் மூடியிருந்தது. அவனுக்குத் தன் நினைவே இல்லை.

அன்னையின் சோகம்

அவள் தன் ஒரே புதல்வனைப் பறிகொடுத்தாள். தீராத வயிற்றுவலி 'பழையகதை' ஆயிற்று. தன் மகன் பிழைப்பான் என்று அவள் கொண்டிருந்த நம்பிக்கையிலும் மண் விழுந்தது. தங்கம்மாள் குழந்தையை இழந்த கதை துன்பம் நிறைந்தது.

'குழந்தை' தங்கம்மாவின் செல்வப் புதல்வன். அவன் பிறந்த நற்செய்தியைக் கேட்கும் பேறு கூட அவன் தந்தைக்குக் கிட்டவில்லை. 'தந்தைக்கு எமனாகப் பிறந்தான்' என்று குழந்தையைக் குறை கூறியவர்களும் உண்டு.

கணவனை இளமையிலேயே இழந்த தங்கம்மாள் வேறு போக்கில்லாததால் தன் எண்ணம், செயல், ஈடுபாடு அனைத்தையும் குழந்தையை வளர்ப்பதிலேயே செலுத்தினாள். குழந்தை சிறுவயதிலேயே பிடிவாதக்காரன் என்று பெயர் வாங்கிவிட்டான். அவன் நினைத்ததை முடித்தே தீருவான். அவன் நினையாத காரியங்களும் அவற்றோடு நிறைவேறி விடுவதுண்டு. அவ்வளவு செல்லமாக வளர்ந்தான் குழந்தை.

ஊராரின் பிள்ளை அவன். அண்டைவீட்டுக்காரர்கள் அவனைத் தம் வீட்டிலேயே வைத்திருக்க ஆசைப்படுவர். அடுத்ததெரு உறவினரும் இவ்விருப்பங்கொண்டு அடிக்கடி குழந்தையைத் தூக்கிச் சென்றுவிடுவர்.

இப்படி மற்றவர்கள் குழந்தையை நாளெல்லாம் எடுத்துச் சென்றுவிடுகிறார்களே, சேர்ந்தாற்போல் ஒரு மணி நேரம் கூடத் தான் அவனை வைத்துக்கொள்ள முடிவதில்லையே என்று

தங்கம்மாள் கவலைப்படுவாள். ''நல்ல பிள்ளையைப் பெற்றால் நிலைமை இதுதான்'' என்று அவளே மனஅமைதி பெறுவாள்.

தங்கம்மாள் குழந்தையை நன்கு படிக்கவைத்தாள். அவனே எல்லாமென்று கருதி வாழ்ந்தாள். அவன் நன்கு படித்தான். பள்ளி இறுதி வகுப்பை முடித்துப் பல்கலைக்கழகப் படிப்புக்கும் செல்லவிருந்தான். அச்சமயம்தான் தீராத வயிற்றுவலி அவனைத் தீண்டியது.

சிறுபிள்ளையிலேயே அடிக்கடி 'வயிறு வலிக்குதம்மா' என்பான். தங்கம்மாள் நல்லெண்ணையை வயிற்றில் தடவுவாள். வலி தீர்வது போலிருக்கும். ஒரே குதியில் 'குழந்தை' விளையாடச் சென்றுவிடுவான். இப்படியே இருந்த வயிற்றுவலி தொடர்ச்சியாக நாட்கணக்கில் தொடங்கியது. 'குழந்தை' துன்பம் பொறுக்கமாட்டாமல் கதறுவான். அண்டை அயல்வீட்டார்கள் குழந்தை வலி தாங்காது கதறுவதைக் கண்டவர்கள் சொன்ன மருந்தெல்லாம் ஒன்று விடாமல் கொடுத்தாள் தங்கம்மாள்.

இரவுபகலாய் அவன் படும் துன்பத்தைக் கண்டு ஆற்றாதவளாய் இதற்கு முடிவில்லையா? என்று அவள் நைவாள். அவன் விழித்திருக்கும் போதெல்லாம் அவன் அருகிலிருந்து அவன் படும் துன்பத்தைக் கண்டு அவள் மனம் படாத பாடுபட்டது. எப்படியாவது தன் மகன் மீளவேண்டும் என்ற ஏக்கம் அவளை ஒரேயடியாய்ப் பிடித்துக்கொண்டது.

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு மந்திரவாதிகள் சில தந்திரங்களைக் கூறினர். சோதிடர்களும் பரிகாரம் செய்யச் சொன்னார்கள். எல்லாவற்றுக்கும் மாற்றுத் தேடினாள். ஆனால் முடிவு....?

வயிற்றுவலி தீர்வதாக இல்லாமல் 'ஆப்பரேஷன்' செய்தால்தான் நோய் குணமாகும் என்று கொண்டுவந்துவிட்டனர் எல்லோரும். ஆப்பரேஷன் செய்ய அவளுக்கு மனமே இல்லை. அந்தப் பெயரைக் கேட்டாலே அத்தனை பயம் அவளுக்கு.

குழந்தை தினமும் படும் துன்பத்திற்கு எப்படியாவது ஒரு முடிவுகட்ட வேண்டுமென்று எண்ண எண்ண ஆப்பரேஷனுக்குத் தவிர வேறு போக்கில்லை என்பது அவளுக்கு நன்கு புலப்பட்டது. அரைமனத்தோடு ஒப்புக்கொண்டாள்.

ஆஸ்பத்திரிக்கே வந்துவிடவேண்டுமென்று டாக்டர் சொல்லி விட்டார். தாயும் மகனும் ஆஸ்பத்திரிக்கே குடிபோய் விட்டார்கள். டாக்டர் பரிசோதித்துப் பார்த்தார். படம்பிடித்துப் பார்த்தார். 'ஆப்பரேஷன்தான் குணமாக்க ஒரே வழி – வேறு வழியில்லை' என்று முடிவாக அவரும் கூறிவிட்டார். ஒரு வாரத்திற்குப் பிறகு செய்யலாமென்றும் அடுத்து ஐந்தாறு நாளில் வயிற்றுவலி முழுதும் குணமாகிவிடுமென்றும் ஆறுதல் கூறினார் டாக்டர்.

குழந்தை தைரியமாகத்தான் இருந்தான். தினந்தோறும் அவன் படும் துன்பத்திற்கு மேலாகவா அந்த ஒரு நாள் ஆப்பரேஷன் துன்பமாக இருக்கப்போகிறது? இருந்தாலென்ன? பிறகு அத்தனையும் இன்பநாள் தானே என்று அவன் ஆறுதலா யிருந்தான்.

தங்கம்மாளுக்கு அப்படியிருக்க முடியவில்லை. எங்கெங்கிருந்தோ வைத்தியம் பார்த்துக்கொள்ள வந்திருந்தார்கள் பலர் குடும்பம் குடும்பமாக. பக்கத்து அறையிலிருந்தவர்களை மெதுவாக விசாரித்தாள் தங்கம்மாள்.

'நான்கு நாள் முன்புதான் அந்த நான்காவது அறையில் படுத்திருக்கும் பையனுக்கு வயிற்றில் ஆப்பரேஷன் செய்தார்கள். இப்பொழுது குணமாகிவிட்டது. அவன் ஆப்பரேஷன் செய்த மூன்று நாள் வரை பேசவே இல்லை. அந்த மூன்று நாளும் அழுதழுது ஏங்கினார்கள். கடைசியில் நேற்றுத்தான் அவன் கண்திறந்து பார்த்தான். அப்புறம்தான் அவர்கள் மனமும் திறந்தது. நேற்றெல்லாம் அந்த அறையில் கலகலப்பாகவே இல்லை. இப்பொழுதுதான் அவர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள் கிறார்கள். இன்னும் ஒரு வாரம் தங்கிவிட்டுத்தான் ஊருக்குப் போகவேண்டுமென்று டாக்டர் அவர்களிடம் சொல்லிவிட்டாராம்' என்று பக்கத்து வீட்டுக்காரர்கள் தங்கம்மாளிடம் கூறிவைத்தார்கள்.

இதையெல்லாம் கேட்கக் கேட்கத் தங்கம்மாளுக்கு அடி வயிற்றில் தீப்பற்றிய மாதிரி இருந்தது. 'செல்வப்புதல்வன் இந்த ஆபத்துகளிலிருந்து எப்படித் தப்பிக்கப் போகிறான்' என்று ஒவ்வொரு நிமிஷமும் அவள் கவலைப்பட்டுக் கொண்டிருந்தாள்......

ஆப்பரேஷன் செய்துகொண்ட பையனையே கேட்டுவிடு வோமா என்று ஒரு நினைப்பு அவளுக்கு. அங்கே சென்றாள்.....

அந்தப் பையனுக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தாள் ஒரு வயதான அம்மாள்.

அவனிடம் 'வயிற்றுவலி இப்பொழுது தேவலையா அம்மா?' என்று விசாரித்தாள் தங்கம்மாள். 'வாங்கம்மா பிழைக்கக் கிடந்தபாடு பெரும்பாடாய்ப் போச்சு,

இவன் பிழைப்பான் என்று நாங்கள் நினைக்கவே இல்லை. டாக்டர் மட்டும் பயப்படாதீங்க' என்று சொல்லிக்கொண்டே இருந்தார். ஆனால் எங்களுக்கு நம்பிக்கையே இல்லை. எப்படியோ நேற்றுத்தான் கண்ணைத் திறந்து பார்த்தான். எங்களுக்கும் உயிர் வந்தது. நீங்க யாரம்மா? என்றாள் அந்த அம்மாள். தங்கம்மாளுக்கு இந்தச் சோகக்கதையைக் கேட்கக் கேட்கக் கண்ணீர் பெருகிற்று. 'ஏன் அம்மா அழுகிறீர்கள்' என்று வியப்புடன் கேட்டாள் அந்த அம்மாள்.

எனக்கு ஒரே பையன். செல்வமாக வளர்த்தேன். கல்யாணம் பண்ணவேண்டிய வயது. படித்துக் கொண்டிருந்தான். பாழாய்ப்போன வயிற்றுவலி வந்து சேர்ந்தது. பார்க்காத வைத்தியம் பாக்கியில்லை. சாப்பிடாத மருந்து இல்லை. ஆப்பரேஷன் பண்ணித்தான் தீரணும் என்றார்கள். எனக்கு அவன் படும்பாட்டைப் பொறுக்கமுடியாமல் ஒப்புக்கொண்டேன். நாளைக்கு ஆப்பரேஷன் என்று சொல்லிவிட்டுப் போயிருக்கிறார் டாக்டர்' என்று தேம்பிய வண்ணம் கூறினாள் தங்கம்மாள்.

'எல்லாம் சரியாய்ப் போய்விடும். கவலைப்படாதீர்கள் என்று அவள் தேற்றினாள்.

ஆப்பரேஷன் நாள் வந்தது. மகனை அழைத்துக்கொண்டு தங்கம்மாள் ஆப்பரேஷன் ஹாலுக்குப் போனாள். ஒருவருக்குப் பின் ஒருவராக வரிசையாக ஆப்பரேஷன் நடந்தபடி இருந்தது.

குழந்தை என்று கூப்பிட்டார் டாக்டர். அவன் உள்ளே போனான். தாயும் அவனைத் தொடர்ந்தாள் கதவண்டை நின்ற வேலையாள் அவளைத் தடுத்துவிட்டான். அவள் மனம் என்னவோ பாரமாய் இருந்தது. பல்லைக் கடித்துக்கொண்டு வெளியே உட்கார்ந்திருந்தாள்.

ஆப்பரேஷன் முடிந்தது. குழந்தையைப் படுக்கையிலே கொண்டுவந்து போட்டார்கள். அவன் பேசவில்லை. கண்

மூடியிருந்தது. அவனுக்குத் தன் நினைவே இல்லை.

தங்கம்மாள் 'கோ'வென்று கதறிவிட்டாள். டாக்டர் சத்தம் போடக்கூடாதென்று கட்டளையிட்டார். கண்களில் நீர் வடிந்துகொண்டிருக்க அருகிலிருந்து அவனுக்கு விசிறிக் கொண்டிருந்தாள். அவள் அவனை விட்டு அப்புறம் இப்புறம் திரும்பவே இல்லை. 'அருமைக் கண்மணி எப்பொழுது கண்திறப்பான்?' என்று அவன் மேல் வைத்த கண் வாங்காதபடி இருந்தாள்.

மாலை ஆறுமணி ஆயிற்று. அப்பொழுதும் சுயவுணர்வு வரவில்லை. டாக்டர் ஒரு மணிக்கொருமுறை வந்து கவனித்துக் கொண்டே இருந்தார். அழுதபடி அருகிலிருந்த தங்கம்மாளிடம் ஒவ்வொரு தடவையும் 'கவலைப்படாதீங்க; குழந்தைக்குத் தேவலையாய்ப் போகும்' என்று ஆறுதல் சொல்லிச் சென்றார்.

இரவு கரைந்துகொண்டிருந்தது. குழந்தை இன்னும் உணர்வு பெறவில்லை. தங்கம்மாள் தணலில் புழுவாய்த் துடித்தாள். 'என்னைப் பார்த்து ஒரு வார்த்தை பேசமாட்டானா? ஆப்பரேஷன் வேண்டாம் என்றானே! ஊரார் பேச்சைக் கேட்டல்லவா அவனை இங்கு கூட்டிவந்தேன். காலையிலிருந்து பிள்ளை பேச்சு மூச்சில்லாமல் கிடப்பதுண்டா? என்று கதறினாள். தலையில் அடித்துக்கொண்டாள். குழந்தை இதற்கெல்லாம் அசைவதாக இல்லை. அவன் தூங்கிக்கொண்டிருந்தான் கவலை நீங்கியவனாய்.

மறுநாளும் விடிந்தது. காலை ஆறு மணி. டாக்டர் மிகக் கவலையோடு வந்து பார்த்தார். அவர் முகம் வேறுபட்டது; நெற்றியிலே சுருக்கம் தென்பட்டது. தங்கம்மாள் ஆவலோடு டாக்டர் முகத்தைப் பார்த்தாள். டாக்டர் அதுவரை அங்கு நிற்கவில்லை. வேகமாகப் போய்விட்டார்.

''ஐயோ ஒன்றும் சொல்லாமல் போய்விட்டாரே'' என்று அலறினாள் தங்கம்மாள். 'கேஸ் தீர்ந்தது. எடுக்க ஏற்பாடு செய்யுங்கள்' என்று யாரிடமோ நர்ஸ் சொல்வது அவள் காதில் விழுந்தது.

அவ்வளவுதான் குழந்தையைக் கட்டி அணைத்துக் கொண்டாள். 'உன்னைப் பறிகொடுக்கவா இங்கு வந்தேன்?' என்று கதறினாள் – கூவினாள் – கத்தினாள்; வயிற்றிலடித்துக்

கொண்டாள். குழந்தை ஒன்றுக்கும் அசையவில்லை.

அவன் இறந்து போனான்.

ஒரே பிள்ளை இருந்தான் – இறந்தான். தனக்கு எல்லாமுமாய் விளங்கிய அவன் இறந்துவிட்டான் என்பதை நினைக்க நினைக்க அவள் மனம் வெடித்துவிடும் போலிருந்தது.

பக்கத்து அறையிலிருந்தவர்கள் வந்தார்கள்; ஆறுதல் சொன்னார்கள்; போய்விட்டார்கள். ஆஸ்பத்திரி – அங்கு – தங்கம்மாள் படும் துயரத்தில் பங்குபோட்டுக் கொள்ள யாருமே இல்லை.

அவள் தன்னந்தனியே அழுதுகொண்டிருந்தாள். டாக்டர்கள், நர்சுகள் ஒருவருக்கொருவர் இந்த மரணச்செய்தியைப் பரிமாறிக் கொண்டனர். அவ்வளவுதான். அதற்குமேல் அதைப்பற்றிக் கவலைப்படவோ பேசவோ அவர்களுக்கு நேரமேது?

ஆஸ்பத்திரி கட்டடம் அசையாமல் இருந்தது. அது இம்மாதிரி எத்தனையோ மரணச்செய்திகளைக் கேட்டு உரம்பெற்றிருந்தது. குழந்தை சாவு அதற்கொன்றும் அதிர்ச்சி அளிக்காதது வியப்பில்லை.

ஆனால் தங்கம்மாளோ கதறினாள். அவளுக்கு இனிப் புதல்வன் இல்லை. ''நான் இனித் தனிக்கட்டை. அவன் போனபின் எனக்கேன் வாழ்வு?'' என்று கதறினாள். ஆஸ்பத்திரியே கிடுகிடுத்தது.

தங்கம்மாள் மகனைப் பறிகொடுத்தாள். 'உலகமே அழிந்தது. இனி என்ன பாக்கி?' என்று அவள் பொருமினாள் – அழுதுகொண்டிருந்தாள்.

ஆனால் உலகத்திலுள்ளவர்கள் அவரவர் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். அவள் எண்ணியது போல உலகம் ஒரு முடிவுக்கு வந்துவிடவில்லை.

'ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ' என்னும் உண்மையை நன்கு உணர்ந்தவர்களாக அவர்கள் தோன்றினார்கள். குழந்தையைக் கொள்ளை கொடுத்த தங்கம்மாளோ அழுதுகொண்டேயிருந்தாள். அது அன்னையின் சோகம்!

சிறுகதை -2

சின்னப்பயல்

குருசாமி காரியாலய வேலைமுடிந்து வீட்டுக்கு வந்தவன், வந்ததும் வராததுமாக எதிர் வீட்டு ஆறுமுகத்தைப் பார்க்க ஓடினான்.

ஆறுமுகம் குருசாமியின் அந்தரங்க நண்பன். காரியாலயத்திற்குப் போகிற நேரம் தவிரப் பாக்கி நேரங்களில் அவன் அங்குதான் குடியிருப்பான்.

அரசாங்கக் காரியாலத்தில் குருசாமி குமாஸ்தா வேலை பார்த்துவந்தான். ஏதோ ஓர் அளவான வருமானம். வாழ்க்கை உருண்டுகொண்டிருந்தது.

அன்றாடம் காரியாலயத்தில் நடக்கும் செய்திகளை அப்படியே ஆறுமுகத்திடம் பாடம் ஒப்பித்தால்தான் குருசாமிக்கு இரவு நல்ல தூக்கம் வரும். அந்த வழக்கப்படி அன்று ஏதோ சுவையான நிகழ்ச்சியை வர்ணித்துக்கொண்டிருந்தான்.

நண்பர்களின் சுவையான பேச்சு ஆரம்பமாகிச் சில நிமிஷங்கள்தான் ஆகியிருக்கும். அப்போது குருசாமியின் தாயார் வேர்க்க விறவிறுக்க அங்கு வந்தார்கள். தாயாரைக் கண்டதும் குருசாமிக்குத் திகைப்பாகிவிட்டது. பேச்சை நிறுத்திவிட்டு ''என்னம்மா'' என்றான்.

''சற்றுமுன் தெருவில் விளையாடிக்கொண்டிருந்தான் சின்னப்பயல். அதற்குள் எங்கோ போய்விட்டான். பக்கத்து வீடுகளிளெல்லாம் தேடிவிட்டேன். காணவில்லை....'' என்று குருசாமியின் தாயார் மீனாட்சியம்மாள் இரைக்க இரைக்கச் சொன்னாள்.

குருசாமிக்கு ஒன்றும் புரியவில்லை. சின்னப்பயலிடம்தான் அவனுக்குக் கொள்ளைப் பிரியம். அவர்கள் வீட்டில் அவன் அப்பா''பிள்ளை''!

நண்பனிடம்கூட சொல்லிக்கொள்ளவில்லை. தாயாரை அழைத்துக்கொண்டு வெளியே வந்தான். ''அம்மா நீ வீட்டில் போய் இரு. நான் கடற்கரையில் போய்ப் பார்த்துவருகிறேன்'' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

குருசாமியின் நினைவெல்லாம் ''சின்னப்பயல்'' மீது மொய்த்திருந்தது. சின்னப்பயல் இரண்டாவது பையன். அவனுக்கு இட்ட பெயர் பாண்டியன் என்றாலும் வீட்டில் சின்னப்பயல் என்றுதான் அவனை எல்லோரும் கூப்பிடுவது வழக்கம். மூத்தவன் சாது, சின்னப்பயலுக்குப்பிறகு ஒரு தம்பி, அவன் கைப்பிள்ளை.

பாண்டியனுக்கு நான்கு வயதிருக்கும். ஒரு நிமிஷம் ''சும்மா'' இருக்கமாட்டான். ஏதாவது ஆட்டபாட்டம் வம்பு, வழக்கு, தொல்லை, சண்டைபோட்டுக்கொண்டுதான் இருப்பான். ''தீராத விளையாட்டுப்பிள்ளை'' என்று பாரதியார் தீட்டிருக்கிற சித்திரம் அவனுக்கு அப்படியே பொருந்தும்.

குருசாமி வீடு கடற்கரைக்குச் சமீபம். கடற்கரைக்குப் பிள்ளைகளை அடிக்கடி அவன் மனைவி அழைத்துப்போவாள். அதனால் ஒருவேளை ''சின்னப்பயல்'' அங்கு ஓடிப் போயிருக்கலாமென்று அவன் நினைத்தான்.

கடற்கரையில் அன்று அவ்வளவு கூட்டமில்லை. எனவே குருசாமிக்கு மகனைத் தேடுவது எளிதாக இருந்தது. அங்கு காற்று வாங்கிக்கொண்டிருந்தவர்களிடம் ஒருவர் பாக்கி விடாது விசாரித்தான்.

அங்கு தேங்காய், மாங்காய், பட்டாணி விற்றுக் கொண்டிருந்த வர்களையும் விடவில்லை; ஆனால் யாரும் பாண்டியனைப் பார்த்தாகக் கூறவில்லை. சிறு குழந்தை எதுவும் அங்கு தனியே வரவில்லையென்று அவ்வளவு பேரும் ஒரே மாதிரி சொன்னார்கள்.

குருசாமிக்கு மனம் ஒரு நிலையில் இல்லை. ''பிள்ளை வேறு எங்கு போயிருப்பான்?'' என்று யோசித்தான். அது தவிர அப்போது நகரத்தில் ''பிள்ளை பிடிக்கும்'' திருடர்கள் பற்றிய வதந்தியும் உலாவியதால் அவனுக்கு கவலை முளைத்தது.

''அப்படி எந்தத் திருடனாவது சின்னப்பயலைத்

தூக்கிக்கொண்டு போயிருந்தால்...'' இதனைக் கற்பனையில்கூட நினைத்துப்பாரக்க முடியாமல் தடுமாறினான் குருசாமி. அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிடும்போலிருந்தது.

கதிரவனொளி மங்கி நகரில் இருள் படர ஆரம்பித்தது. சாலையில் செல்லும் கார்களின் வெளிச்சம் இடையிடையே மின்னிக்கொண்டிருந்தது. வீட்டை நோக்கி நடந்தான் குருசாமி.

வீட்டில் தன்னைப் பார்த்ததும் ''சின்னப்பயல் எங்கே?'' என்று கேட்கும் அம்மாவுக்கும் ''தம்பி அகப்பட்டானா?'' என்று வினாவும் மனைவிக்கும் அவன் என்ன பதில் சொல்வான்?

பழைய சம்பவமொன்று அவன் மனத்தில் பளிச்சிட்டது.

அன்று அவனுக்கும் சரோஜாவுக்கும் - அதுதான் அவன் மனைவியின் பெயர் – பெரிய தகராறு.

பள்ளிக்கூட விடுமுறைக்கு மூத்தவனைத் தன் தாயார் வீட்டுக்கு அனுப்பிவைக்க வேண்டுமென்று ஒரே பிடியாய் நின்றாள் சரோஜா. குருசாமிக்கு அது விருப்மில்லை. ஒரு வாரமாகவே புகைந்துவந்த இந்த குமுறல் அன்று உச்ச கட்டத்தை அடைந்தது.

வேலை முடிந்து மாலையில் வீட்டுக்கு வந்தான் குருசாமி. வழக்கமாகச் சிரிக்கும் முகத்தோடு எதிர்கொண்டழைக்கும் சரோஜாவை முன்கட்டில் காணவில்லை. அவன் தாயாரும் எங்கோ வெளியில் போயிருந்தார்கள்.

பிள்ளைகள் மட்டும் விளையாடிக்கொண்டிருந்தார்கள். கடைசிப் பிள்ளை தொட்டியில் தூங்கியது.

மூத்த பையன் செல்வத்தைக் கூப்பிட்டான் குருசாமி. 'உன் அம்மா எங்கேயடா?' என்றான். 'அம்மா அதோ.......' என்று சாமான் அறைப்பக்கம் கையைக் காட்டினான் செல்வம்.

சரோஜா அந்த அறையில் பொருமியபடி படுத்துக் கொண்டிருந்தாள். குருசாமிக்குத் தன் மனைவியின் பிடிவாத குணம் கட்டோடு பிடிக்கவில்லை. தான் எவ்வளவோ சொல்லியும் நினைத்ததைச் சாதிக்கச் சரோஜா முயல்வது அவனுக்கு ஆத்திரத்தைக் கிளப்பியது.

அந்த ஆத்திரத்தை மேலும் தூண்டும் வகையில் 'அம்மா இன்னைக்கு சாப்பிடவே இல்லை அப்பா' என்று புதுத் தகவலை

வெளியிட்டான் செல்வம். 'ஆமா அப்பா' என்று ஊர்ஜிதம் செய்தான் சின்னப்பயல். இப்படிச் சொல்லிவிட்டு அண்ணனும் தம்பியும் கைகொட்டிச் சிரித்தார்கள். அப்பாவின் கோபம் அவர்களுக்கு என்ன தெரியும்?

குருசாமி முகத்தை சுண்ட வைத்துக்கொண்டு தன் அறைக்குப் போனான். விளக்கைக் கூடத் தட்டிவிடாமல் பேயறைந்த மாதிரி உட்கார்ந்திருந்தான்.

அம்மா ஒரு அறையில்! பிள்ளைகளுக்கெல்லாம் புதிராக இருந்தது. விளையாட்டை நிறுத்திவிட்டு அவர்களும் 'உம்'மென்று ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டார்கள்.

இந்த 'மௌன நாடகம்' நடந்துகொண்டிருந்தபோது, நாள் தவறாமல் வீட்டுக்கு வரும் நண்பனைக் காணவில்லையே, காரணம் என்னவென்று விசாரிப்பதற்காக எதிர் வீட்டு ஆறுமுகம் அங்கே வந்து சேர்ந்தான்.

வீட்டில் இருள் சூழ்ந்திருந்தது. ஆறுமுகத்தைக் கண்டதும் 'மாமா வணக்கம்' என்று செல்வமும் பாண்டியனும் அவனைப் போய் சூழ்ந்துகொண்டார்கள்.

'அப்பா இல்லையா?' என்று கேட்டான ஆறுமுகம்.

பாண்டியன், 'அப்பா இந்த அறை! அம்மா அந்த அறை! இரண்டு பேரும் சண்டை மாமா, பேசமாட்டாங்க' என்றான்.

'ஆமா மாமா' என்றான் செல்வம்.

'என்னடா சண்டை?' ஆறுமுகம் கேட்டான்.

எங்களுக்கு என்ன தெரியும்? வாங்க மாமா, இரண்டு பேருக்கும் சமாதானம் பண்ணி வைங்க' என்று பாண்டியன் பெரிய மனிதர் தோரணையில் பேசினான்.

ஆறுமுகத்திற்கு சிரிப்பு வந்துவிட்டது. பாண்டியனைத் தோளில் தூக்கி வைத்துக் கொண்டான்.

இந்தப் பேச்சுகள் காதில் விழுந்ததுமே சரோஜா படுத்திருந்தவள் எழுந்து காப்பி தயாரிக்க ஆரம்பித்துவிட்டாள். குருசாமி முகத்தைக் கண்ணாடியில் பார்த்துக்கொண்டு சிரிப்பை வரவழைத்துக்கொண்டு ஆறுமுகத்தை வரவேற்க அறையை விட்டு வெளியே வந்தான்.

சிறுகதை -3

அந்தச்செந்தாமரை முகத்தைக் கைகள் மறைத்திருப்பதை என் உள்ளம் பொறுக்கவில்லை. என் கைகள் ஓடிப்போய் அவள் கைகளை இழுத்தன. என் கை பட்டதும்..

27.11.1955 இல் வெளிவந்தது.

காதல் கதை

எங்களுக்குக் கல்யாணமான புதிது. அப்போதெல்லாம் என் மனைவியும் நானும் கனவுலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தோம். புதிய தம்பதிகளைப் பற்றிச் சொல்லவா வேண்டும்! ஒரே களிப்பு, கொண்டாட்டம், கூத்துமயமாக வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது.

என் மனைவி சரோஜாவுக்குத் திடீர் திடீரென ஏதாவது சந்தேகம் தோன்றிவிடும். அந்தச் சந்தேகங்களை அவளைப் படைத்த ஆண்டவனால் கூடத் தீர்த்துவைக்க முடியாது.

ஒருநாள் அவள் கேட்ட கேள்வி என்னை அப்படியே மலைக்கவைத்துவிட்டது. ஐந்து நிமிஷம் வரை பிரமை பிடித்தவன் போல் இருந்துவிட்டேன்.

சரோஜா துடுக்கான பண்புள்ளவனள். அன்று அவள் ஒரு அணுகுண்டையே வீசிவிட்டாளென்று தான் சொல்லவேண்டும்.

'அத்தான் எனக்கு ஒரு சந்தேகம். கேட்டால் கோபப்பட மாட்டீர்களே' என்றாள்.

'ஏது பீடிகை பலமாக இருக்கிறதே. என் கோபம் உன்னிடம் என்ன செய்யும். தாயே சந்தேகத்தைக் கேள்' என்றேன் அமைதியாக.

'நீங்கள்.................. நீங்கள்' என்று ஆரம்பித்தவள் வாக்கியத்தை முடிக்கமுடியாமல் திணறிநாள். 'ஏன் தயங்குகிறாய் சரோஜா? பயப்படாமல் கேள் என்று தைரியமூட்டினேன்.

'அத்தான், நீங்கள் எந்தப் பெண்ணையும் காதலித்தது உண்டா?'

வீட்டுக்கு வந்திருக்கிற புதுமனைவி இப்படி ஒரு கேள்வியைக் கணவனை நோக்கி வீசுவாளென்று யார் தான் எதிர்பார்க்க முடியும்? நான் 'எலெக்ட்ரிக் ஷாக்' அடித்தவன் போல் திகைத்துப் போனதில் வியப்பில்லை. திகைப்பு மாறியதும் எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. தொட்டுத் தாலி கட்டியிருக்கும் மனைவியிடம் எந்தப் பைத்தியக்காரனாவது தன் பூர்வாங்கக் காதல்கதைகளை விவரிப்பானா? சரோஜாவின் பேதை நெஞ்சை நினைத்து இரக்கப்பட்டேன்.

அவளைச் சொல்லிக் குறையில்லை. அவள் ஒரு கதைப் பைத்தியம். பத்திரிகைகளில் வருகின்ற சிறுகதை, தொடர்கதை எதையும் அவள் பாக்கிவைப்பதில்லை.

நம் தமிழ்ப்பத்திரிகைகளில் எத்தகைய கதைகள் வருகின்றன என்பது தான் உங்களுக்குத் தெரியுமே! அத்தனையும் காதல் கதைகள். கண்டதும் காதல், கடிதக்காதல், கடற்கரைக்காதல், சினிமாக்காதல், மோட்டார்க்காதல் – இப்படி எத்தனையோ ரகக் காதல்கதைகளைப் படித்துப் படித்துக் கரைகண்ட சரோஜா தன் கணவரின் காதல் நாடகத்தையும் அறிந்துகொள்ள விரும்பியதில் ஆச்சரியம் ஏதுமில்லை.

என்னுள் ஆராய்ச்சி இவ்வாறு நீண்டுகொண்டிருந்தது. பொறுமையிழந்த சரோஜா 'என்ன அத்தான், என் மீது கோபமா? நான் உங்களிடம் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கக்கூடாது. அப்படித்தானே! என்று இடைமறித்தாள். 'எனக்குக் கோபம் வரவில்லை. சரோ, சிரிப்புத்தான் வருகிறது. எவ்வளவு பைத்தியக்காரியாக இருக்கிறாய் நீ?' என்றேன்.

நான் கேட்டதில் என்ன தப்பு? உலகத்தில் காதல் யாரை விட்டுவைக்கிறது? ஆனானப்பட்ட முனிவர்களைக் கூட மோகினிகள் ஆட்டிப் படைத்திருக்கிறார்கள். அந்நிலையில் நீங்கள் எம்மாத்திரம்? உங்கள் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட மோகினி யாரென்றுதான் கேட்கிறேன்! அவளுக்குத் துணிவு பிறந்துவிட்டது. காரணகாரியத்தோடு பேச ஆரம்பித்துவிட்டாள்.

'அந்த மோகினி சாட்சாத் நீதான். உன்னைக் கல்யாணம்

பண்ணுவதற்குமுன் நான் எந்தப் பாவையையும் நெஞ்சாலும் நினைத்ததில்லை. வேண்டுமானால் உன் தலை மீது அடித்துச் சத்தியம் செய்கிறேன் தாயே, என்னை நம்பு நம்பு நம்பு என்று உரக்கப் பேசினேன் நான். என் தொண்டையிலும் சூடு ஏறியிருந்தது.

சரோஜா அவ்வளவு சுலபமாக நம்பிவிடுவாளா? 'அத்தான், நீங்கள் என்னை ஏமாற்றுகிறீர்கள்? உங்கள் சத்தியம் முழுப்பொய்' என்றாள்.

'காதல் விவகாரமே என் பக்கம் குறுக்கிட்டதில்லை என்கிறேன். அப்படி ஏதும் நடந்திருந்தாலும் உன்னிடம் 'எனக்கு நீ உனக்கு நான்' என்று எனக்குவாழ்க்கைப்பட்டுவிட்ட உன்னிடம் – நான் அதை எப்படிச் சொல்வேன்? பிடிவாதம் செய்யாதே. வேறு சந்தேகங்களை ஆயிரம் வேண்டுமானாலும் கேள். அத்தனைக்கும் அட்டி சொல்லாது பதில் தரத் தயார்' என்று அவளிடம் மன்றாடினேன். என் விளக்கங்கள் சரோஜாவின் சந்தேகத்தைத் தணிப்பதற்குப் பதிலாக மேலும் கிளறிவிட்டன. அவள் என் 'காதலி'யை அறிந்துகொள்ளத் துடியாய்த் துடித்தாள்.

'உண்மையை மறைக்கிறீர்கள். ரகசியம் எனக்குத் தெரிந்துவிடக் கூடாதென்று பசப்புகிறீர்கள். மனத்தில் களங்கம் இல்லையென்றால் சொல்வதற்கென்ன?' என்று மடக்கினாள்.

சரோஜாவின் பிடிவாதத்தை நான் அறிவேன்.ஆறாகக் கண்ணீர் பெருக்கும்வரை அவளைச் சோதிக்க நான் விரும்பவில்லை.

ஒருவாறு மனத்தைத் திடப்படுத்திக்கொண்டேன். 'என் காதலி......' என்று ஆரம்பித்தேன். 'உங்கள் காதலியின் பெயர் என்ன அத்தான்?' பொறுக்காமல் குறுக்குக் கேள்வி போட்டாள் சரோஜா.

'இப்படியெல்லாம் இடையில் கேள்வியெழுப்பிக் கொண்டிருந்தால் நான் சொல்லமாட்டேன். பொறுமையாகக் கேட்பதானால் சொல்கிறேன்' என்றேன் கண்டிப்பாக.

'உத்தரவு அப்படியே ஆகட்டும்' என்று அவள் சம்மதம் தெரிவித்ததும் கதையைத் தொடங்கினேன்.

அப்பொழுது நான் திருச்சியில் படித்துக்கொண்டிருந்தேன்.

தமிழாசிரியர் வகுப்பில் ஒரு கட்டுரைப் போட்டி வைத்தார்.

தமிழைப் பொறுத்தவரை எப்பொழுதும் வகுப்பில் எனக்குத்தான் முதல் மார்க். கட்டுரைப்போட்டி முடிவும் அந்த நியதிக்கு மாறாக இருக்கவில்லை. ஆசிரியர் 'முதல் மார்க்' என்று சொல்லி என் பெயரை வகுப்பில் படித்தார். 'கோகிலா இரண்டாவது மார்க்' என்றார் அடுத்தபடியாக. வகுப்பில் ஒரே கலகலப்பு. பையன்களெல்லாம் என்னையும் கோகிலாவையும் மாறிமாறிப் பார்த்தார்கள். அவர்கள் முகத்தில் குறும்புச்சிரிப்பு குடிகொண்டிருந்தது.

கோகிலாவும் நானும் ஒரே பள்ளியில் மூன்று ஆண்டுகளாகப் படித்துவருகிறோம். அவள் படிப்பில் கெட்டிக்காரி. பல தடவை முதல் மார்க் எடுத்துப் பையன்களின் கொட்டத்தை அடக்கியிருக்கிறாள். அதுமட்டுமல்ல கோகிலம் நல்ல அழகி. அவள் வனப்பு நவநாகரிக மேற்பூச்சு மினுக்கல்ல. இயற்கையிலேயே கவர்ச்சியான தோற்றம் அவளுக்கு வாய்த்திருந்தது. எரிச்சல் தராமல் நறுமணம் வீசும் ஊதுவத்தியின் தன்மைக்குக் கோகிலத்தின் அழகை ஒப்பிடலாம்.

வகுப்பில் ஒருத்தியாக விளங்கிய அவளை மாணவர் கூட்டம் வெறித்து நோக்கியதிலும். முற்றுகையிட்டதிலும் வியப்பில்லை. அவள் கண் தன்பக்கம் திரும்பாதா என்று தவங்கிடந்த மாணவர்கள் உண்டு. காதல் ஓலைகள் வரைந்து கோகிலத்தை வலை வீச முயன்றவர்கள் உண்டு. அவள் மேனியில் தங்கள் கைத்திறமையெல்லாம் காட்டியவர்களும் உண்டு.

கோகிலம் இத்தனை அட்டகாசங்களையும் மிகவும் பொறுமையாய்ச் சகித்துக் கொள்வாள். மாணவர் யாரையும் அவள் கண்ணெடுத்து நோக்கியதில்லை. வகுப்புண்டு, பாடமுண்டு, வீடுண்டு என்ற போக்கில் அந்தப் பாவை தன்னாட்சி நடத்திக்கொண்டிருந்தாள்.

பெண்களுக்குத் திலகமாகத் திகழும் கோகிலத்திடம் மாணவர்கள் குறும்புத்தனமாக நடந்துகொள்வது, எனக்கு கட்டோடு பிடிப்பதில்லை. எனினும் மனத்திற்குள் புழுங்குவதைத் தவிர நான் வெளியில் என்ன செய்யமுடியும்? கோகிலத்தின் அடக்கம் என் உள்ளத்தைக் கவர்ந்திருந்தது. அன்று

தமிழாசிரியர் என் பெயருக்கு அடுத்தபடியாகக் கோகிலம் என்று படித்தவுடன் மாணவர்களெல்லாம் எங்கள் இருவரையும் திரும்பத் திரும்பப் பார்த்ததும் என் மனத்தில் ஒரு சலனத்தை ஏற்படுத்திவிட்டது.

அந்த நிகழ்ச்சியை அடுத்து கோகிலத்தின் முகத்தில் நான் ஒரு புதுமையைக் காணத் தொடங்கினேன். அவள் வடிவும் என் மனத்திரையில் படிய ஆரம்பித்தது.

ஒருநாள் மணி பத்தை நெருங்கிக்கொண்டிருந்தது. வகுப்புக்கு வேகமாக வந்துகொண்டிருந்தேன். வழியில் கோகிலத்தை அன்று எதிர்பாராதவிதமாகச் சந்திக்க நேர்ந்துவிட்டது. எப்பொழுதும் மணியடித்த பிறகுதான் வகுப்புக்குள் நுழைவாள் கோகிலம். எனவே அன்று அவள் வந்த நேரமும் நான் வந்த நேரமும் ஒத்திருந்தது. கோகிலத்தைப் பார்த்ததும் நடைவேகத்தைச் சிறிது குறைத்தேன். அவள் என்னிடம் ஏதோ பேச விரும்புவது போலத் தெரிந்தது. அவள் பக்கம் திரும்பினேன்.

'மிஸ்டர் சந்திரன் உங்களிடம் ஒன்று கேட்க வேண்டும் என்றிருந்தேன்' என்று ஒவ்வொரு வார்த்தையாகச் சொன்னாள் கோகிலம். அவள் பேச்சில் தேனின் இனிப்பு இருந்தது; முகத்தில் ரோஜாவின் மலர்ச்சி தெரிந்தது.

'உங்களுக்கு என்ன வேண்டும்'? கட்டுண்டுகிடந்த ஆவலெல்லாம் வெளிப்படக் கேட்டேன். 'பெரிய காரியம் ஒன்றுமில்லை. உங்கள் கட்டுரை நோட்டு தேவை. பார்த்துவிட்டு ஒரு வாரத்தில் திரும்பத் தந்துவிடுவேன்' என்று அவள் கிளிமொழியில் பதில் சொன்னாள்.

அதற்குள் பள்ளியின் மணி அடித்துவிடவே இருவரும் பிரிந்தோம்.

இப்படிப் பல சந்திப்புகள், பொதுப்பேச்சுகள், கண்டு மகிழும் குறிப்புகள் நடந்தேறின. அவளிடம் உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டேன் என்பது அப்போதுதான் எனக்குப் புரிந்தது.

கோகிலத்தின் தம்பி எங்களுக்கிடையே தூதுவனாக உதவினான்; அன்பையெல்லாம் எழுத்தில் கொட்டிக் காதல் மடல்களைப் பரிமாறிக்கொண்டோம்.

அவள் எழுதியிருந்த கடிதம் இது :

'அன்பு சந்திரன் அவர்களுக்கு,

உங்களோடு சேர்ந்தாற்போல் அரைமணி நேரமாவது பேசவேண்டும்; என் மனத்தைத் திறந்து காட்ட வேண்டும் என்று துடியாய்த் துடிக்கிறேன். வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை மலைக்கோட்டைக்கு வருகிறீர்களா?

உங்கள் கோகிலம்'

கரும்பு தின்னக் கூலியா? ஞாயிற்றுக்கிழமை குறித்த நேரத்தில்; மலைக்கோட்டையில் போய்க் காத்திருந்தேன் நான்.

எதிர்பார்த்தபடி என் கனவுப்பெண்ணாள் அங்கே வந்து சேர்ந்தாள். என் மனக்கோட்டையே நடைபோட்டு வந்தது மாதிரி இருந்தது.

உச்சிமலைப் பிள்ளையார் கோயில் பக்கம். மனித நடமாட்டமில்லாத ஒரு பகுதியில் இருவரும் அமர்ந்தோம்,

இருவருக்கும் யாரும் பார்த்துவிடப் போகிறார்களோ என்று உள்ளூர ஒரு புறம் பயமிருந்தாலும் தனிச் சந்திப்புக் களிப்பே தலைதூக்கி நின்றது.

சிறிதுநேரம் வரை இருவருக்கும் என்ன பேசுவது என்றே புரியவில்லை. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தோம்.

இனந்தெரியாத ஆனந்தத்திற்கு முன் பேச்சு வலி இழந்து விடுகிறது.

கோகிலம் என்றேன்.

'சந்திரன்' என்றாள்.

'உண்மையிலேயே என்னை விரும்புகிறாயா கோகிலம்?'

'இன்னும் சந்தேகமா, சந்திரன்?' அவள் முகத்தில் வெட்கம் படர்ந்தது. கைகளால் கண்களைப் பொத்திக்கொண்டாள்.

அந்தச் செந்தாமரை முகத்தைக் கைகள் மறைத்திருப்பதை என் உள்ளம் பொறுக்கவில்லை. என் கைகள் ஓடிப்போய் அவள் கைகளை இழுத்தன.

என் கை பட்டதுதான் தாமதம். அவள் ஓடுகிற பாம்பை மிதித்தவள் போல் அதிர்ந்தாள். அந்த ஸ்பரிசத்தில் நான் கண்ட இன்பத்தை எப்படி வர்ணிப்பேன்? பனிக்கட்டியிலும் அந்தக்குளிர்ச்சி இல்லை; பட்டிலும் அந்த மென்மையில்லை.' கதையின் இந்தக்கட்டத்தில் 'போதும் உங்கள் வர்ணிப்பு நிறுத்துங்கள்' என்று குதித்தாள் சரோஜா.

இவ்வளவு நேரம் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்தவள் திடீரென வெகுண்டெழுந்தாள். அவள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன.

'என் காதலை இடையில் எப்படி நிறுத்துவது சரோ? கடைசிவரையில் கேள் என்றேன், அவள் கோபத்தைக் கண்டும் காணாததுபோல்.

'அத்தான், என் ஆத்திரத்தைக் கிளப்பாதீர்கள். அந்தக் கள்ளியின் கதையை இனி ஒரு வரி கூட நான் கேட்கத் தயாராயில்லை'. என் மனைவி எரிமலையாகக் காட்சியளித்தாள்.

'உங்கள் காதலி யார் என்றாய். சொல்ல மறுத்தேன். பிடிவாதம் செய்தாய். கூறினேன். இப்பொழுது எரிந்து விழுகிறாய்' அமைதியாகப் பேசினேன்.

சரோஜாவின் நயனங்களைக் கண்ணீர் மறைத்தது. 'நீங்கள் சொன்னதெல்லாம் உண்மையாக நடந்ததா அத்தான்' விம்மிக்கொண்டே கேட்டாள். 'அத்தனையும் உண்மை சரோ. கோகிலம் இப்பொழுது சென்னையில் இருக்கிறாள்' என்றேன் பொங்கிவந்த சிரிப்பை அடக்கிக்கொண்டு.

'பொய் சொல்கிறீர்கள். என்னை ஏமாற்றுகிறீர்கள். அவ்வளவும் உங்கள் கற்பனை. எனக்குத் தெரியும்.'

அவள் மனமைதியை அதற்கு மேலும் நான் குலைக்க விரும்பவில்லை. 'உன் இஷ்டப்படி கற்பனையென்று தான் வைத்துக்கொள்ளேன்' என்று சொன்னதுதான் தாமதம்; ஆத்திரம் அழுகையெல்லாம் மறைந்து அவள் முகத்தில் கோடு சூரியப்பிரகாசம் போல் சுடர்விட்டது.'எனக்கும் நீ உனக்கு நான்' என்று அடுத்த வீட்டு ரேடியோ பாடிக்கொண்டிருந்தது.

சிறுகதை -4

நெஞ்சம் பதைக்கவைக்கும் புயல், வெள்ள நாசச்செய்திகள் தமிழகத்திலிருந்து தினந்தினம் வந்து குவிந்துகொண்டிருக்கின்றன. இன்னும் துயரக்கதைகளை ஏந்திவரும் கடிதங்கள் ஆயிரமாயிரம். அப்படி ஒரு கடிதமே இங்கு தரப்படுகிறது – ஆனால் இது கற்பனை!

11.12.1955 இல் தமிழ்முரசில் வெளிவந்த கதை.

புயல்

தலைக்குக்மேல் கல்போல் விழும் மழை!

ஆளைச் சுழலவைக்கும் பேய்க்காற்று!

'ஆ'வென வாயைப் பிளந்து வரும்

அலைகடல். உப்பளத்தில் நாங்கள்.

தம்பி ராமையாவுக்கு,

வீட்டில் அம்மா, அப்பா, தங்கை அனைவரும் நலமே இருக்கிறோம். உன்னுடைய நலம் தெரிந்துகொள்ளப் பெரிதும் ஆவல். உடனே கடிதம் போடு.

பயங்கரவெள்ளம், கோரப்புயல், பொங்கியெழுந்து ஊருக்குள் புகுந்த கடல் இத்தனை ஆபத்துக்களிலும் மீண்டும் உனக்குக் கடிதம் எழுதமுடியும் என்று நினைக்கவே இல்லை.

எப்படியோ தப்பித்துவிட்டோம்; நம் குடும்பத்தில் எல்லோருக்கும் உயிர் 'கெட்டி' என்றுதான் சொல்லவேண்டும். அந்த ஆவேசக்கடல் என்னிடம் கருணையோடு நடந்துகொண்டது என்றுதான் நினைக்கிறேன்.

ஒவ்வொரு நாளும் கவலைப்பட்டுக் கொண்டிருப்பாய். கடலுக்குப் பலியானார்கள் நூற்றுக்கணக்கான உப்பளத் தொழிலாளர் என்னும் செய்தியைப் படித்ததும் உன் மனம் ஒரு

நிலையில் இருந்திருக்காது. தம்பி, யார் செய்த புண்ணியமோ நான் உயிரோடு இருக்கிறேன்.

அண்ணனைச் சாவு தழுவவில்லையென்று அறிந்ததும் நிம்மதியாகப் பெருமூச்சு விடுவாய். நம் வீடு, வாசல் நிலங்களை, ஆடு மாடு நிலை என்னவென்று அறிய அடுத்து உனக்கு ஆவல் பிறக்கும். அதனையெல்லாம் விளக்கமாக வரைந்து கடல்கடந்து மலாயா நாட்டுக்குப் பிழைக்கச் சென்றிருக்கும் உன் மனத்தைக் குழப்ப எண்ணவில்லை. நாங்கள் பிழைத்துவிட்டோம் என்பது போதாதா! அந்த ஒரு சேதியைக் கொம்புத்தேன் முடவனுக்குக் கிட்டியதென்று கருதி மகிழ்ச்சி கொள்.

கடிதத்தை வளர்க்க எனக்கு விருப்பமில்லை. எனினும் மற்றொரு சோகச் செய்தியை உனக்குத் தெரிவிக்காமல் திரைபோட என்னால் முடியாது.

அடுத்தவீட்டு மாடசாமி அண்ணனைத் தெரியுமல்லவா உனக்கு? தம்பி, எப்படிச் சொல்வேன்? மாடசாமி அண்ணன் கடலுக்குப் பலியாகிவிட்டார். அந்தக் கோரக்காட்சியை என் இரு கண்களாலும் பார்த்தேன்.

அந்தப் பயங்கரத்தை எப்படி வர்ணிப்பேன்? இப்போது அது ஏதோ கனவு போல் தோன்றுகிறது. புயல், வெள்ளம், மழையெல்லாம் நின்று இப்போது வானம் வெட்டெரிக்கிறது. அன்றி சீறியெழுந்த கடல் இன்று ஏதும் அறியாத அப்பாவி போல் பாட்டிசைத்துக் கொண்டிருக்கிறது. பாட்டென்றா சொன்னேன்? அய்யோ பிள்ளைகளை இழந்து தவிக்கும் தாயின் புலம்பலையே அந்தக் கடலிரைச்சலில் நான் கேட்கிறேன்.

வெள்ளிக்கிழமை காலையில் வழக்கம்போல் நானும் மாடசாமி அண்ணனும் வேலைக்குப் போனோம். வேதாரண்யம் உப்பளப் பிரதேசம்தான் உனக்குத்தெரியுமே! உப்பு விளைவிக்கின்ற பணியிலே ஆயிரக்கணக்கானவர்கள் ஈடுபட்டிருந்தோம். கண்ணனுக்கு எட்டிய மட்டும் உப்பு வயல்கள். பாத்திபிடித் திருப்பது தூரத்திலிருந்து பார்த்தால் சொக்கட்டான் கட்டம் போலத் தோன்றும்.

உப்புப் போட்டுச் சாப்பிட்டால்தான் மனிதனுக்கு ரோஷமிருக்கும் என்பார்கள். மனிதனுக்கு மானம் உயிரினும்

பெரிதல்லவா? அந்த மான உணர்ச்சியை ஊட்டுகிற உப்பு எங்கள் உழைப்பில் விளைகிறதென்பதில் நான் எப்போதும் பெருமை பாராட்டுவேன். இந்தக் கதையெல்லாம் இப்போது ஏன்?

அன்று கடலிலிருந்து நீரைப் பாய்ச்சும் வேலையில் நாங்கள் முனைந்திருந்தோம். பக்கத்து உப்பளத்தில் மாடசாமி கருமமே கண்ணாயிருந்தார்.

வானம் காலையியேயே மப்புத் தட்டி இருந்தது. ஊற்று ஜில்லென்று வீசிக் கொண்டிருந்தது. திடீரென வானம் கருத்திருந்தது. செவிடுபடும் இடிமுழக்கம்; பேய்மழை விழத் தொடங்கியது. அது மட்டுமா? 'ஊழிக்காற்று' என்று பாரதி பாடியிருக்கும் கவிதை படித்திருப்பாய். அந்த ஊழிக்காற்றின் கோரநர்த்தனத்தை அன்று நான் கண்டேன். ஆயிரம் மலைப்பாம்புகள் ஒன்றாக நின்று சீறினால் எப்படியிருக்கும்? அவ்வளவு வேகமாக அடித்தது புயல். அதுவரை அமைதியாக இருந்த கடல் பொங்கி எழுந்த்து. கடல், வானம், பூமி முதலியவை தருமத்திற்கு கட்டுப்பட்டு நிற்கின்றன என்பது பெரியவர்கள் நம்பிக்கை.

தருமத்தை மீறத் துணிந்துவிட்டது சமுத்திரம்! ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக அது கடைப்பிடித்து வந்த பொறுமையெல்லாம் தூள்தூளாகியது.

பிரளயம் வந்து ஒரு காலத்தில் உலகம் முழுவதும் அழிந்து விடும் என்பார்கள். அந்தப் பிரளயம் தான் வந்துவிட்டதென்று நினைத்தேன்.

கடற்கரையோரமாகவே பரம்பரைபரம்பரையாக வாழ்பவர்கள் நாம். பிள்ளைப்பருவத்திலே நாம் கடலோரத்தில் சிப்பிகள் பொறுக்கியதும் மணல்வீடு கட்டியதும் உனக்கு நினைவிருக்கும். அப்பொழுதெல்லாம் மணிக்கணக்கில் நாம் கடலில் நின்றிருக்கிறோம். நம்முடைய சின்னஞ்சிறு பாதங்களை நுரைமுகம் காட்டி வரும் அலை அன்பாகத் தடவிச் செல்லும். பிள்ளையைப் படுக்கையிலிட்டுத் தாய் முதுகை வருடிக் கொடுத்தால் எத்தனை இன்பமாக இருக்கும்! அந்த இன்பத்தை நாளெல்லாம் அளித்துவந்த கடல்தானா அன்று நான் கண்ட கடல்? என்னால் நம்பவே முடியவில்லை.

வானத்தைத் தொட்டுவிடும் பேராசை போலும் கடல் மங்கைக்கு! தலையை அண்ணாந்து பார்க்கும் உயரத்திற்கு அவள் பொங்கி எழுந்தாள். ஒரே கோர இரைச்சல்; மரணத்தையும் அழிவையும் ஏந்திவரும் பயங்கர இடியோசை.

தலைக்குமேல் கல்போல் விழும் மழை; ஆளைச் சுழலவைக்கும் பேய்க்காற்று; 'ஆ'வென வாயைப் பிளந்துவரும் அலைகடல். உப்பளத்தில் நாங்கள்.

கால்களுக்குச் சக்தியிருந்தமட்டில் ஓடினோம். மரணத்தைக் கண்டு நாங்கள் எவ்வளவு பயந்துவிட்டோம்! மனிதனுக்குத் தன் உயிரின்மேல் எத்துணை ஆசையிருக்கிறதென்பது அன்றுதான் விளங்கியது. அண்ணனாவது தம்பியாவது? யாரை யார் பார்த்தார்கள்! ஆளுக்கொரு பக்கம் கண்ணிற்குப் பட்ட திசையில் பறந்தோம்!

துரத்திவந்த கடலுக்கு அந்த வேகம் எங்கிருந்துதான் வந்ததோ? அசுரவேகம். சமுத்திரத்தின் ஆவேசத்தின் முன்பு சாதாரண மனிதன் எம்மாத்திரம்!

எங்களை முந்திக்கொண்டது கடல். ஊரெல்லாம் வெள்ளக்காடு. வீடுகளெல்லாம் மிதக்கும் தீவுகளாயின. எதுவும் மிஞ்சவில்லை. ஆடுமாடு, தட்டுமுட்டுச் சாமான், பயிர்பச்சை, மரம்செடி அத்தனையும் வெள்ளத்தில் கலந்தன.

நல்ல வேளையாகக் கடற்பெண்ணாளின் கரத்திற்கு எட்டாத உயரத்தில் ஒரு குன்று இருந்தது. அந்தக் குன்று அடைக்கலம் தந்தது எங்களுக்கு.

குன்றில் போய்நின்ற பிறகே எனக்குச் சரியாக மூச்சுவிட முடிந்தது. என் உடம்பையெல்லாம் தடவிப் பார்த்துக்கொண்டான். உணர்ச்சியே இல்லை. மரத்துவிட்டிருந்தது. என்னைச்சுற்றி இரண்டாயிரம் பேருக்கு மேல் இருக்கும். ஒரே கும்பல். அவர்கள் எல்லாம் பிரளயத்திலிருந்து தப்பியவர்கள்; போகிறார்கள், இந்தப் பூவுலகில் வாழட்டும் என்று சமுத்ராதேவி தயை காட்டியிருந்தாள் அவர்களுக்கு.

தங்கள் உயிர் பத்திரமென்று தெரிந்தவுடன் தங்களுக்கு வேண்டியவர்களெல்லாம் தப்பிவந்துவிட்டார்களா என்று சரிபார்க்கத் தொடங்கினார்கள் அவ்வளவு பேரும்! அங்கே

ஜீவமரணப் போராட்டத்தில் ஓய்ந்துபோய்ச் சுய உணர்வின்றிக் கிடந்தவர்களும் முக்கி முனகிக் கொண்டு அரைகுறை நினைவில் மயங்கிக் கிடந்தவர்களும் பலர்.

மாடசாமி அண்ணனை என் கண்கள் தேடின. நின்று கொண்டிருந்தவர்கள், படுத்திருந்தவர்கள் ஒருவர் பாக்கி விடாமல் பார்த்தேன். ஐயோ! மாடசாமி அண்ணன் அங்கே இல்லை. ஆம்! பொங்கிவந்த கடலுக்கு அவர் இரையாகிவிட்டார். வேலைக்கு வரும்போது இருவராக வந்தோம்; வீடு திரும்பும்போது நான் ஒருவன்!

கடல் வடியும்வரை குன்று எங்களுக்கு அடைக்கலம் தந்தது. வடிந்து வெளியே கால் பாவலாமென்று தோன்றியவுடன் குன்றை விட்டுப் புறப்பட்டேன்.

மாடசாமி அண்ணன் எங்காவது உயிருடன் இருக்கமாட்டாரா என்று எனக்கு ஒரு நப்பாசை. வெள்ளக்கழியில் அங்குமிங்கும் தேடினேன். கண்ணிற்பட்ட பிணங்களையெல்லாம் உற்றுப் பார்த்தேன். கோரைப்புறக்களுக்கிடையில் சிக்கிக்கிடந்தார் நம் அருமை அண்ணன். உடம்பைத் தொட்டுப் பார்த்தேன். பனிக்கட்டி போன்று ஜில்லிட்டது. மூக்கில் கைவைத்துப் பார்த்தேன். மூச்சு வரவில்லை. உடம்பை அசைத்துப் பார்த்தேன். அவர் உயிர்போயிருக்கக்கூடாதென்னும் ஆசையில் இப்படி எல்லாம் பைத்தியக்காரத்தனமாக நடந்துகொண்டேன். என்ன செய்தும் பலனில்லை. அவர் செத்துவிட்டார்.

உடனே அவர் வீட்டு நினைவு எனக்கு வந்தது. அவர் மனைவியும் குழந்தையும் எப்படி இருக்கிறார்களோ? அவர்களுக்குப் போய்ச் சேதியை எப்படிச் சொல்வது?

வெளியே புயல் ஓய்ந்துவிட்டது; வானம் வெளி வாங்கிவிட்டது; சமுத்திரம் சாதுவாக அடங்கிவிட்டது. ஆனால் என் உள்ளத்தில் பெரும்புயல்!

'வேலைக்கு இட்டுச்சென்ற அண்ணனைப் பிணமாக விட்டு வருகிறேன்' என்று அண்ணியிடம் சொல்வதா? அவர்கள் முகத்தில் எப்படி விழிப்பேன்? 'சொந்த உயிரை மட்டும் காப்பாற்றிக்கொண்டான்; அண்ணனை மாளவிட்டான் கயவன் என்று அவர்கள் எண்ணமாட்டார்களா?

மாடசாமி அண்ணன் பிணமாகக் கிடந்தார்; நான் நடமாடும் பிணமாக ஊரை நோக்கி நகர்ந்தேன்.

மாடசாமி அண்ணனுக்குக் கல்யாணமாகி ஒரு வருடம்தான் இருக்கும். தங்கச்சிலை போன்ற புதுமனைவி, ஒரு மாதத்திற்கு முன்பிறந்த பச்சைக்குழந்தை – அவர்களைத் தவிக்கவிட்டுக் கண்ணை மூடிவிட்டார் அவர்!

தம்பி, நம் வீட்டைப் பற்றி, நம் அப்பா, அம்மா யாரையும் பற்றிக்கூட நான் அவ்வளவு கவலைப்படவில்லை. பக்கத்து வீட்டுக்கு மரண ஓலை எடுத்துச்செல்லும் அளவுக்கா நான் விடப்பட வேண்டும்? என்னையும் பாழும்வெள்ளம் இழுத்துச் சென்றிருக்கக் கூடாதா? நான் ஏன் உயிர் பிழைத்தேன்?

உள்ளத்தில் பயங்கர அமளி! அமைதி கண்ணனுக்குக் கூடத் தெரியவில்லை. எப்படியோ நம் ஊருக்கு வந்து சேர்ந்தேன். என்னை அறியாமல் மாடசாமி அண்ணன் வீட்டுக்கு என் கால்கள் நடந்தன.

அங்கே நான் கண்ட காட்சி! வீடு இடிந்து கிடந்தது. சுற்றிலும் இடிபாடுகள். ஆள் அரவமே இல்லை. அண்ணியும் குழந்தையும் எங்கே போனார்கள்? ஒருவேளை அவர்களையும் ஊழிக்காற்று சூறையாடிவிட்டதா? அப்படி நினைக்கவும் முடியவில்லை எனக்கு. செய்வதறியாது திக்பிரமை பிடித்தவன்போல் வீட்டைப் பார்த்துக்கொண்டே நின்றேன்.

அங்கு அப்படி எவ்வளவு நேரம் நின்றிருப்பேனோ. நம் தங்கை வந்து ‘அண்ணா’ என்று கூப்பிட்ட பிறகுதான் திரும்பிப் பார்த்தேன். கருவாட்டுக்கடையில் ரோஜாவின் நறுமணம் வீசியது போன்றிருந்தது அவளை அங்கே கண்டது. அப்படியே கட்டித் தழுவிக்கொண்டேன். ‘அண்ணி, பிள்ளைகளெல்லாம் எங்கே கமலம்? என்று உடனே கேள்வி போட்டேன். கமலம் பதில் சொல்லவில்லை. கண்ணைத் துடைத்துக்கொண்டாள்.

‘அவர்களும் செத்துவிட்டார்களா கமலம்?’ என்றேன் ஆவேசத்தோடு. ‘ஆம் அண்ணா! வீடு இடிந்ததில் குழந்தையும் அண்ணியும் நசுங்கிச் செத்துவிட்டார்கள். இப்பொழுது. தான் அதிகாரிகள் சவங்களை எடுத்துச் செல்கிறார்கள் கமலம் தேம்பியபடி சொன்னாள்.

நான் வானவெளியை அண்ணாந்து பார்த்தேன். ‘மாடசாமி அண்ணன் எங்கே அண்ணா?’ கமலம் கேட்டாள்.

‘கமலம், அவரையும் சமுத்திராதேவி அழைத்துக் கொண்டாள்’ என்று அமைதியாகச் சொன்னேன். வாழ்வில் இணைபிரியாத அவர்கள் சாவிலும் ஒன்றுபட்டனர் போலும்!

மூன்று உயிர்களின் மரணப்பிணைப்பு என்னைப் பிரமிக்க வைத்துவிட்டது. அந்தத் திக்கை நோக்கி நானும் கமலமும் கையெடுத்துக் கும்பிட்டோம். தம்பி, இது வேதாரண்ய அழிவில் ஒரு சிறு அத்தியாயம்தான். செத்தவர்களின் கதைகளை எல்லாம் எழுதுவதென்றால் அது மகாபாரதமாகிவிடும். அப்புறம் என்ன?

‘எதையும் தாங்கும் இதயம் வேண்டும்’ என்னும் நம்பிக்கையோடு இருந்துவருகிறோம். என்னோடு உடன்பிறந்த உனக்கும் அந்த மனவலிமை நிச்சயம் இருக்கும்.

உன் அன்பு அண்ணன்,

கருப்பையா

முருகுவின் சிறுகதைகளில் காணப்படும் சிறப்பு அம்சங்கள்:

முருகுவின் கதைகள் நான்குமே 1955 இல் தமிழ்முரசு பத்திரிகையில் வெளிவந்தவை. இவை நான்கும் தமிழகப்பின்னணியில் எழுதப்பட்டவை. ஏறத்தாழ அறுபது ஆண்டுகள் கழித்துப் படிக்கும்போதும் அவை வாசகரின் மனத்தில் ஆழ்ந்த பாதிப்பை ஏற்படுத்திவிடுகின்றன. இவை தவிர இன்னும் சில கதைகளை அவர் எழுதியிருக்கலாம். அவை கடுமையான தேடலின் விளைவாகக் கிடைக்கலாம்.

அன்னையின் சோகம் : கதைக்கருவும் கதையின் பலமும்

அன்னையின் சோகம் என்னும் கதையில் தாய் ஒருத்தி தன் மகனைப் பறிகொடுத்துவிட்டுத் துன்பப்படுவதுதான் கதைக்கரு. இறப்பு கல்லான மனத்தைக்கூட உருகவைத்துவிடும் ஆற்றல் கொண்டது. அதிலும் தன் ஒரே மகனை இழந்த விதவைத்தாயின் புத்திரசோகம் அவளை எப்படியெல்லாம் அலைக்கழிக்கிறது என்பதைக் கதையை வாசிப்போர் நன்கு உணர்வர். கதையின் கரு சாதாரணமானது என்று இன்றைய எழுத்தாளர்கள் பலரும்

நினைக்கலாம்.ஆனால் கதை சொல்லப்பட்டிருக்கும் முறை மிக அற்புதமாக உள்ளது. அந்தக்கதையை வாசித்துமுடித்துவிட்ட பின்னரும் மகனை இழந்த தாயின் சோகம் நம்மைக் கட்டிப்போட்டு அந்த உணர்வு அலைகளிலிருந்து வெளிவரமுடியாமல் செய்துவிடுகிறது. அசையாத கட்டடத்தைக்கூட அசைத்துவிடுகிறது அன்னையின் சோகம். உணர்ச்சிச்செறிவுமிக்க மொழிநடை இக்கதையின் பலம். கதை முழுவதும் தங்கம்மாளின் வெவ்வேறு விதமான உணர்வுகள் அதாவது தாயின் ஏக்கம், தாயின் தவிப்பு, தாயின் கவலை, தாயின் சோகம்,தாயின் நிம்மதி, மற்றவர்கள் குழந்தை மீது கொண்டுள்ள ஆசை, நல்ல பிள்ளையைப் பெற்ற தாயின் பெருமிதம், குழந்தையின் வலி எனப் பல்வேறு உணர்வுகளின் கலவையை இக்கதையில் ஊடாடவிட்டுள்ளார் முருகு.மேலும் பல்வேறு மனிதர்களையும் இக்கதையில் நாம் சந்திக்கிறோம். நோயாளிகள், அவர்களின் குடும்பத்தார், மருத்துவர்கள், தாதிகள், மருத்துவமனைச்சிப்பந்திகள் எனப் பலதரப்பட்ட மனிதர்களைச் சந்திக்கிறோம். ஆனாலும் தாய் தங்கம்மாளின் சோகத்தை முருகு ''சிக்கெனப் பிடிக்கும்'' வார்த்தைகளில் சிக்கவைக்கிறார். சான்றாகக் கீழ் வரும் கதைப்பகுதியைக் கூறலாம்.

''ஆஸ்பத்திரி கட்டடம் அசையாமல் இருந்தது. அது இம்மாதிரி எத்தனையோ மரணச்செய்திகளைக் கேட்டு உரம்பெற்றிருந்தது. குழந்தை சாவு அதற்கொன்றும் அதிர்ச்சி அளிக்காதது வியப்பில்லை.

ஆனால் தங்கம்மாளோ கதறினாள். அவளுக்கு இனிப் புதல்வன் இல்லை. ''நான் இனித் தனிக்கட்டை. அவன் போனபின் எனக்கேன் வாழ்வு?'' என்று கதறினாள். ஆஸ்பத்திரியே கிடுகிடுத்தது. ''

''ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ மாநிலத்தீர்'' என்னும் தத்துவத்தைப் பின்னணியாகக் கொண்டு கதை பின்னப்பட்டிருந்தாலும் சாதாரண மனிதர்கள் தத்துவங்களை எல்லாம் அசாதாரணமாகத் தான் எடுத்துக்கொள்கிறார்கள் என்பதை அன்னையின் சோகம் நிரூபிக்கிறது.

முருகு காட்டும் சமுதாயம்:

முருகு சமுதாய அக்கறை மிக்கவர் என்பதால் அக்காலகட்டத்தில் இருந்த சமுதாயச்சூழலையும் இக்கதை பிரதிபலிக்கத் தவறவில்லை. இக்கதையில் தங்கம்மாளின் வாழ்க்கைப்பின்னணியை விவரிக்கும் முருகு அக்காலகட்ட மக்களின் வாழ்க்கை முறையையும் படம்பிடிக்கிறார். தன் பிள்ளையை ஊட்டி வளர்ப்பது போன்றே ஊரார் பிள்ளையையும் ஊட்டி வளர்க்கும் மனப்பக்குவம் அக்காலமக்களிடையே இருந்தது.தங்கம்மாளின் செல்லப்பிள்ளை ஊருக்கே செல்லப்பிள்ளையாகிறான்.ஐம்பதுகளின் மத்தியில் மக்கள் எவ்வாறு பரந்த மனத்தினராக வாழ்ந்தார்கள் என்றும் இக்கதை மூலம் அறிகிறோம்.

தங்கம்மாள் தன் ஒரே பிள்ளையான குழந்தையைச் சேர்ந்தாற்போல் ஒரு மணி நேரம் கூட வைத்துப் பார்த்துக்கொள்ளமுடியவில்லையே என்று வருந்தக்கூடிய அளவுக்கு அவள் பிள்ளையை ஊரார் எடுத்துச் சென்று விடுகின்றனர். இப்படிப்பட்ட நிலையை இந்நூலாசிரியர் கண்கூடாகத் தமிழகத்தில் பார்த்திருக்கிறார்.மலாயாவிலும் அப்படிப்பட்ட நிலை இருந்ததை உறவினர்களின் வாழ்க்கை அனுபவத்தின்வழி பார்த்தும்,கேட்டும் உள்ளார். சுயநலம் சிறிதும் இல்லாமல் அக்காலத்தில் மக்கள் வாழ்ந்ததை முருகு படம்பிடித்திருப்பது மிகவும் யதார்த்தமானது. இப்படிப்பட்ட நிலையில் தான் '' ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்'' என்ற பழமொழி பிறந்திருக்குமோ என எண்ணவேண்டியுள்ளது.

''ஊராரின் பிள்ளை அவன். அண்டைவீட்டுக்காரர்கள் அவனைத் தம் வீட்டிலேயே வைத்திருக்க ஆசைப்படுவர். அடுத்ததெரு உறவினரும் இவ்விருப்பங்கொண்டு அடிக்கடி குழந்தையைத் தூக்கிச் சென்றுவிடுவர்.''

ஐம்பதுகளின் மத்தியில் இந்தியா, மலாயா போன்ற நாடுகளின் மருத்துவ வசதிகள் எவ்வாறு அமைந்திருந்தன என இக்கதையின் வழி நாம் அவதானிக்கமுடிகிறது. இன்று நாம் சந்திக்கின்ற மருத்துவ மனைகள் வேறு. அன்று நமக்கு முருகு காட்டிய மருத்துமனைக்காட்சிகள் வேறு. பணவசதிக்கு ஏற்ப

மருத்துவமனை வசதிகள் வேறுபட்டிருந்தன என்பது குறிப்பாய்ப் புலப்படுத்தப்படுகிறது. அன்று வித்தியாசமான முறையில் அறுவைச்சிகிச்சை நடைபெற்றது என்பதைக் கதையோட்டத்தில், போகிறபோக்கில் முருகு சொல்லிவிடுகிறார்.

ஆப்பரேஷன் நாள் வந்தது. மகனை அழைத்துக்கொண்டு தங்கம்மாள் ஆப்பரேஷன் ஹாலுக்குப் போனாள். ஒருவருக்குப் பின் ஒருவராக வரிசையாக ஆப்பரேஷன் நடந்தபடி இருந்தது.

குழந்தை என்று கூப்பிட்டார் டாக்டர். அவன் உள்ளே போனான். தாயும் அவனைத் தொடர்ந்தாள் கதவண்டை நின்ற வேலையாள் அவளைத் தடுத்துவிட்டான். அவள் மனம் என்னவோ பாரமாய் இருந்தது. பல்லைக் கடித்துக்கொண்டு வெளியே உட்கார்ந்திருந்தாள்.

ஐம்பதுகளின் மத்தியில் மக்களிடையே மூட நமபிக்கைகள் வேரூன்றியிருந்தன. நோய்க்கு மருந்து தேடாமல் மந்திரவாதியையும், ஜோதிடரையும் மக்கள் தேடினார்கள் என்பது தங்கம்மாளின் வாழ்க்கை மூலம் சொல்லப்படுகிறது. தங்கம்மாளின் நிலையை சோதிடரும் மந்திரவாதியும் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டனர் என்பதையும் முருகு பதிவு செய்கிறார்.

''சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு மந்திரவாதிகள் சில தந்திரங்களைக் கூறினர். சோதிடர்களும் பரிகாரம் செய்யச் சொன்னார்கள். எல்லாவற்றுக்கும் மாற்றுத் தேடினாள். ஆனால் முடிவு....?''

மக்கள் மூடநம்பிக்கைகளுக்கு ஆளாவது நெருக்கடியான சந்தர்ப்பங்களில் தான் என்பதும் நெருக்கடிகளிலிருந்து விடுபடும் வழிகளில் ஒன்றாக மூட நம்பிக்கையைப் பின்பற்றுவதும் மனித மனத்தின் இயல்பு. உளவியல் ரீதியான இந்த உண்மையையும் இக்கதையில் காட்டுகிறார் முருகு.

சிறுகதையின் அமைப்பும் அழகும்:

சிறுகதைத்தொடக்கம் :

அன்றைய காலகட்டத்தில் சிறுகதையின் இலக்கணங்கள் என்று கூறப்பட்ட அனைத்து அம்சங்களும் இக்கதையில் பொருந்தியுள்ளன. சிறுகதையின் தொடக்கவரிகள் வாசகர்களின் ஆர்வநிலையைத் தூண்டும் வகையில் அமைந்துள்ளது.

''ஆபரேஷன் முடிந்தது. குழந்தையை படுக்கையிலேயே கொண்டுவந்து போட்டார்கள். அவன் பேசவில்லை. கண் மூடியிருந்தது. அவனுக்குத் தன் நினைவே இல்லை.''

இவ்வரிகளை வாசிக்கும் ஒரு வாசகரின் உள்ளத்தில், குழந்தை யார்? குழந்தைக்கு ஏன் ஆப்பரேஷன்?, எங்கே ஆப்பரேஷன்?, ஏன் அவனுக்குத் தன் நினைவு இல்லை? அவன் இறந்து விட்டானா? என்பன போன்ற கேள்விகள் நிச்சயம் பிறக்கும்.அதற்கு விடைகாணும்முகமாகக் கதையைத் தொடர்ந்து வாசிப்பார். இவ்வாறு தொடங்குவது கதையின் நல்ல தொடக்கம் ஆகும்.

சிறுகதையின் ஓர்மை:

குழந்தை செல்லப்பிள்ளையாக வளர்வது, அவனுக்குச் சிறுவயது முதற்கொண்டே வயிற்றுவலி ஏற்படுவது, அவனுக்குத் தங்கம்மாள் கைவைத்தியம் செய்வது, மருத்துவரை சந்திப்பது, ஆப்பரேஷனுக்கு வருமாறு மருத்துவர் சொல்வது, அறுவைச்சிகிச்சை நடப்பது, குழந்தை இறந்துபோவது, தங்கம்மாளின் சோகம் என அனைத்து நிகழ்ச்சிகளும் கதையின் மையத்தை நோக்கியே செல்கின்றன. இவ்வாறு அமைவதால் கதையின் ஓர்மை (unity) சிறக்கிறது.

சிறுகதையின் முடிவு:

''ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார்

வருவரோ' என்னும் உண்மையை நன்கு உணர்ந்தவர்களாக அவர்கள் தோன்றினார்கள். குழந்தையைக் கொள்ளை கொடுத்த தங்கம்மாளோ அழுதுகொண்டேயிருந்தாள். அது அன்னையின் சோகம்!''

எனக் கதையின் முடிவு கச்சிதமாக அமைந்து சிறந்த சிறுகதையாகிறது.இந்த முடிவு நம்முள் அடுத்த கதைக்குத் தொடக்கமாகவும் அமைந்துவிடுகிறது

சிறுகதையின் தலைப்பு:

தங்கம்மாள் என்ற ஒரு தாய் தன் செல்லப்பிள்ளையான குழந்தையைச் சாகக்கொடுத்துவிட்டுப் படும் துன்பத்தை உணர்ச்சி மிக்க சொற்களால் விவரித்திருக்கும் இக்கதைக்குத் தலைப்பு ஆர்வமூட்டும் வகையில் செவ்வையாகப் பொருந்தியுள்ளது. கதையின் மொழிநடை வாசக அனுபவத்திற்கு விருந்தாக அமைகிறது.

சிறுகதை -2

சின்னப்பயல்

முருகு எழுதிய இச்சிறுகதை ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் கதை இருக்கிறது என்பதற்குச் சான்றாக அமைகிறது. சின்னப்பயல் என்பது குழந்தையின் சாமர்த்தியத்தை மையமாகக் கொண்டு பின்னப்பட்ட கதை ஆகும். இக்கதையில் பாண்டியன் என்னும் குழந்தை தான் சின்னப்பயல் என்று அழைக்கப் படுகிறான். பாண்டியன்,செல்வம் என்னும் இரண்டு பெயர்களும் அவருடைய பிள்ளைகளின் பெயர்களாகும்.

மனைவியின் பெயரும்,தாயாரின் பெயரும் மாற்றப்பட்டுள்ளன.தன் குழந்தையின் புத்திசாலித்தனத்தைக் கதையாக வடிப்பதன் மூலம் கதைக்கு வேண்டிய கருப்பொருளாக எதனையும் அமைத்துக்கொள்ளமுடியும் என்ற சிந்தனையை இளம் எழுத்தாளர்கள் மனத்தில் பதிக்கிறார் முருகு என எண்ணத் தோன்றுகிறது.

சிறுகதைக்குரிய அனைத்து அம்சங்களும் செவ்வையாய்ப் பொருந்தியுள்ள இக்கதையும் சிறுகதை எழுதுவோர் முன்னுதாரணமாகக் கொள்ளவேண்டிய கதை ஆகும்.

விளையாடிக்கொண்டிருந்த பாண்டியனைக் காணவில்லை என்று தன் நண்பன் ஆறுமுகத்தோடு பேசிக்கொண்டிருந்த குருசாமியிடம் கூறுகிறாள் குருசாமியின் தாயாரான மீனாட்சியம்மாள்.

குருசாமி தன் பிள்ளையைத் தேடுகிறான் . தன பிள்ளையின் சாமர்த்தியம் அவனுடைய நினைவுக்கு வருகிறது. தன் மனைவி சரோஜாவுடன் ஏற்பட்ட சிறு ஊடலைப் பாண்டியன் பக்கத்து வீட்டு மாமா ஆறுமுகத்தின் தலையீட்டால் தீர்த்துவைத்தது குருசாமியின் நினைவுக்கு வருகிறது. குழந்தை இல்லாமல் வீடு திரும்புவதற்கு அவன் மனம் ஒருப்படவில்லை.இதற்கிடையில் பாண்டியன் பெரியவர் ஒருவரின் உதவியால் வீடு திரும்புகிறான். ஒரு சிறுவன் தன் வயதையும் மீறிப் பெரிய மனிதர் தோரணையில் அப்பா அம்மாவைச் சமாதானப்படுத்தி ஒன்றுசேர்ப்பதும், தீராத விளையாட்டுப்பிள்ளை என்று பாரதியார் தீட்டிய சித்திரத்துக்கு உதாரணமாக விளங்குவதும் அந்தப்பாத்திரத்தை மறக்கமுடியாத நிலைக்குகொண்டுசெல்கிறது.

சின்னப்பயல் என்னும் பெயர் செல்லமாகச் சூட்டப் பட்டிருந்தாலும் கதை அவனைச் சுற்றியே நிகழ்வதால் கதைத்தலைப்பும் சிறப்பாக அமைந்துள்ளது. ஆர்வநிலையையும் தூண்டுவதாயும் உள்ளது. பாண்டியன் சின்னப்பயலில்லை; அவன் பெரிய மனிதனாக்கும் என்று வாசகர்களை எண்ணவைக்கிறார் முருகு.

சிறுகதை – 3

காதல்கதை

ஐம்பதுகளின் மத்தியில் எழுதப்பட்ட காதல் கதை சற்றே வித்தியாசமானது. இல்லாத காதலை இருப்பது போன்று புனைந்து எழுதப்பட்டது. புதிதாகத் திருமணமான தம்பதிகள் இடையே காதலைப்பற்றிய உரையாடலுடன் கதை தொடங்குகிறது. மனைவி கணவனிடம் திருமணமாவதற்கு முன்பு யாரையும் காதலித்திருக்கிறீர்களா? எனக் கேட்கக் கணவனோ யாரையும் காதலிக்கவில்லை என உண்மையைக் கூறுகிறான்.ஆனால் அதனை மனைவி நம்பவில்லை. அவளுக்காகக் காதல்கதையை உருவாக்கிக் கூறுகின்றான்

கணவன். கதைக்குள் கதை என்ற உத்தியில் கதை தொடர்கிறது. அதுவும் பள்ளிப்பருவத்தில் கோகிலம் என்ற பெண்ணைக் காதலித்ததாகச் சுவைபடக் கூறுகின்றான். உணர்வுப்பூர்வமான வருணனைகள் மனைவியை மட்டுமல்ல நம்மையுமே நம்பவைத்துவிடுகின்றன. ஒரு கட்டத்தில் - சுவாரஸ்யமான முறையில் காதலியின் ஸ்பரிசம் பற்றிக் கூறுகையில் மனைவி கதையை நிறுத்தச் சொல்கிறாள். அவளே கதையைப் பொய் என்றும் கற்பனை என்றும் கூறுகிறாள். கணவனும் கற்பனைதான் என்கிறான். இருவரும் மகிழ்ச்சி அடைகிறார்கள்.

மகிழ்ச்சியாக ஆரம்பித்த கதை மகிழ்ச்சியோடு முடிகிறது. ''உனக்கு நான் எனக்கு நீ '' என்ற பாடல் அடுத்தவீட்டு ரேடியோவில் ஒலிப்பதாகக் கதையை முடித்திருக்கிறார் முருகு. மிகவும் யதார்த்தமான முறையில் கதை சொல்லப்பட்டிருக்கிறது.

இக்கதையில் பெண்களின் குணாதிசயங்கள் மனைவியின் மூலமும் கோகிலத்தின் மூலமும் வெளிப்படுத்தப்படுகின்றன. ''சந்தேகக்கோடு அது சந்தோஷக் கேடு'' என்று கவிஞர் கண்ணதாசன் பாடிய உண்மை கதையின் மூலம் மறை பொருளாகக் கூறப்படுகிறது.'காதற்சுவை நனி சொட்டச் சொட்ட'க் கதை கூறப்பட்டுள்ளதால் கதை வெளிவந்த சமயங்களில் இளைஞர்களைக் கவந்திருக்கும் என நம்பலாம். காதல்கதை யாருடைய காதல்கதை ? அது ஜெயித்ததா? தோற்றதா ? என்றெல்லாம் சிந்திக்கவைக்கும் தலைப்பு. கதையில் காதலின் வகைகளைக் கண்டதும் காதல், கடிதக்காதல், கடற்கரைக்காதல், சினிமாக்காதல், மோட்டார்க்காதல் என வகைப்படுத்தியிருப்பது, நகைச்சுவை மிக்க மொழிநடை ஆகியவை கதைக்கு மேலும் மெருகூட்டும் சிறப்பு அம்சங்கள் ஆகும்.

சிறுகதை- 4

புயல்

மழையின் வருணனையோடு கதை தொடங்குகிறது. உப்பளத்தொழிலாளர் குடும்பத்தில் பிறந்த தம்பி ராமையா மலாயாவுக்குப் பஞ்சம் பிழைக்க வந்திருக்கிறான். அப்போது வேதாரண்யத்தில் வீசிய கடும்புயலால் பல உப்பளத் தொழிலாளர்களின் குடும்பங்கள் ஏராளமான எண்ணிக்கையில்

கடுமையாகப் பாதிக்கப்பட்டன. புயல் அவர்களை எவ்வாறு எல்லாம் பாதித்தது,பக்கத்துவீட்டு மாடசாமியின் இறப்பு, துன்பங்களிலிருந்து மக்கள் எவ்வாறு தப்பினார்கள் என்பது போன்ற செய்திகளை எல்லாம் ராமையாவுக்குக் கடிதம் மூலம் தெரிவிக்கிறார் அவரது அண்ணன் கருப்பையா.

கடித உத்தியில் கதையைக் கூறிச் செல்வதால் கதையை ஆர்வத்தூண்டலோடு படிக்க முடிகிறது.இதற்குக் கதையின் மொழிநடையும் முக்கியப் பங்காற்றுகிறது. மொத்தத்தில் உள்ளத்தை உருக்கும் கதையாகவும் அமைகிறது புயல் என்னும் சிறுகதை. தமிழ்நாட்டில் ஏற்பட்ட புயல் வெள்ளம் பற்றித் தமிழ்முரசுக்கு ஏராளமான கடிதங்கள் வந்திருந்ததாகவும், அதன் விளைவாகப் பிறந்த கற்பனையில் இக்கதையை எழுதியதாகவும் முருகு குறிப்பிடுகிறார்.

இது கற்பனைக்கதை என்று முருகு கூறியிருந்தாலும் அவர் காட்டியுள்ள வருணனைகள் மிகவும் தத்ரூபமாக நாமே புயலில் சிக்கிக் கொள்வது போன்ற உணர்வைத் தருவனவாக அமைந்துள்ளன. சிறுகதை இலக்கணங்கள் நன்றாகப் பொருந்தியுள்ள கதை புயல் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

புதிய சாதனையாளர் :

தமிழ்முரசில் ஏழு ஆண்டுகள் பணிபுரிந்த வேளையில் அவர் செய்த ஆக்கரமான பணிகள் அவருக்கு எத்தகைய மதிப்பைக் கொடுத்தன என்பதை மலேசியத்தமிழர்கள் நன்கு அறிவர். முருகு தமிழ்நேசனின் ஆசிரியராகப் பணியாற்றப் போகிறார் என்று கேள்விப்பட்டதுமே தமிழ்நேசன் ஒரே நாளில் ஐயாயிரம் பிரதிகள் விற்பனையாயின. பத்திரிகை வாங்குவோரின் எண்ணிக்கையைப் பெருக்கியதோடு அவர்களை வாசிக்கவும் வைத்த பெருமை முற்கு என்ற பத்திரிகை ஆசிரியரின் வெற்றியாகும்.

பொறுப்புணர்வு மிக்க பத்திரிகையாளரான முருகு பத்திரிகை உலகில் சிறந்த சாதனையாளராகவும் போற்றப்படுகிறார். கல்வித் தகுதியை மட்டும் கொண்டு ஒருவர் நாளிதழின் ஆசிரியராகிட இயலாது; சமுதாயத் தொடர்பு இன்றியமையாது வேண்டப் படுவதாம். இளமை முதலே சமுதாயத் தொடர்பு மிக்கவர் முருகு.

ஆதலால் நாளிதழ்த் துறையில் அவர் சாதனைகள் பல புரிந்தார்.

''அஞ்சுவது அஞ்சாமை பேதமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்'

என்னும் குறளுக்கு இலக்கியமாய் இலங்கிச் சமுதாயத்தின் கருத்துகளை அஞ்சாமையோடு வெளியிட்டார். முருகு தனிமனிதச் செல்வாக்குக்கு வளைந்து கொடுத்ததேயில்லை. எந்தச் சமுதாயத் தலைவரோடும் தொடர்பு கொண்டு உரிமையோடு கருத்துத் தெரிவிக்கும் மாண்பினர் முருகு.

பத்திரிகை ஆசிரியர்களுக்குத் தொலைநோக்கும் மிகவும் வேண்டப்படுவதொன்றாம். தூரநோக்கினை அடையப் பல வழிகளைக் கையாண்டார் முருகு. அவற்றைக் குறுகிய நோக்கமுடையவர்கள் குறைகூறி உள்ளனர். பாராட்டுரைகளைப் பெற்றதைப் போலவே முருகு அவர்கள் பழிப்புரைகளையும் பெற்றுள்ளார்.

பத்திரிகைத்துறையில் ஈடுபட்டோருக்குச் சந்தனமும் பூசப்பெறும்; சேறும் வாரியிறைக்கப்படும். பாராட்டுரை வழங்கப்பட்டவிடத்துத் தருக்கியோ, செருக்கியோ நில்லாத அவர், பழிப்புரை கூறப்பட்டவிடத்துத் துவண்டோ, சோர்ந்தோ நின்றாரிலர்.

''போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து சொல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும், நில்லேன்! அஞ்சேன்'

என்ற மனநிலையே அவருக்கு இருந்தது.

சமயப்பணியும் தமிழ்நேசனும்:

முருகு அவர்கள் திராவிடக் கழகத்தில் இருந்தவராயினும், புரட்சிக்கவி பாவேந்தரிடம் அளவிறந்த அன்புடையார் ஆயினும் சமயத்தையும் தமிழ்நேசன் வழியே மக்களிடையே பரப்பினார். தமிழ்நேசன் ஞாயிறு மலரில் 'சைவ விளக்கம்' என்ற பகுதியைத் தொடங்கிச் சைவ சித்தாந்த விற்பன்னரும், வித்தகருமான முரு.பழ. இரத்தினம் செட்டியார் அவர்களை எழுதுமாறு கேட்டுக் கொண்டார் முருகு. இதனால் சைவம் மலேசியாவின் மூலை முடுக்குகளிலெல்லாம் பரவிற்று.

எளிய, இனிய நடையில் எழுதிய இரத்தினம் செட்டியாரும், மேற்படி செட்டியார் அவர்களை எழுதத் தூண்டிய முருகு அவர்களும் மலையகத் தமிழிலக்கிய வரலாற்றில் இடம்பெறத்தக்கோராவர். இவண் சைவ சித்தாந்த வித்தகர் கூறும் உண்மை மனங்கொளத்தக்கதாகும்.

''தமிழ்நாட்டில் தமிழ் இலக்கியம் பயின்றவர்களிடையே கூடச் சைவசித்தாந்தம் பற்றிப் பேசுவோர் குறைவு. மலேசியாவில் சித்தாந்த முழக்கம் செய்த ஒரே பத்திரிகை 'தமிழ்நேசன்' தான்.முருகு அவர்கள் செய்து வருகிற பணிகள் பலவற்றுள் இச்சமயப்பணியும் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்'

முருகுவும் முத்தான தலையங்கங்களும்:

பத்திரிகைத்துறையில் தலையங்கங்கள் தலையாய இடம்பெறுகின்றன. தலையங்கங்கள் எழுதுதற்கு முன் அத்தலையங்கம் தொடர்பான செய்திகளை முழுமையாகத் தெரிந்து கொண்டு ஆய்வுக் கண்ணோட்டத்துடன் அதனை அணுகுவது முருகு அவர்களின் வழக்கம்.

> தேரான் தெளிவும் தெளிந்தார்கண் ஐயுறலும்
> தீரா இடும்பை தரும்'

என்னும் வள்ளுவப் பெருமானின் வாக்கினை அவர் பின்பற்றினார் என்பதில் தவறில்லை. பொறுப்புமிக்க பத்திரிகை ஆசிரியரின் திறமை அப்பத்திரிகையின் தலையங்கங்களிலிருந்தே தெரிய வரும். இக்கூற்று முருகுவைப் பொறுத்தவரை முற்றிலும் உண்மை. இவருடைய தலையங்கங்கள் மூலம் மக்கள், அரசியல்வாதிகள் ஆகியோர் எழுச்சியும் உற்சாகமும் பெற்றனர்.

இவர் தமிழ்நேசனில் பணியாற்றிய போது எழுதிய தலையங்கங்கள் மட்டுமின்றிப் புதிய சமுதாயம் என்னும் இதழில் எழுதிய தலையங்கங்களும் முருகுவின் பல்துறை அறிவையும், நுட்பமான ஆய்வுக்கண்ணோட்டத்தினையும் பிரதிபலிப்பன வாகும். சான்றாகப் புதிய சமுதாயத்தில் வெளிவந்த தலையங்கங்களைக் கீழே காணலாம்.

எல்லையில்லா நிம்மதி *(25.04.1977)* கம்யூனிஸ்ட் பிரச்சனை பற்றியது.

தேர்தல்களும் தீர்ப்புகளும் (10.05.1977) இந்தியத்தேர்தல் பற்றியது.

கேள்விக்கொத்து (25.05.1977) ம.இ.கா.பற்றியது.

மாணவர்களின் மயக்கம் (10.06.1977)போதைப்புழக்கம் பற்றியது.

வீட்டுமனை நிலங்கள் (25.06.1977) தோட்டத் தொழிலாளர்களுக்கு வீட்டுநிலங்கள் வழங்குவது பற்றியது.

புதிய சகாப்தம் (10.07.1977)தேசியத்தோட்டத் தொழிலாளர் சங்க ஒப்பந்தம் பற்றியது.

சமுதாய அரண் (25.07.1977) காப்புறுதி நிறுவனங்கள் பற்றியது

உறவுப்பாலமும் உயர்வுப்பாலமும் :

பல்துறை அறிஞர்களையும் மக்களையும் பாலமாக இணைத்தது தமிழ்நேசன். வாசகர்களுக்கும், வளரும் எழுத்தாளர்களுக்கும் பாலமிட்டதும் தமிழ்நேசனே! இவ்வாறு உறவுப் பாலத்தைக் கொண்டு மக்களை உயர்வில் நாட்டமுறச் செய்தவர் முருகு ஆவார்.

இவர் தமிழ்நேசனில் தொடங்கிய 'ஆசிரியர் நாட்குறிப்பு' என்னும் பகுதி பத்திரிகை உலகின் பிரச்னைகளைச் சுட்டிக்காட்டியது; வாசகர்களுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் இடையில் புரிந்துணர்வை உண்டாக்கி நெருக்கமாகத் தொடர்பு கொள்ள வைத்தது'ஆசிரியர் – நாட்குறிப்பு' என்று முருகு தொடங்கிய பகுதி, பத்திரிகை ஆசிரியர்கள் எதிர் நோக்கும் சிக்கல்களை உணர்த்தும் பகுதி.

வாசகர்க்கும் பத்திரிகைக்கும் இடையில் ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தும் உறவுப்பாலம். ஆகவே, முருகுவின் பத்திரிகை உலகச் சாதனைகளைக் கொண்டு முனைவர் தண்டாயுதம் ''முருகு ஆல்லது பத்திரிகை' என்று புகழாரம் சூட்டியது பொருத்த மன்றோ?

மா.இராமையாவும் முருகுவின் பத்திரிகைப்பணியைப் பலபடப் பாராட்டுகிறார்.

''முத்தமிழ் வித்தகர் முருகு சுப்பிரமணியன் காலத்தில்

தமிழ்நேசன் பெரிய மாற்றத்தையும் முன்னேற்றத்தையும் கண்டது. எழுத்தாளர்களை ஊக்குவித்ததோடு படைப்புகளுக்குக் குறைந்த அளவிலேனும் சன்மானம் வழங்கவேண்டும் என்ற எண்ணத்தை உண்டாக்கினார்.தமிழகத்தில் குமரன் பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்தும், பொன்னி இலக்கிய இதழைத் தாமே நடத்தியும் எழுத்தாளர்களின் மனோநிலையை அறிந்திருந்த தால்தான் தனை இங்குப் பரீட்சார்த்தமாகச் செய்துகாட்டினார்.''

என முருகுவை உளமாரப் பாராட்டியிருப்பது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை என்பதை வரலாறு சொல்லும்.

ஆய்வுத்திறம் பெற்ற அறிஞர்:

1966இல் கோலாலம்பூரில் நடந்த முதல் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு அமைப்புக்குழு உறுப்பினராக இருந்து அரிய பணிகள் பல செய்தார். இம்மாநாட்டில் அவர் 'மலேசியாவில் தற்காலத் தமிழிலக்கிய வளர்ச்சி' என்னுந் தலைப்பில் கட்டுரையும் சமர்ப்பித்தார்.

மலேசியத் தமிழ் இலக்கியம் பற்றி ஆய்வு செய்பவர்களுக்கு இக்கட்டுரை பேருதவி புரியும். மலேசியச் சிறுகதைகளைப் பற்றி அவர் கூறியுள்ள கீழ்க்கண்ட கருத்து அவரின் ஆய்வுத்திறத்தைப் புலப்படுத்தும்.

''பல சிறுகதைகள் நீதி புகட்டுவனவாகவே அமைந்துள்ளன; நம் எழுத்தாளர்கள் அவர்களுடைய எழுத்து மூலம் வாழ்க்கையைத் திருத்தியமைக்க முயல்கின்றனர். இம்முயற்சியானது பல நல்ல சிறுகதைகளை வெறும்நீதிக்கட்டுரையாகவே மாற்றிவிடுகிறது'

இக்கூற்றிலிருந்து ஒரு திறனிக்குள்ள நடுநிலையான கொள்கையை முருகு பெற்றிருந்தார் என்பது அங்கைநெல்லி.

சென்னையில் நடந்த இரண்டாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டிலும் முருகு சுப்பிரமணியன் கலந்துகொண்டு ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்தார்.

இவை தவிர முருகு அவர்கள் தலைமையேற்று நடத்திய ஆய்வுக் கருத்தரங்குகள் எண்ணில. இவை முருகு அவர்களின் ஆராய்ச்சிப் புலமைக்குக் கட்டியங்கூறுவன.

விருதுகள் பல பெற்ற வித்தகர்:

'சந்தனக்கிண்ணம்' என்னும் மணக்கும் கவிதைத் தொகுப்பை வழங்கிய கவிஞர் ஐ. உலகநாதன் 'மாதவி' என்னும் இலக்கிய இதழை வெளியிட்டார். அவ்விதழ் வெளியிட்ட பேட்டிக் கட்டுரையில் 'முத்தமிழ் வித்தகர்' என்னும் பட்டத்தை முருகுவுக்கு வழங்கியது.

பத்திரிகைத்துறைச் சேவைக்காக மாட்சிமை தங்கிய பேரரசர் அவர்கள் ஏ.எம்.என் (AMN?) என்னும் விருதினை 1968ஆம் ஆண்டு வழங்கி முருகுவைச் சிறப்பித்தார்கள். பத்திரிகையின் வாயிலாகப் பல்லாற்றானும் பல்லருஞ் சேவைகள் புரிந்த முருகுவை மாட்சிமை தங்கிய சிலாங்கூர் சுல்தான் அவரல்களும் கௌரவித்தார்கள். 1976ஆம் ஆண்டு சிலாங்கூர் சுல்தான் அவர்களின் பிறந்த நாளன்று விருது வழங்கப்பட்டது.

பதவிகள் பல பெற்ற பண்பாளர் :

பதவியைத் தேடி மக்கள் ஓடும் காலத்தில் வாழ்ந்தாலும் கூட, முருகு அவர்களை நாடிப் பதவிகள் தாமாக வந்தன. சமூக முன்னேற்றத்தில் அதிக ஈடுபாடு கொண்ட முருகு அவர்களால் அவர் பதவி வகித்த பல அமைப்புகள் நலம்பெற்றன; வளமும் பெற்றன. பணியால் அவரும் அவரால் பணியும் சிறப்படைந்தன என்பது மிகையன்று. அவர் வகித்த பொறுப்புகள் கீழே வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

அ. திரைப்பட மேல் முறையீட்டுக்குழு உறுப்பினர்.

ஆ. தேசிய வீரர் நல்வாழ்வு நிதி வாரிய உறுப்பினர்.

இ. பெர்னாமா செய்தி நிறுவன ஆட்சிக் குழு உறுப்பினர்.

ஈ. மலேசியப் பத்திரிகைக் கழக ஆட்சிக் குழு உறுப்பினர்.

உ. ஆசியான் தகவல் சாதன மலேசியாக் குழு உறுப்பினர்.

ஊ. தமிழ் இளைஞர் மணிமன்ற தேசியப் பேரவையில் காப்பாளர்.

புதிய சமுதாயம் படைத்தவர் :

பாவேந்தரிடம் பழுதிலா அன்பு கொண்டவர் முருகு ஆதலின்

பாவேந்தரின் வேண்டுகோட்கிணங்கப் 'புதியதோர் உலகு செய்யப்' புறப்பட்டார். தமிழ் முரசு, தமிழ்நேசன் வழியே பாவேந்தரின் கனவுகளை நனவாக்கினார்.

அத்துடன் தம் பணி முடிந்தது என அமைந்தாரில்லை. 'புதிய சமுதாயம்' என்னும் இதழைத் தொடங்கினார். இவ்விதழ் 27.03.1977 இல் தொடங்கப்பட்டு 10.4.82 இல் இவர் இறக்கும் வரை இருவார இதழாக ஐந்தாண்டுகள் தொடர்ந்து வெளிவந்தது.

உயர்பண்புகளின் உறைவிடம்:

நற்பண்புகளின் கொள்கலமாகத் திகழ்ந்ததனால் அவர் வாழ்வில் உயரிய பதவிகளைப் பெற்றார்; மக்களின் நெஞ்சங்களில் உயரிய இடத்தைப் பெற்றார். செருக்கின்மை, அமைதி, அடக்கம், துணிவு, மனிதநேயம், நிதானம் முதலிய மாபெரும் பண்புகளைக் கொண்டிருந்ததனால் வாழ்வில் உயர்ந்தார்; மற்றவர்களையும் உயர்த்தினார்.

பத்திரிகை ஆசிரியராக மட்டும் மலேசியத் தமிழ்ச் சமுதாயம் அவரை மதிக்கவில்லை. இனக்காவலராக, மனிதநேயம் மிக்க மாண்பினராக, ஆய்வாளராக, அறிஞராக, நல்ல வழிகாட்டியாக, சீர்திருத்தச் செம்மலாக அன்றோ அவர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்?

முருகுவை மறவா மலேசியா:

1983 முதல் முருகுவின் பெயரால் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் எழுத்தளர்களுக்கு விருது வழங்கிவருவது போற்றுதற்குரியது. மலேசியத்தமிழர்களின் நன்றி பாராட்டும் பெரும்பண்பையும் இந்த உலகுக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறது.

முடிவுரை:

முருகு பத்திரிகையாளர்; படைப்பிலக்கியவாதி; ஆய்வுத்திறம் பெற்ற அறிஞர்;பதவிகள் பல பெற்ற பண்பாளர்; உயரிய குணங்கள் கொண்ட மனிதநேயர்; தமிழ்ச்சமுதாயத்தின் உயர்வுக்குப் பாடுபட்ட சமூக ஆர்வலர் எனப் பல முகங்களைக் கொண்டவர்.

மலேசியாவில் முருகு அவர்களை மக்கள் நன்றியோடு நினைவு கூர்ந்தாலும் சிங்கப்பூரில் முருகு என்ற பத்திரிகை ஆளுமை மறக்கப்பட்டும் மறைக்கப்பட்டும் வந்திருப்பது வேதனைக்குரியது.

தமிழ் உணர்வு குன்றி வருவதன் காரணமாகத் தமிழ்மொழி,இலக்கியம் போன்றவற்றுக்குப் பாடுபட்டோரை மறப்பது ஒரு வகைக் கலாச்சார மறதி என்றும், இந்த மறதி தமிழ்ச்சமுதாயத்துக்கு ஒருபோதும் நன்மையளிக்காது என்றும் சிங்கைத்தமிழர்கள் உணரவேண்டும்.

முருகு ஒருவேளை தமிழ்நேசன் பத்திரிகையில் வேலை செய்யாமல் சிங்கைத்தமிழ்முரசிலேயே தொடர்ந்து பணியாற்றியிருந்தால் சிங்கப்பூரில் தமிழின் நிலை மேம்பட்டிருக்கும். இவ்வளவு மோசமான நிலையை அடைந்திருக்காது என நம்பலாம்.

பின்னிணைப்பு -1

இலக்கியநேசன் முருகு

அகிலன்

கால் நூற்றாண்டுக்கு முன்னே திருச்சியில் நான் பணியாற்றிக் கொண்டிருந்த காலம். ஒருநாள் அஞ்சலில் என் சொந்த ஊரான புதுக்கோட்டையிலிருந்து எனக்கு ஒரு மாத இதழும் கடிதமும் வந்திருந்தன. இதழைப் பிரித்துப் பாரத்தேன். அழகான பெயர், 'பொன்னி' ; உள்ளே அருமை அருமையான சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள். இலக்கியத்தின் நறுமணம் கமழ்ந்த அந்த இதழ் வெளியீட்டுத் தரத்திலும் சிறந்து விளங்கியது.

நான் திகைப்படைந்தேன். நல்ல ஓவியர்களோ, சிறந்த அச்சகமோ, இதழைக் கொண்டு வருவதற்குரிய பிற வசதிகளோ இல்லாத புதுக்கோட்டையில் இருந்துகொண்டு எப்படி ஒருவரால் இப்படிப்பட்ட இதழைக் கொண்டுவர முடிகிறது? யார் இதன் ஆசிரியர்?

கடித்ததைப் பிரித்துப் படித்தேன். எனக்கு முன்பின் நேரில் பழக்கமில்லாத முருகு சுப்பிரமணியம் என்ற அன்பர் என்னிடம் கதைகேட்டு எழுதியிருந்தார். நான் யோசனை செய்தேன். 'சென்னையில் இருந்து கொண்டே இவ்வளவு சிறப்பாக இதழைக் கொண்டுவர இயலாத நிலையில், இவர் எங்கோ புதுக்கோட்டையில் இருந்துகொண்டு, இப்படிப்பட்ட சாதனையைப் புரிந்திருக்கிறாரே, இந்த இதழுக்கு நாமும் எழுதினால் என்ன?' – விரைவில் அனுப்புவதாக அவருக்குப் பதில் எழுதிப் போட்டேன்.

தொடர்ந்து சிறுகதையை அனுப்பினேன். 'பொன்னி' யில் நான் கண்ட ஒரு முக்கியமான சிறப்பு, அதன் தனித்தன்மைகொண்ட போக்காகும். ஒருவகைத் தனித்தன்மையின் முத்திரை அதில் இருந்தது. சென்னையிலுருந்து வந்த எந்தப் பிரபலமான

பத்திரிகையைப் போலவும் அது இல்லை. எதையும் அது பின்பற்றவில்லை. இளம் எழுத்தாளர்கள் சிலரையும் புதிய கவிஞர்கள் சிலரையும் அது துணிந்து அறிமுகம் செய்திருந்தது.

வெறும் வாணிக நோக்குடன் வெளியிடப்பெறாமல், 'பொன்னி' ஒரு குறிக்கோள் கொண்ட இலக்கிய இதழாக விளங்கியது. அடுத்தமுறை நான் புதுக்கோட்டைக்குச் சென்றபோது அன்பர் முருகு சுப்பிரமணியன் அவர்களை நேரில் சந்தித்தேன். இலக்கியத்தால் ஏற்பட்ட தொடர்பு நாளடைவில் நட்பாக மலர்ந்தது. சென்னை பத்திரிகைகளின் கெடுபிடி எனக்கு எவ்வளவுதான் இருந்தபோதும் அவ்வப்போது நான் 'பொன்னி'க்கும் எழுதத் தவறுவதில்லை.

தமிழ் இலக்கியத்தில் தனி இடம்:

'பொன்னி' யின் வாயிலாகத் தமிழ்நாடு இலக்கிய வரலாற்றில் முருகு ஒரு தனி இடம் தேடிக் கொண்டவர். 'பாரதிதாசன் பரம்பரை' என்ற வரிசையில் சில அற்புதமான கவிஞர்களை அவர் இங்கு அறிமுகம் செய்து வளர்த்து வந்திருக்கிறார். அவ்வாறே முருகு அறிமுகம் செய்ததன் வாயிலாகத் தேர்ந்த எழுத்தாளர்களாக வளர்ந்தவர்களும் இங்கே இருக்கிறார்கள்.

எத்தனையோ சோதனைக்களுக்கிடையிலும் 'பொன்னி' யை இறுகப் பற்றிக் கொண்டு போராட்டம் நடத்திப் பார்த்தவர் முருகு. அவருக்கிருந்த இலட்சியத் துறையில் 'பொன்னி' அவருக்குப் பல நெருக்கடிகளைத் தந்திருக்கக் கூடும். ஆனால் இலக்கிய வளர்ச்சியைப் பொறுத்த வரையில் அவரது சோதனை ஒரு சாதனைதான். வரலாற்றில் இடம்பெறத்தக்க நன்முயற்சிதான் அது.

வருந்தினேன்:

முருகு கடல்கடந்து புறப்பட்ட போது அவருக்காக வருந்தியவர்களில் நானும் ஒருவர். இங்கு நடைபெறும் போராட்டத்துக்கிடையில் இலக்கிய உலகம் தன் தானைத் தலைவர்களில் ஒருவரை எங்கோ அனுப்பும் நிலை வந்துவிட்டதே என்ற ஏக்கம் எனக்கு. ஆனால் அங்கு அவர் சென்ற சில ஆண்டுகளிலேயே என் கவலை மறைந்தது. ஏக்கம் தீர்ந்தது. ஆண்டுகள் செல்லச் செல்ல கவலை களிப்பாக மாறியது; ஏக்கம்

ஊக்கமாக உருவெடுத்தது. 'எங்கு சென்றாலும் முருகு முருகுதான்!' என்பதை அவர் நிலைநாட்டிவிட்டார்.

மலேசியத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு முருகு ஆற்றியுள்ள பணியும் ஆற்றிவரும் பணியும் கடல் கடந்து வாழும் என்னைப் போன்றவர்களையெல்லாம் களிநடம் புரிய வைக்கிறது.

நான்கைந்து ஆண்டுகளாகவே நான் மலேசியத் தமிழ் இலக்கிய வளர்ச்சியை இங்கிருந்தவாறு எட்டிப் பார்த்து வருகிறேன். அதில் முருகுவின் பங்கு பற்றி என்னுடைய இளம் நண்பர்கள் டாக்டர் தண்டாயுதம், ரெ. கார்த்திகேசு, தம்பிராஜா ஆகியோர் சொல்லக் கேட்டபோது, 'முருகு இன்னும் தம்முடைய பிடிவாத்ததை விடவில்லை; வயது வளர்ந்த போதிலும் இலட்சியப் பிடிப்பில் இன்னும் இளைஞராகவே இருக்கிறார்' என்ற பெருமை எனக்கு ஏற்பட்டது.

'தமிழ் நேசன் பவுன் பரிசுக் கதை' களையும், எழுத்தாளர் சங்கம் வெளியிட்ட 'பரிசு'க் கதைகளையும் படித்தபோது, நேசனின் பங்கு அதில் தெரிந்தது. பெரும்பாலான கதைகள் தமிழ் நேசனில் வெளிவந்தவை.

மலேசிய இலக்கியத்துக்குப் புதுவேகம் தந்தார்:

மலேசியத் தமிழ் இலக்கிய இயக்கத்துக்குப் புதிய வேகம் தந்துகொண்டிருக்கிறார் முருகு. எழுத்தாளர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்துத் தூண்டிவிடும் தன்மையை 'பொன்னி'யோடு நிறுத்திக் கொள்ளவில்லை. அங்கே இலக்கிய நண்பர்கள் புலவர் சேதுராமன், டாக்டர் தண்டாயுதம், ரெ.கார்த்திகேசு, தமிழ் எழுத்தாளர் சங்கத்தார் போன்றவர்களின் உதவியோடும், ஒத்துழைப்போடும் அவர் இயங்கி வருவது பாராட்டத்தக்க செயலாகும்.

இலக்கிய வளர்ச்சி என்பது ஒரு சமுதாயத்தின் உள்மன வளர்ச்சியாகும். அறிவு வளர்ச்சியும், பண்பாட்டு வளர்ச்சியும் இணைந்த ஒன்றாகும். பொருளாதாரம் மட்டிலும் தனி மனிதனையோ, சமுதாயத்தையோ வளர்த்து விடாது. அங்கே தோட்டப் புறங்களில் வாழ்வோரில் ஒரு பகுதியினர் பொருளைப் பேணிக் காத்து வாழத் தெரியாததால் நிரந்தரக் கடனாளிகளாக வாழ்கிறார்கள். மதுவருந்துதல் போன்ற தீய பழக்கங்களால்

வளரமுடியாமல் தடுமாறுகிறார்கள். குழந்தைகளின் படிப்புப் பற்றியோ, எதிர்காலம் பற்றியோ ஆர்வம் காட்டுவதில்லை.

இவர்களுக்கெல்லாம் புற வாழ்க்கைச் சட்டங்கள் மட்டிலுமே துணை புரியமாட்டா. மனிதரின் அகம் வளர்ந்தாக வேண்டும். அறிவிலும் பண்பாட்டிலும் நம்மவர் சிறந்து விளங்க வேண்டும். அந்தச் சிறப்பைத் தருவதில் மொழிக்கும் இலக்கியதுக்கும் பெரும் பங்கு உண்டு.

ஆகவேதான் மொழிக்கும் இலக்கியதுக்கும் உழைப்பவர்களை நாம் போற்றுகிறோம். இலக்கியப் புரவலராக ஒரு கால் நூற்றாண்டுக் காலத்துக்குமேல் இடைவிடாது உழைத்து வருபவர் முருகு. நம்முடைய பாராட்டுதலுக்குரியவர் அவர்.

சென்ற ஆண்டு நான் மலேசியாவுக்கு வந்திருந்தபோது 'தமிழ்நேசன்' எனக்கும் மக்களுக்கும் தொடர்பு ஏற்படுத்துக் கொடுப்பதில் ஆற்றிய பணி என்னால் மறக்க முடியாத பணி. தனிப்பட்ட அகிலனுக்காக முருகு அதைச் செய்ததாக நான் கருதவில்லை. தமிழ் இலக்கியத்தில் அவருக்குள்ள மெய்யான ஈடுபாடு அப்படி அவரைச் செய்ய வைத்தது.

மலேசியாவில் இருந்து நான் திரும்ப ஓராண்டுக்குமேல் ஆகிவிட்டாலும் இன்னும் நான் நெஞ்சால் அங்குதான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். 'பால் மரக் காட்டினிலே' என்ற பெயரில் நான் கலைமகளில் எழுதி வரும் நாவல் என்னை மலேசிய மண்ணில் வாழச் செய்கிறது. இதற்கெல்லாம் காரணம் நான் அங்கு பெற்ற பேரன்பு. அந்தப் பேரன்புக்குப் பின்னே உள்ளவர்களில் முக்கியமான ஒருவராக முருகு திகழ்ந்திருக்கிறாரல்லவா?

முருகு ஓர் இலட்சியவாதி, ஆனால் செயலற்ற வறட்டு இலட்சியவாதியல்ல. செயல்வீரர். இலட்சியத்தை முன்னே வைத்து சுறுசுறுப்போடு இயங்குபவர். பொன்விழாக் காணும் அவர் உள்ளத்தாலும் உழைப்பாலும் இளைஞர். மலேசியத் தமிழ்ப் பெருமக்கள் அவர் உழைப்பை மென்மேலும் எதிர்பார்க்கிறார்கள். இறைவன் திருவருளால் அவர் நூறாண்டு உடல் வளத்தோடு வாழ வாழ்த்துகிறேன்.

பின்னிணைப்பு -2

தமிழ்ச்சாதியின் காவலர்

ரெ.கார்த்திகேசு

'' விதியே! தமிழச் சாதியை எவ்வகை

விதித்தாய் என்பதன் மெய்யெனக் குணர்த்துவாய்!'' – பாரதியார்

ஓர் இனத்தின் எதிர்காலத்தை, விதியை நிர்ணயிப்பதற்கும் திசை திருப்பிவிடுவதற்கும் சிந்தனையாளர்கள் அவ்வப்போது தோன்றிக் கொண்டு வருகிறார்கள். தமிழச் சாதியின் தலைவிதி பற்றி மிகவும் கவலைப்பட்டவர் பாரதியார்.

''நாட்பட நாட்பட நாற்றமும் சேறும்
பாசியும் புதைந்து பயன் நீர் இலதாய்
நோய்க் களமாகி அழிகெனும் நோக்கமோ?
விதியே விதியே தமிழச் சாதியை
என் செய நினைத்தாய் எனக் குரையாயோ?''

என்று உண்மையிலேயே மனம் நொந்து அவர் பாடினார். ஆப்பிரிக்கா, இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள், மலாயா, பர்மா எனப் பல நாட்டிற்கும் காலனித்துவவாதிகளிடம் கடைக் கூலிகளாக இருக்கக் கூட்டம் கூட்டமாக விரட்டிச் செல்லப்பட்ட தன் சக இனத்தவரைக் கண்டு பாரதியார் வாய்விட்டுக் கதறியதில் வியப்பில்லை.

பாரதியார் இப்படிப் பாடிய 60 – 70 ஆண்டுகளுக்குப் பின் அவருடைய அந்த பரிதாபப் பாடலுக்கு இலக்கான சமுதாயத்திலிருந்து கொஞ்சம் தலையைத் தூக்கிப் பார்க்கும் நமக்கு கொஞ்சம் ஆறுதலும், உற்சாகமும் தோன்றுகிறது என்று சொன்னால் அது மிகை ஆகாது. ''நாற்றமும் சேறும், பாசியும் புதைந்து'' இருந்த ஒரு நிலையை விட்டு நாம் கொஞ்சம்

முன்னேறிவிட்டோம். ஒரு காலத்தில் 'நோய்க் களமாக' இருந்தது உண்மை. மலேரியாவுக்கும், வாந்திபேதிக்கும் பாம்புகளுக்கும் நாம் கொடுத்துள்ள காணிக்கை அதிகம். ஆனால் இந்த இனத்தின் உள்ளே உள்ள உயிர் வாழ்வுத் திறத்தால் நாம் பாரதியார் பயந்ததுபோல அழிந்துவிடவில்லை; பிழைத்துவிட்டோம்.

ஓர் இனம் எப்போது அழிகிறது? ஓர் இனத்தின் உறுப்பினர்களின் உயிர்களைப் பறிந்துவிடுவதால் அந்த இனம் அழியும் என்று சொல்லிவிட முடியாது. ஆனால் ஓர் இனம் தனது மொழி, பண்பாடு, கலைகள் ஆகியவற்றை இழந்துவிடும் போதுதான் தனது அடையாளத்தை அழித்துக்கொள்கிறது. இதுதான் ஓர் இனத்தின் உண்மையான சாவு ஆகும்.

ஆகவேதான் இனக் காவலர்களாகவும், சமுதாயக் காவலர்களாகவும் தோன்றுபவர்கள் அந்த இனத்தின் மொழி, பண்பாடு, கலைகள் ஆகியவற்றினைக் காப்பதில் மிகவும் அக்கறை காட்டுகின்றார்கள்.

திரு. முருகு சுப்பிரமணியனின் பெயரைச் சொல்வதற்கு இவ்வளவு பெரிய பீடிகை போதும் என நினைக்கிறேன்.

தமிழச் சாதியின் அடையாளத்தைக் காப்பாற்றித் தருவதில் இன்று முருகு சிறப்பான பணியாற்றி வருகிறார். அவரால் வளர்க்கப்படும் 'தமிழ்நேசன்' உண்மையிலேயே தமிழுக்கு நேசனாக இருந்து வருகிறது. தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாடு, தமிழ்க் கலைகள் ஆகிய துறைகளில் செயல்களைத் தொடங்குவதற்கும் தொடர்வதற்கும், முடுக்கிவிடுவதற்கும், முன்னேற்றுவதற்கும், வளர்ப்பதற்கும், வாழ்த்துவதற்கும் இன்று தமிழ் நேசனையே நாம் பெரிதும் நாட வேண்டியுள்ளது.

தமிழ், தமிழர் என்று பேசுவது ஒரு குறுகிய நோக்காக இந்த நவீன காலத்தில் தோன்றலாம். அறிவியலும், தொழில் நுட்பமும் இன்று உலகைச் சுருக்கிவிட்டன; தூரங்களைக் குறைத்து விட்டன; நோக்கங்களை விரிவாக்கிவிட்டன; சுருக்கமாக உலகை ஒன்றாக்கிவிட்டன; ஆகவே இன, மொழி வேறுபாடுகள் குறைக்கப்பட வேண்டும் என்ற குரல், எங்கும் ஒலிக்கிறது.

இது உண்மை. இந்த நோக்கங்கள் தமிழர்களின் நோக்கங்களினின்றும் பெரிதும் வேறுபட்டவை இல்லை. 'யாதும்

ஊரே யாவரும் கேளிர்' என்றும் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்றும் மிகப் பழங்காலத்திலேயே பரந்த கொள்கைகளை நாம் மேற்கொண்டுள்ளோம்.

ஆனால் பரந்த நோக்கம் என்பது நமது அடையாளங்களைத் துடைத்தொழித்துவிட்டு 'பரந்த மனிதன்' என்று நம்மை அறிவிப்பது என்று ஆகாது. உடை வேறுபாடுகளைக் குறைக்க வேண்டும் என்பதற்காக உடைகளைக் களைதந்தெறிந்துவிடுவது சரியான வழியல்ல.

எந்த மொழியும், கலையும், பண்பும் மனிதனைத் தனிமைப்படுத்துவதாக இருக்கக்கூடாது; ஆனால் அந்த மொழி, கலை, பண்பாடு வழியாக மனிதன் பூரணத்துவம் பெறவேண்டும். அந்த பூரணத்துவ நிலையில் மனிதனுக்கு மனிதன் உள்ள வேறுபாடுகள் அடியோடு குறைந்து, மறைந்து போவதைக் காணமுடியும். தனது சொந்த அடையாளத்தை நிலைப்படுத்தி வலுப்படுத்திக்கொண்ட மனிதன்தான் இன்னொரு அடையாளத்தை உடைய மனிதனுடன் சமமாகப் பழகலாம், பேசவும் முடியும்.

முருகு ஆழ்ந்த சமுதாய சிந்தனை உடையவர். தமிழ்ச் சமூகத்தை – தமிழ் பேசும் இந்திய சமூகத்தை ஓர் ஆற்றல்மிக்க சமுதாயமாக ஆக்க வேண்டும் என்பதில் முழுமூச்சான ஆர்வம் காட்டுபவர். அதோடு அந்த சமுதாயத்திற்கு அரசியலிலும் நியாயமான இடம் கிடைக்க வேண்டும் என்பதில் ஆழ்ந்த அக்கறை உடையவர்.

முருகுவின் சமுதாயப் பயிற்சி தமிழவேள் கோ.சாரங்க பாணியின் பட்டறையில் பெறப்பட்டதாகும். அவரே கூறுவது போன்று 'தமிழ் முரசு இதழில் துணையாசிரியராக ஏழாண்டு காலம் பணியாற்றியபோது தமிழவேள் தலைமையின் கீழ் பத்திரிகைத் துறையில் முதிர்ந்த அனுபவம் பெற்றதோடு சமுதாயப் பொதுவாழ்விலும் என்னை ஈடுபடுத்திக் கொள்கிற பரந்த வாய்ப்பும் எனக்குக் கிட்டிற்று.

சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் வாழ்கின்ற தமிழ்ச் சமுதாயத்தின் பல்வேறு பிரச்சனைகளையும் மனத்தில் கொள்வதற்குத் தமிழவேள் நல்கிய இந்த வாய்ப்பு எனக்குப் பெருதும் பயன்பட்டது. சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரோடு

நேருக்குநேர் பழகுவதற்கும், கலந்துரையாடுவதற்கும், எண்ணற்ற ஊர்களில் பல்வேறு கூட்டங்களில் பங்கு கொள்வதற்கும் இது எனக்கு வாய்ப்பை வழங்கியது''. (தமிழ் ஒளி 1973 – 74).

பல வகைகளில் முருகுவின் மொழி, சமுதாயச்சேவைகள் கோ.சா.வின் முயற்சியின் தொடர்ச்சியே ஆகும். கோ.சா.விற்குப் பிறகு முருகு இல்லாமற்போயிருந்தால் தமிழ்ச் சமுதாயத்தின் குரல் பல இடங்களில் கேட்காமலேயே போயிருக்கும்.

முருகுவிடம் எனக்கு உள்ள பழக்கம் பெரும்பாலும் இந்நாட்டுத் தமிழ் எழுத்துத்துறை, தமிழ் எழுத்தாளர்கள் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டது; இந்தத் துறையில் அவர் கொடுத்துள்ள ஆதரவினால்தான் தமிழ் எழுத்துத்துறை இந்த அளவாவது வளர்ச்சிபெற்றுத் திகழுகின்றது. தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் அவர் பல ஆண்டுகளாகத் தலைவராக இருந்து சேவை செய்துள்ளார். தம் பத்திரிகையின் மூலம் சங்கத்தைப் பரவலாக அதன் எல்லா முயற்சிகளிலும் ஆதரித்துள்ளார்.

தமிழ்நேசன் பவுன் பரிசுத் திட்டம் இந்த நாட்டு எழுத்தாளர்களிடையே ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த நாட்டு எழுத்தில் மண்ணின் மணம் கமழ வேண்டும் என்று எழுதப்பட்ட குரல்களுக்கு பலத்த ஆதரவு கொடுத்தார் அவர். இந்த நாட்டின் எழுத்துக்களில் சமுதாயப் பிரச்சனைகள் இடம்பெற வேண்டும்; அவை சமுதாய வழிப்பினைக் கொண்டுவரவேண்டும் என்ற நோக்கத்தைச் சாதிப்பதில் பவுன் பரிசுக் கதைகள் இயக்கம் நல்ல பலனைத்தந்தது.

இதற்கெல்லாம் மேலாக எழுத்தாளர் அகிலனை இந்த நாட்டுக்கு அழைக்க எழுத்தாளர் சங்கத்தின் மூலமாக நான் முயற்சிகள் மேற்கொண்டபோது அதற்கு முழுமூச்சான ஆதரவைத் தந்தார் முருகு.

அகிலனின் வருகை இந்த நாட்டு எழுத்தாளர்களின் ஏகோபித்த திருவிழா போன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டதற்கு தமிழ்நேசன் அளித்த ஆதரவு ஒரு காரணம் ஆகும். மேலும் இந்த நாட்டு எழுத்துக்களுக்கு தமிழ்நாட்டு அரசின் பரிசு கிடைக்கவேண்டும் என்று அவர் எழுப்பிய கோரிக்கைக்குக் கைமேல் பலன் கிடைத்ததையும் இந்நாட்டு எழுத்தாளர்கள் அறிவார்கள்.

அரசியலில் தமிழ்நேசனின் பணி ஒரு மூக்கணாங்கயிறுபோலப் பயன்பட்டு வந்துள்ளது. இந்த நாட்டில் இந்தியர்களுக்குக் கிடைத்துள்ள அரசியல் பங்கு உண்மையில் இந்திய மக்களுக்கும் பயன்படுவதாக இருக்க வேண்டும் என்பதில் அவர் ஆர்வம் உள்ளவர். அப்படி இருக்கவேண்டிய அரசியல் சுயநல நோக்கங்களுக்கான அடிபிடி சண்டையாக மாற்றப்படும் போது அதைக் கண்டிக்க அவர் தவறியதில்லை.

அதேபோல அரசியல் தலைவர்கள் தங்கள் பணியை மறந்து சில்லறைப் பதவிச் சண்டைகளில் ஈடுபடும்போது, எது நியாயம் என்பதை எடுத்துரைக்கவும் அவர் தயங்கியதில்லை.

இந்த இடத்தில் யாருக்கு அவர் சார்பாக இல்லையோ அவர்களின் மூர்க்கமான சாடுதல்களையெல்லாம் அவர் வாங்கிக்கட்டிக்கொண்டிருக்கிறார். ஆனால் இந்த எதிர்ப்புகள் அவருடைய கொள்கைகளை மேலும் இறுகச்செய்துள்ளனவே தவிர தளர்த்தியதில்லை.

பொன்விழா காணும் முருகுவின் மொழி, சமுதாயப்பணிகள் பல அம்சங்களைக் கொண்டவை. இவை எல்லாவற்றிலுமே அவருக்கு தூரநோக்கு உண்டு. அந்த தூரநோக்குகளை அடைவதற்காக அவர் கையாளுகின்ற சில வழிகள் குறுகிய நோக்கம் கொண்டவை என்று சாடப்படுகின்றன.

இந்த நாட்டில் தமிழ்ச்சாதியின் மொழி, பண்பாடு, கலைகள், அரசியல் ஆகியவற்றின் விதி நன்றாக இருக்கவேண்டும் என்ற உண்மையான ஆவல் அவர் உள்ளத்தில் இருக்கின்றது. இந்த ஆவலுடன் இந்தத் துறைகளில் ஈடுபட்டுள்ளவர்கள், தலைமைத்துவம் ஏற்று நடத்திச் செல்பவர்கள் ஆகியவர்களைக் கட்டுப்படுத்தும் ஒரு சக்தியாக அவர் விளங்கி வருகின்றார். இந்தக் கட்டுப்பாடு இல்லாவிட்டால் இந்தத் துறைகளின் வளர்ச்சித் தான்தோன்றியாகவும் தாறுமாறாகவும் அமைந்துவிடும் சாத்தியங்கள் உள்ளன.

ஆகவே முருகுவின் அனுபவம், முதிர்ச்சி, சமுதாயப்பற்று, எதிர்காலம் பற்றிய தூரநோக்கு ஆகியவை இந்த நாட்டிற்குத் தேவையானதாகும்.

பொன்விழா காணும் அன்னார் நீடு வாழ்க!

பின்னிணைப்பு - 3

முருகு வாழ்க!

புலவர் மணி – சித்தாந்த வித்தகர் முரு. பழ. இரத்தினம் செட்டியார்

20 ஆண்டுகளுக்கு முன் முதன்முதல் திரு.முருகு அவர்களை மலாக்காவில் சந்தித்தேன். புன்னகை பூத்த முகம்; வெற்றிலை போட்டுக் கனிந்து சிவந்த வாய்; குளிர்ந்த பார்வை; உள்ளத்தைக் கவரும் இளமைத் தோற்றத்தோடு அவர் காட்சியளித்தார்.

தமிழ்நாட்டில் 'கோனாபட்டு' என்னும் ஊரில் பிறந்த அவர் புதுக்கோட்டையில் சில ஆண்டுகள் 'பொன்னி' இதழை நடத்திப் பத்திரிகைத் துறையில் அனுபவம் பெற்றிருந்தார். பகுத்தறிவு இயக்கத்தில் ஈடுபாடு கொண்டவர் என்றும் சமயம் அவர்க்கு அவ்வளவு பிடிக்காது என்றும் கேள்விப்பட்டிருந்தேன்.

சைவ சமயப் பணியில் முனைந்து நின்ற நான் அவரோடு மனம்விட்டு அளவளாவ இயலுமோ என்னும் ஐயத்தோடுதான் பேச்சைத் துவங்கினேன். ஆனால் ஐந்தே நிமிடத்தில் ஐம்பதாண்டு பழகியவர்கள்போல பல துறைகள் பற்றிக் கருத்துப் பரிமாற்றம் செய்துகொண்டோம். சமயக் கருத்துக்களைத் தர்க்கரீதியாகச் சொல்லும் போது அவர் பேரார்வத்தோடு கேட்டதும் அல்லாமல் உடன்படவும் செய்தார்.

அடிமனத்தில் சைவப்பற்று வேரூன்றிக் கிடப்பதை அரை நொடியில் உணர்ந்து கொண்டேன். திருக்குறளும் சிலப்பதிகாரமும் அவர் நெஞ்சை அள்ளிய நூற்கள் என அறிந்து மகிழ்ந்தேன். திருமுறைப் பாக்கள் அவர் உள்ளத்தை நெகிழ்விப்பதையும் கண்டேன்.

தமிழ்மகன் எத்தனை அரசியல்வாதியாக இருந்தாலும் சைவத்தை விட்டு விலக வராது என்னும் உண்மை 'பளிச்சென' எனக்குப் புலனாகியது.

மலாக்காவிலிருந்து சிங்கப்பூர் சென்ற அவர் 'தமிழ் முரசு' பத்திரிகையில் துணையாசிரியராகச் சில ஆண்டுகள் பணியாற்றினார். நான் சிங்கப்பூர் செல்லும்போதெல்லாம் அவரோடு அளவளாவி மகிழ்வேன்.

சுவையுற நிகழ்ச்சிகளை வரையறை செய்து எழுதுவதில் அவர் வல்லவர். சிங்கப்பூர் வானொலியில் நீதிநூற் கருத்துக்களை இனிய தமிழில் பொருட் செறிவோடு விளக்கிப் பல உரைகள் ஆற்றினார். அவை இன்று நூல்வடிவம் பெற்று விளங்குகின்றன. தமிழ் இலக்கியங்களில் அவர்க்குள்ள ஆழ்ந்த புலைமையும் தெளிவையும் அவை வெளிப்படுத்தி நிற்கின்றன.

ஆங்கிலச் செய்திக் கருத்துக்களை இயல்பான ஓட்டம் மிக்க நடையில் மொழிபெயர்க்கும் ஆற்றல் அவரிடம் உண்டு. இதனால் 'தமிழ் முரசில்' அவர் தக்க இடம் பெற்றார். பழகுவதற்கும் கலந்து ஆலோசிப்பதற்கும் மிகவும் ஏற்றவர் எனத் 'தமிழ் முரசில்' இருந்த துணை ஆசிரியர் பலர் என்னிடம் அடிக்கடி சொல்வர்.

சிங்கப்பூரிலிருந்து கோலாலம்பூர் வந்து 'தமிழ் நேசன் பத்திரிகையில் தலைமை ஆசிரியராகப் பதவி ஏற்றார். அன்றிலிருந்து 'தமிழ் நேசன்' புதிய தோற்றத்தோடு வெளிவரலாயிற்று; வெளிவருகின்றது.

ஆங்கில நாள் இதழ்கள் போல அன்றாடச் செய்திகளைச் சுடச்சுடத் 'தமிழ் நேசன்' வழங்குவதற்குக் காரணம் முருகு அவர்களின் அயரா உழைப்பே என்பதைச் சொல்ல வேண்டிய தில்லை. ஞாயிறு மலரில் சிறுகதைகளுக்கும் கட்டுரைகளுக்கும் நிறைய இடம் அளித்து மலேசிய எழுத்தாளர்களை அவர் ஊக்குவித்து வருகிறார்.

சிறுகதைகளுக்குப் பரிசுப்போட்டி வைத்து மலைசியாவும் தமிழ்ச் சிறுகதை இலக்கிய வளர்ச்சியில் உரிய பங்காற்றுகிற தென்பதைத் தமிழக எழுத்தாளர்கள் உணரும்படி செய்தார்; செய்து வருகிறார். மலேசியத் தமிழ் எழுத்தாளர்கள் அவரைத் தம் வழிகாட்டியாகக் கொண்டு செயலாற்றி வருகின்றார்.

தேசிய உணர்வையும் ஒருமைப்பாட்டையும் வளர்ப்பதில் முருகு மிக்க முனைப்போடு செயலாற்றி வருகிறார். எல்லா இன மக்களையும் ஒருங்கிணைத்துச் சகோதரபாசத்துடனும்

புரிந்துணர்வுடனும் 'நாம் மலேசியர்' என்னும் நினைவோடும் தமிழ் மக்கள் வாழவேண்டும் என்பதை முருகு தாம் எழுதும் 'தமிழ்நேசன்' தலையங்கங்களில் இடைவிடாது வற்புறுத்தி வருவதுகண்கூடு.

பொறுப்புமிக்க நாளிதழ் ஆசிரியர் என்னும் பெயர் அவர்க்கு என்றும் உண்டு. உணர்ச்சி வயப்படாமல் நிதானத்தோடு தலையங்கம் எழுதுவது அவர் இயல்பு. 'மலேசிய இந்தியர் காங்கிரஸ்' ஸ்தாபனம் 'தமிழ்நேசன்' வாயிலாகவே தமிழ் மக்களுடன் பெரிதும் தொடர்பு கொள்கின்றதென்பதை மறுக்க இயலாது.

அரசாங்க தூதுக்குழுக்கள் வெளிநாடுகள் செல்லும்போது 'தமிழ் நேசன்' பிரதிநிதியாக முருகு பலமுறை உடன் சென்று வந்துள்ளார். இதனால் அவர் அரசியல் அறிவு பரந்த அனுபவத்தோடு மிளிர்கிறது. இந்தோனேசியாவிற்கும் ரஷியாவிற்கும் சீனாவிற்கும் அவர் சென்றுவந்து தீட்டிய பயணக்கட்டுரைகள் சுவை மிகுந்தவை; இலக்கியம் போலப் போற்றத் தகுந்தவை.

தமிழ்ப்பள்ளி நிதிக்கு ஒரு கோடி வெள்ளி திரட்ட அவர் இப்பொழுது பெருமுயற்சி செய்து வருகிறார். இந்த ஒரு தொண்டே மலேசியத் தமிழுலகம் அவரை என்றும் மனத்திடை வைத்தப் போற்றப் போதுமானதாகும்.

ஒருநாள் 'தமிழ்நேசன்' அலுவலகத்தில் பேசிக்கொண்டிருந்தேன். முருகு ஒரு தாளை எடுத்தார். 'சைவ – விளக்கம் கேள்வி – பதில்கள்' என எழுதினார்; என்னைப் பார்த்தார். 'ஞாயிறு மலரில் வாரந்தோறும் இப்பணியை நீங்கள் செய்ய வேண்டும்' என்றார். 'சைவத்தை மலேசியாவின் மூலை முடுக்குகளில் உள்ள தமிழ் மக்களும் நன்குணரும்படி எளிய நடையில் நீங்கள் எழுத வேண்டும். என்ன சொல்கிறீர்கள்?' என அதட்டினார்.

அவரின் திட்டமிடும் ஆற்றல் கண்டு வியந்தேன். ஞாயிறு மலரில் 'சைவ விளக்கம்' வரத் துவங்கியது. தோட்டப்புறத்துப் பாட்டாளிமக்கள் இன்று சைவ சித்தாந்தம் பேசுகின்றனர். தமிழ் நாட்டில் தமிழ் இலக்கியம் பயின்றவர்களிடையே கூடச் சைவ சித்தாந்தம் பற்றி பேசுவோர் குறைவு.

மலேசியாவில் சித்தாந்த முழக்கம் செய்த ஒரே பத்திரிகை 'தமிழ் நேசன்' தான். முருகு அவர்கள் செய்து வருகிற பணிகள் பலவற்றுள் இச்சமயப் பணியும் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

'முருகு' என்னும் சொல் அழகு, இளமை, இனிமை எனப் பல பொருளையும் குறிக்கும். இவை அத்தனையும் நிறைந்த முருகு சுப்பிரமணியம் பல்லாண்டு பல்லாண்டு எல்லா நலனும் பெற்று இனிது வாழ முருகப்பெருமான் திருவடி மலர்களை நெஞ்சால் நினைந்து மொழியால் வாழ்த்தி மெய்யால் வணங்குகிறேன்.

முருகு நீடூழி வாழ்க!

பின்னிணைப்பு - 4

வித்வான் விசு. திருநாவுக்கரசு

தமிழ்நாடு அரசு கல்வித்துறை - புதுக்கோட்டை

*1940*ஆம் ஆண்டு நான் சென்னை பல்கலைக் கழகத்திலே தமிழ்ப் புலமை பெற்ற நாள். செட்டி நாடு பெற்ற நகரங்களில் கோனாம்பட்டும் முதன்மை உடையது. தமிழ் வளர்ப்பிலும், சைவச் செழிப்பிலும் ஆழமான வரலாறு பெற்ற நகரம்.

மேலே குறிப்பிட்ட ஆண்டில்தான் மொழியுணர்வில் ஒரு புத்தம் புதிய எழுச்சிப்படை – இளைஞர் படை கல்லூரிக் காளையரின் அணி அந்த நகரத்தில் திரண்டது. பணி, பணி எனத் துடித்தெழுந்த – ஓய்வையுணராத திருக்கூட்டம் ஒன்று கூடியது. அதற்கு நான் ஒரு காரணமானாலும், நான் வகுத்துச் சொல்லியதை செயல்படுத்திய தமிழ் மறவர் திரு. முருகு சுப்பிரமணியன் அவர்களே.

பகுத்தறிவுக் கொள்கை பலவற்றிலும் பழைய இலக்கியங்களோடு புதிதாய்ப் பிறந்த தமிழ்க் கவிதை சிலவற்றிலும் – நவீனங்களிலும் ஈடுபாடு கொண்ட அந்நாட்களில் என்னை மிகமிக நெருங்கி நின்றவர் அவரே. மேற்கண்டவற்றில் என்னைப் பற்றிக் கொண்ட மோகம் அவரையும் தொற்றிக் கொண்டது. அதன் பயன் ஒரு ஐந்து ஆண்டுக் காலம் ஆவேசமான ஒருவிதத் தமிழ் உணர்வு பெருகி அதன் காரணமாய் தற்காலத் தமிழகத்தின் பல பகுதிகளில் காலச் சுவடுகள் காணப்பட்டு வருகின்றன.

நண்பர் முருகு தம் இளம் பருவத்தில் பழனியாண்டவர் வாசகசாலை நடத்தினார். 'இளந்தமிழன்' கையெழுத்து இதழ் வெளியிட்டுக்கொண்டிருந்தவர். இவைகளிலிருந்து நான் அவரைத் திசை திருப்பினேன். ஏன்? எதற்கு? என்று எதுவும் கேளாது அந்தத் திசையில் அச்சமின்றி அடிதளராமல் நடந்து

வந்தார். ஆண்டவர் பேராலிருந்த வாசகசாலை மறைந்தது. இரண்டே பிரதிகளை எழுதி ஒன்றைத் தன் காரியாலத்திலும், மற்றொன்றை ஊர்ப் பொதுஇடத்திலும் வெளியீடுசெய்த 'இளந்தமிழ'னும் நின்று போய்விட்டது.

அநேகமாய் இவற்றை எல்லாம் முருகு மறந்திருப்பார் என்று எண்ணுகிறேன். வாசகசாலையும் கையெழுத்து மலரும் மறைந்த இடத்திலிருந்து 'இளைஞர் ஒற்றுமைக் கழகம்' என்ற பெயரால் எழுச்சிமிக்க ஒரு கழகம் உருவாகிவிட்டது. நீண்ட நெடுநாளாக நான் கற்பனை செய்துகொண்டிருந்த 'இளங்கோவடிகள்' வண்ணப்படம் பல ஆயிரம் பிரதிகளை வெளியீடு செய்தது.

நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தின் புகழ்மிக்க கவியரசர் இளங்கோவுக்குத் தமிழ்நாட்டில் முதன் முதலாக கோனாம்பட்டு நகரத்திலேதான் பல்கலைச் செல்வர் செட்டிநாட்டரசர் டாக்டர் அண்ணாமலைச் செட்டியார் தலைமையில் மங்கலப் பெருவிழா ஒரு பெரும் கலைவிழாவாக 1943ல் எடுக்கப்பட்டது. இதற்கெல்லாம் ஒரு துணைக் காரணமாய் எனக்கு ஒரு வலக்கரமாய் நின்றவர் பொன்விழாக் காணும் செம்மலே.

செட்டி நாட்டின் புகழ்மிக்க வார இதழ் 'குமரன்' அதன் ஆசிரியர் திரு. சொ. முருகப்பா. இதை எழுதுபவரை துணையாசிரியராக திரு.முருகப்பா அழைத்தபோது – அதை முருகு சுப்பிரமணியம் அவர்கட்கு அளித்து – அவரது எழுச்சிமிக்க இனிய தமிழ்நடை – தடைபடாது ஓட வழிவிட்டதும் உண்டு.

தனிச் சட்டங்கள் எழுந்து நின்ற போர்க்காலத்தில் புதுக்கோட்டை நகரத்திலிருந்து 'பொன்னி' திங்கள் தோறும் வெளிவர எடுத்த முயற்சிகளையெல்லாம் நான் எண்ணிப் பார்க்கிறேன் – பிறகு 'பொன்னி' இதழின் பொன் மேனி கண்டு தமிழகம் சொக்கிப் போனதையும் நினைத்துப்பார்க்கிறேன். தேனெனப் பாலெனப் பாகெனத் தித்திக்கும் தமிழ் நடை உருவானதையும் - தமிழ் மரபு காப்பதில் விழிப்புடன் செயல்பட்ட விதத்தையும் நான் எப்படி மறந்துவிடமுடியும்?

இன்று தமிழகத்திலுள்ள செய்தி இதழ்களின் புகழ்மிக்க ஆசிரியர்கள் எவருடன் முருகு சுப்பிரமணியனை ஒப்பிட்டாலும் அந்த மதிப்பீட்டில் அவர் இணையற்று நிற்பது தெரிய வரும்.

இலக்கிய மதிப்பீட்டிலும், பத்திரிகையின் தரத்திலும் 'பொன்னி' இதழை 'கலை மகள்' இதழுக்கு ஒப்பாகப் பேசி அதற்கு நல்வரவு கூறிய அறிவாற்றல் மிக்க எழுத்தாளர்களை நான் அறிவேன்.

கவியரசர் பாரதிதாசனையும் – அவரது கவிதைகளையும் தமிழகத்தின் பொதுச்சொத்தாகப் பிரகடனம் செய்தது போல் எழுதிய முருகுவின் எழுத்துக்களை நன்றியுள்ள தமிழன் எவனும் மறக்கமாட்டான். முருகுவின் அதிசயிக்கத்தக்க பணிகள் பலப்பல.

அவற்றையெல்லாம் விரிவாகப் பேச இக்கட்டுரையில் இடமில்லை. எனவே என்னுடைய இலக்கிய யாத்திரை யில்(புதினம்) விரிவாக முருகுவோடு அளவளாவுகின்றேன். அணிமைக் காலத்தில் அந்த நூலைத் தமிழகத்திற்குத் தருவேன்.

பொன்விழா அரங்கில் – மங்கல நிகழ்ச்சிகளில் மாலையணிந்து மனையரசியோடு புன்முறுவல் பூத்த முருகு சுப்பிரமணியனை மானசீகமாகப் பார்த்துக் களிக்கின்றேன். அந்நிலையில் என் பழம்பெரும் நண்பர்க்குப் பல்லாண்டு கூறுகின்றேன்.

வாழ்க! வெல்க!

பின்னிணைப்பு - 5

முருகு அல்லது பத்திரிகை

டாக்டர் இரா. தண்டாயுதம் , மலாயா பல்கலைக் கழகம்

அறிவியல் முன்னேற்றங்கள் நாளுக்குநாள் உலகைச் சுருக்கி வருவதை நாமெல்லாம் நன்கு அறிவோம். இந்தச் சுருக்கம், அரசியல் பொருளாதார சமுதாய நிலைகளில் எத்தனையோ பொதுப்பண்புகளை உருவாக்கிவிட்டது. நடையுடை பாவனைகள், பழக்கவழக்கங்கள், எண்ணப்போக்குகள், ஆட்சியமைப்புகள், தொழில் வளர்ச்சித் திட்டங்கள், பொருளாதார நிலைத்தன்மைக்கான வழிமுறைகள், பாதுகாப்பு ஏற்பாடுகள், எல்லோரும் சமம் என்ற நம்பிக்கை, கல்வித்துறை நடைமுறைகள் முதலிய பல துறைகளில் இன்று உலகத்தின் ஒரு மூலையில் ஒரு தனிப்பட்ட மனிதரின் பல நாள் சிந்தனையில் முகிழ்க்கும் கருத்து, இருபத்துநான்கு மணி நேரத்தில் மனிதன் வாழும் இடங்களுக்கெல்லாம் சென்றுவிடுகிறது.

இவ்வாறு செல்லவும், இத்தகைய பொதுத்தன்மைகள் தோன்றி வளர்ந்து பரவி வேரூன்றி மனித சமுதாயத்தை ஒன்றுபடுத்தவும் கருவியாக அமைவது பத்திரிகை. அடுத்த வீட்டுச் செய்தியைக் கூடக் காலையில் பத்திரிகை மூலமே அறிய வேண்டும் என்ற அளவுக்கு வாழ்க்கையை அமைத்துக்கொண்ட நாம், ஒரு சிறிய கற்பனையைச் சிறிதளவு நேரமே செய்து பார்த்தால்போதும்; பத்திரிகையின் பயனை உடனே புரிந்துகொள்ளலாம். பத்திரிகையின் முகத்தில் விழித்தே நாளைத் தொடங்கும் இன்றைய பரபரப்பான உலகில் திடீரெனப் பத்து நாட்களுக்குப் பத்திரிகையே வரவில்லை என்று வைத்துக்கொள்ளுங்கள் அந்த நிலையை நம்மால் நினைத்துப்பார்க்கமுடியுமா? அறிவியலால் உலகம் சுருங்கிவருவதை உணரும் நாம், பத்திரிகை இல்லாவிட்டால் திடீரென்று உலகம் அண்டைவீட்டுக்காரர்களால் கூடத் தொடர்பு கொள்ள முடியாத அளவிற்கு மிகமிக

விரிந்துவிடுவதை உணர்வோம். அதனால்தான் 'பத்திரிகை உலகம்' என்றே இந்த உலகத்தை அறிஞர்கள் அழைக்கின்றார்கள். அரசியல் முதல் கலை, இலக்கியம், சமூகம், பொருளாதாரம் முதலிய அனைத்தும் இன்று பத்திரிகைகளைச் சார்ந்தே நிற்கின்றன. இதனை நன்குணர்ந்து பொறுப்புடன் பணியாற்றும் தமிழ்ப் பத்திரிகையாளராகிய முருகுவைத் தமிழ்ச் சமுதாயத்தினின்றும் பிரிக்க முடியாது; உலகச் சமுதாயதினின்றும் பிரிக்க முடியாது.

கடந்த முப்பதைந்து ஆண்டுகளுக்கும் மேலாகப் பத்திரிகையுடன் இரண்டறப் பிணைத்துக்கொண்ட வாழ்க்கை முருகுவின் வாழ்க்கை.

பத்திரிகை என்பது வெறும் பொழுதுபோக்கிற்காக ஏற்பட்டதல்ல; அதனை ஏற்படுத்தியவர்களும் சாதாரண மனிதர்களல்ல. அறியாமை நிறைந்த உலகில் விளக்குப்போலப் பத்திரிகை; இத்தகைய பத்திரிகை பிறந்த இடம் அறிஞர்கள் மனம். தமிழ்ப்பெரும் கவிஞரான பாரதிதாசன் இதனை ஒரு பாடலில் மிகச் சிறப்பாக புலப்படுத்தியுள்ளார்:

'காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீதான்! இந்தப்
பாரிடைத் துயில்வோர் கண்ணிற்
பாய்ந்திடும் எழுச்சி நீதான்!
ஊரினை நாட்டை இந்த
உலகினை ஒன்று சேர்க்கப்
பேரறி வாளர் நெஞ்சிற்
பிறந்த பத்திரிகைப் பெண்ணே!'

அறிஞர்கள் மனத்துப் பிறந்த இப்பத்திரிகைப் பெண்ணை மலேசியத் தமிழ் உலகில் போற்றி வளர்த்துவந்தவர் தமிழவேள் கோ.சா.; போற்றி வளர்த்து வருபவர் ஆசிரியர் முருகு.

ஆசிரியர் முருகுவின் எழுத்துப் பணியும் பத்திரிகைப் பணியும் 1939ஆம் ஆண்டே தொடங்கிவிட்டன. திருச்சியில் அர்ச். சூசையப்பர் உயர்நிலைப்பள்ளியில் படித்துக்கொண்டிருந்தபோது துளிர்த்த இப்பத்திரிகை ஆர்வம் தொடர்ந்து பல இன்னல்களுக்கிடையிலும் வளர்ந்து வருவதை இன்றும் நாம்

காணமுடிகிறது. பள்ளியில் படிக்கும்போதே ஆசிரியர் முருகு நடத்திய 'இளந்தமிழன்' என்ற திங்களிருமுறை கையெழுத்துப் பத்திரிகை அறிஞர் பலர் கவனத்தைக் கவர்ந்தது. நோபல் பரிசு பெற்ற அறிவியல் அறிஞரான சர்.சி.வி. ராமனின் துணைவியார் திருமதி லோகசுந்தரி இவ்விதழில் எழுதியவர்களில் குறிப்பிடத்தக்கவர். இதற்குப்பின், பாரதியாரை மகாகவி எனத் தமிழ் உலகிற்கு அறிமுகம் செய்துவைத்த வ.ரா. அவர்களுடன் நெருங்கிய தொடர்புடைய 'குமரன்' என்ற பத்திரிகையின் ஆசிரியராக முருகு அமர்ந்தார்.

சிறந்த தமிழறிஞராகவும் சீர்திருத்தச் செம்மலாகவும் விளங்கிய 'குமரன்' ஆசிரியர் சொ. முருகப்பா அவர்களிடம் முருகு பெற்ற அனுபவத்தை இன்றும் அவர் நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறார். அவருடன், பிற்காலத்தில் தமிழவேள் கோ. சா. அவர்களிடம் பெற்ற அனுபவமும் ஆசிரியர் முருகுவின் வாழ்க்கையில் இரண்டு முக்கிய அத்தியாயங்கள் எனலாம்.

இவர்களுடன் தம்மைப் பண்படுத்திய வேறு மூவரையும் முருகு குறிப்பிட மறப்பதே இல்லை. ''மற்றும் மூன்று பெரியார்களையும் நான் குறிப்பட வேண்டும். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், பன்மொழிப் புலவர் அப்பாத்துரை, கோ நகர் புலவர் வித்வான் விசு. திருநாவுக்கரசு ஆகிய மூவரும் என்னுள்ளே தமிழுணர்வு, இலக்கிய ஆர்வம், எழுத்தாற்றல் ஆகியவை வளர்வதற்குப் பெருந்துணை புரிந்தனர் என்பதே இங்கு நன்றியுடன் குறிப்பிடுகிறேன்'' என்று முருகுவே அவர்களைக் குறிப்பிட்டுள்ளார்.

இவர்களுள், பாரதிதாசனிடம் முருகு கொண்டுள்ள ஈடுபாடு மிகப் பெரிது. முருகு அவர்களுள் முழுமையாக நிறைந்திருக்கும் தமிழுணர்விற்கு வித்திட்டவர் பாரதிதாசன். 'தமிழை இகழ்ந்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன்; எமை நத்துவாயென எதிரிகள் கோடி இட்டழைத்தாலும் தொடேன்' என்ற பாரதிதாசன் கருத்தை வேதவாக்காகக் கொண்டவர் முருகு.

அதன் விளைவாக உருவாகித் தோன்றி வளர்ந்து வரும் தமிழ்ப்பள்ளி மாணவர் கல்வி நிதியை அனைவரும் அறிவர். பாரதிதாசன் தொடர்பு, அவருடைய வாழ்க்கையில் இரு முக்கிய மாறுதல்களைச் செய்துவிட்டது.

முதலாவது: இலக்கியத் துறைகளில் கவிதையில் அவருக்கு அளவற்ற ஈடுபாடு இருப்பினும், அதை வளர்த்துக் கொள்ளாமலேயே விட்டுவிட்டார். அதற்கான காரணத்தை முருகுவே இப்படி கூறுகிறார்: ''கவிதையே எனக்கு மிகவும் பிடித்த இலக்கிய வடிவம்.

ஆரம்பத்தில் எழுத்துத் துறையில் அடியெடுத்து வைத்த நேரத்தில் கவிதைகளையும் நான் எழுதியதுண்டு. பாரதிதாசனையும், பாரதியாரையும் ஈடுபட்டுப் படிக்கத் தொடங்கிய பிறகு என்னுடைய கவிதை ஆக்கத்தில் எனக்குள்ள நம்பிக்கை குறைந்து நான் கவிதை எழுதுவதை நிறுத்திக்கொண்டுவிட்டேன்.''

இது தமிழுக்கேற்பட்ட இழப்பு. இரண்டாவது: உணவுத் துறையில் சைவராக இருந்த முருகுவை அசைவராக மாற்றியது பாரதிதாசன்தான். இது சைவ உலகிற்கு ஏற்பட்ட இழப்பு. இன்றைக்கு முப்பத்தோரு ஆண்டுகளுக்குமுன் – 1945ல் ஆசிரியர் முருகு அவர்களின் திருமணத்திற்குப் பாவேந்தர் அளித்த வாழ்த்துப்பா, முருகுவிடம் அவர் கொண்டிருந்த அன்பைத் தெள்ளத் தெளிய உணர்த்துகிறது.

'குமரனு'க்குப் பிறகு ஆசிரியர் நடத்திய 'பொன்னி' என்ற இலக்கிய இதழ், தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு காவியம். 1947-ம் ஆண்டு பொங்கல் அன்று முதல் முதலாக வெளிவந்த 'பொன்னி' பல எழுத்தாளர்களையும், கவிஞர்களையும் தமிழுலகிற்கு அறிமுகம் செய்து வைத்தது.

'பாரதிதாசன் பரம்பரை' என்ற பெயரில் 'பொன்னி' அறிமுகப்படுத்திய கவிஞர்கள் பலர். பின்னர் பெரும் புகழ்பெற்றனர். இன்றைக்குக் கால் நூற்றாண்டுக்கு முன் 'பொன்னி' பாரதிதாசனுக்காக ஒரு சிறப்பு மலரை வெளியிட்டது.

அதில் திரு. வி. க. பாரதிதாசனைப் பற்றிக் கூறும் ஒரு கருத்து பாரதிதாசனை ஒரு புதிய கோணத்தில் காட்டுகிறதெனலாம். 'தம்முடைய மறதியினாலோ அல்லது வயதின் காரணமாகவோதான் விழாவெடுக்கவும், சிறப்பு மலர் வெளியிடவும் பாரதிதாசன் ஒப்புக்கொண்டிருக்கிறார்' என்று அம்மலருக்குத் தந்த சிறப்புச் செய்தியில் அறிவியல் அறிஞர் ஜி.

டி. நாயுடு குறிப்பிட்டுள்ளார். இச்சிறப்பில் பாதி முருகுவைச் சாரும்.

மலேசியத் தமிழ்ப் பத்திரிகை உலகம் ஒரு விநோதமான உலகம். இலக்கியத்திற்கென தனியாகப் பத்திரிகைகள் வராத சூழலில் இலக்கியத்தை வளர்க்கும் கடப்பாடு இவற்றிற்கு உண்டு. இதனை நன்குணர்ந்து 'நேசனி'ன் ஞாயிறு பதிப்புக்களை இலக்கிய வளர்ச்சிக்கு ஒதுக்கி முருகு ஆற்றும்பணி, அருமையும் பெருமையும் கொண்டது.

கவிதைகளுக்கும் கதைகளுக்கும் பவுன் பரிசு வழங்கும் திட்டம், பல்துறை அறிஞர்களையும் வாசகர்களுடன் தொடர்புகொள்ள வைக்கும் திட்டம்; வளரும் எழுத்தாளர் பக்கம் முதலிய பல பகுதிகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.

'ஆசிரியர் – நாட்குறிப்பு' என்று அண்மையில் அவர் தொடங்கியுள்ள பகுதி, பத்திரிகை ஆசிரியர்கள் எதிர் நோக்கும் சிக்கல்களையெல்லாம் உணர்த்தி, வாசகர்க்கும் பத்திரிகைக்கும் இடையில் ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தும் ஒரு சிறப்பான பகுதி. இவ்வாறு நாளும் பத்திரிகை உலகுடனேயே தம் வளர்ச்சியையும் வாழ்வையும் பிணைத்துக் கொண்டிருக்கும் முருகுவை 'முருகு அல்லது பத்திரிகை' என்று கூறுவது முற்றும் பொருந்தும்.

வாழ்க முருகு! வளர்க முருகுவின் பணிகள்!!

பின்னிணைப்பு - 6

நியாயக்குரல் × கு.சா.பெருமாள்

முருகு என்றால் தமிழ் என்று பொருள் !
முருகு என்றால் அழகு என்று பொருள் !
முருகு என்றால் இனிமை என்று பொருள் !
முருகு என்றால் உரிமை என்று பொருள் !
முருகு என்றால் எளிமை என்று பொருள் !
முருகு என்றால் கனிவு என்று பொருள் !
முருகு என்றால் பரிவு என்று பொருள் !
முருகு என்றால் அடக்கம் என்று பொருள்!

எல்லாவற்றுக்கும் மேலாக இந்நாட்டைப் பொறுத்தவரை 'முருகு' என்ற முத்தமிழுக்கு உரிமை, துணிவு, சுயமரியாதை, தீரம், வீரம், தூண்டுகோல்,வழிகாட்டி, காவலர், தானைத் தலைவர்,சமுதாய உணர்வு, சமுதாய முதுகெலும்பு, தமிழர் தலைவர், அண்ணா,ஆசிரியர், ஆலோசகர், முத்தமிழும் அறிந்த பெரும் மேதை என்றும்கூட பொருள்.

இத்தகைய உயரிய சிறப்புக்குரிய பெருமகனுடன் சமூகத்துக்குள்ள தொடர்புபற்றிச் சிந்திக்கும்போது கால்நூற்றாண்டு இந்தியர் தம் வரலாற்று வரிகள் நிழல் படங்களாக நம்முடன் வந்து – வந்து மோதுகின்றன.

எத்தனை – எத்தனையோ வரலாற்றுப்படிகளில் முத்தமிழாரின் முத்திரைகள் – தலையங்கப்பகுதியின் கைச்சாத்துகள் – வீரம் சொரிந்த எழுத்துப்படிகள், எத்தனை எத்தனையோ........!

முருகு முழங்காத எந்தப் பிரிவும் சமுதாயத்தில் இல்லை எனலாம்.தமிழ் உணர்ச்சி, தமிழன் உரிமை, சமுதாயப்பங்கீடு, மொழிப் பாதுகாப்புக் குரல் – கலாச்சாரம், சமயம், மேம்பாடு எல்லாம் அவரது இதே தாகங்களாகும்.

அதே சமயம் நாட்டுக்கு நன்மைகளைச் சேர்த்தல் – தேசிய

உணர்வு - கம்யூனிச எதிர்ப்பு - கீழறுப்பு முறியடிப்பு எல்லாவற்றிலும் அவரது பணிகள் அயர்வின்றி இடம்பெற்றுள்ளன.

நெஞ்சில் கைவைத்துப் பார்க்கும் இதயமுள்ள பொதுத்தொண்டன், அரசியல் தலைவன், இந்திய அமைச்சர்கள், மாண்புமிகுகள் அனைவருமே முருகுவின் சுய நலமற்ற நன்றியைப் பெற்றவர்களே.அதுகுறித்து இங்கே கேள்விக்குறியே இருக்கமுடியாது.

சமுதாய அரசியல் இயக்கங்களுக்கு –பொதுத்தொண்டனுக்கு எங்கெல்லாம் அநீதி இழைக்கப்படுகிறதோ அங்கெல்லாம் முருகுவின் இதம் எல்லாவகையிலும் பாரபட்சமின்றி நீத்திக்குக் குரல்கொடுக்கும்.

நாட்டின் பெரிய அமைப்புக்களான ம.இ.கா., தே.தோ.தொழி லாளர் சங்கம்,தேசிய நிலநிதிக்கூட்டுறவு சங்கம், ம.தி.க , தமிழ் இளைஞர் மணிமன்றப்பேரவை இன்னும் இருக்கின்ற முக்கிய அமைப்புக்கள் அனைத்துமே முருகுவின் நன்னோக்கத்தை எருவாகக் கொண்டு வளர்ந்த ஆல விருட்சங்களாகும்.

சமுதாய உரிமைக்கும் – நீதிக்கும் போராடும் முருகுவின் பேனாவின் எழுத்துக் கூர்மையால் அபிப்பிராய பேதங்கள் பல தோன்றித் தோன்றித் பூகம்பமாக சர்ச்சைகளை – மனக்கசப்பை ஏற்படுத்தி மறைந்தாலும் அவரது நன்னோக்கம் எல்லாருமே ஏற்றுக்கொள்ளத்தக்கது என்பதை நாடெங்கும் நடைபெறும் பொன்விழா நிகழ்ச்சிகளே உறுதிப்படுத்துகின்றன.

உலகமே அதிர்ச்சிக்குள்ளாகும் ஒரு மாபெரும் சம்பவம் அமெரிக்காவில் நடைபெற்றிருந்தாலும்; எங்காவது ஒரு மூலையில் ஒரு தமிழனுக்கு இழுக்கென்றால் – அவன் பேசும் தமிழுக்குத் தலைகுனிவு என்றால் – முருகுவின் எழுதுகோல் தமிழனுக்கும் – தமிழுக்குமே முதல் வாய்ப்பினை வழங்கும் உரிமைக்கு வித்திடும். அத்தகைய சமுதாய மொழி உணர்வு முருகுவின் உதிரத்தோடு ஊறி துடிப்போடு ஓடிக் கொண்டிருக்கிறது.

சகோதரர் முருகுவோடு எனக்கு ஏற்பட்ட உறவு தமிழால் ஏற்பட்டதாகும்.அது தலைநகரில் ஏற்பட்ட மாபெரும்

வெள்ளத்தோடு இரண்டறக் கலந்ததாகும்.

ஆம்! வெள்ளம் ஏற்பட்டபோது நானும் அவரும் ஒருவருக்கொருவர் உதவிக்கொண்டு ஒன்றாக இணைந்து உண்ணும் வாய்ப்பும் பெற்றோம். இன்பத்திலும் துன்பத்திலும் இணைந்திருக்கும் பேறு இறைவன் கிழித்த அழுத்தமான கோடுகள் அல்லவா?

அன்றுதொட்டு எங்களிடையே சகோதரப்பிணைப்பு வேரூன்றிவிட்டது. இடையில் ஏற்பட்ட எத்தனயோ கருத்து மாற்றங்கள் எங்களை ஒன்றும் செய்வில்லை.அவற்றை ஒரு தொலைபேசி உரையாடலில் முளையிலேயே கிள்ளி எறிந்துள்ளோம்.

நான் கடந்த காலங்களில் நடத்திய எனது சொந்தப்போராட்டங்களின் போதும், அவர் நடத்தும் சமுதாயப்போராட்டங்களின் போதும் எங்கள் இருவரது உறவும் ஒத்துழைப்பும் பரஸ்பரமாகவே இருந்துவந்துள்ளது.நரிக்குணங் களின் திருப்பணிகள் அங்கே வெற்றி பெறவில்லை.

ஒருமுறை எழுத்தாளர் சங்கத்தில் அவர் தலைவராகவும், நான் செயலாளராகவும் இருந்து பணிபுரியும் வாய்ப்பு ஏற்பட்டது.அதேபோல் அறிஞர் அண்ணா மறைவு குறித்து அனுதாபக் கூட்ட ஏற்பாட்டிலும் இருவரும் அதே பொறுப்புகளில் இருந்தோம்.

இச்சேவைகளில் எங்களுக்கு ஏற்பட்ட நெருக்கடிகளும் கருத்துவேறுபாடுகளும் பல.இருந்தாலும் அவரது அடக்கம் எனது ஆவேசத்தை அவ்வப்போது அவரது பெருந்தன்மையான அறிவுரை மூலம் வெற்றி கொண்டுள்ளது.என்ன இருந்தாலும் அவர் மேதையாகவே விளங்கினார்.

1969ல் டாக்டர் இராமசுப்பையாவின் தமிழ்ப்பள்ளி புனரமைப்புக் கொள்கையை இருவருமே எதிர்த்தோம். அதன் பலன் டாக்டரோடு மனவேறுபாடு. அதனால் தொழிலில் எனக்குத்தொல்லை துவங்கியது.நான் டாக்டர் மீது நெருப்பாகிவிட்டேன்.

ஒருநாள் டாக்டர் திடீரென நம்மை ஏமாற்றிவிட்டுப்

போய்விட்டார்.அன்று தொலைபேசியில் அழைத்த முருகு அவர்கள் நாம் இருவரும் டாக்டரின் அடக்கத்துக்கு இணைந்தே போகவேண்டும். அனுதாபக்கூட்டமும் நடத்தவேண்டும் என்றார். நான் தயக்கமின்றி ஒப்புக்கொண்டேன்.அன்று முருகு அவர்கள் சுமார் ஒரு மணி நேரம் நடந்துவிட்ட சம்பவங்களுக்கு சமாதானம் சொன்னார்.மிக லாவகமாக......... (அதே போன்று மலேசிய வானொலியின் தலைவர் இரா.பாலகிருஷ்ணனுடன் ஏற்பட்ட தகராறையும் முருகுவே தீர்த்துவைத்தார்.) எல்லாம் முடிந்து வீட்டுக்கு வந்த நான் முருகுவின் பெருந்தன்மையை நினைத்து வியந்ததோடு அனுதாபக்கூட்டத்திற்கும் ஏற்பாடு செய்தேன்.

நான் எழுதத் துவங்கி எத்தனயோ எழுத்துப்படிகளை முருகுவுக்கு அனுப்பியுள்ளேன்.அவர் பிரசுரிக்க விரும்பாமல் குப்பையில் போட்ட எந்தப்படி குறித்தும் எப்பொழுதும் கேள் வி எழுப்பியதோ – பிரசுரிக்க பேரம் பேசியதோ இல்லை.அவர் ஆசிரியர் மட்டுமல்ல – சமூக் காவலர் – நமையும் தீமையும் அவர் அறிந்ததே என விட்டுவிடுவேன்.

பிரசுரிக்காத எழுத்துப்படிகளைப்ப்றி இருவருமே மௌனம் சாதிப்போம்.எப்பொழுது பார்த்தாலும் நீங்கள் பிரச்னைகளைப் புரிந்தவர், நிறைய எழுதுங்கள். அதேபோல் உங்களைப் பொருளியலில் பலப்படுத்துங்கள் .தியாகியாகி ரோட்டுக்கு வந்துவிடாதீர்கள் என ஆலோசனை கூறுவார்.

எந்தக்காலத்திலும் நியாயமற்ற பிறரது நெருக்குதலுக்கு அடிபணியாது சுதந்திரமாகக் கருத்துக்களைப் படித்து - பேசி வரும் முருகு அவர்கள் தீட்டிய தலையங்கங்கள் பெரும்பாலும் அனைத்தையும் நான் தவறாது படிப்பதுண்டு. அவற்றில் இறுதிப்பகுதிகள் மிகவும் முக்கியமானவை.அங்கேதான் அந்தத் தலையங்கத்தின் உயிரும் உள்ளக்கிடக்கையும் அடங்கிக் கிடக்கும். சமுதாய உணர்வும்-உரிமையும் –நியாயக்குரலும் அங்ககே நிழல்படம்போல் பேசும்.

அறிஞர் அண்ணா, பிரதமர் துன் அப்துல் ரசாக், டான் ஸ்ரீ டத்தோ ஆதிநாப்பன் ஆகியோரின் மறைவின் போதும் தமிழகத்தமிழன் அரசு கவிழ்க்கப்பட்ட போதும் அரசியல்வாதிகளின் தாக்குதலுக்கு எதிரடி கொடுக்கும்போதும் சமுதாய உரிமைக்குக் குரல்கொடுக்கும் ஒவ்வொரு முறையும் ''

முருகு'' என்றால் தன்மானத்தமிழன் - தந்தை பெரியார், பேரறி ஞர் அண்ணா ஆகியோரின் பாசறைக்குண்டு. நிதானம் , சகிப்புணர்ச்சி ஆகியவற்றோடு ''காரம்'' இடைக்குத்தும் எழுதுகோலை அவர் தமது கரங்களில் ஏந்தியுள்ளார் என்பதை நாம் அறியமுடியும்.அவ்வப்போது காந்திய வாடையும் இழையோடும்.

சமுதாய வாழ்வில் உயிரையே வைத்துள்ள முருகுவின் நோக்கில் எப்போதும் சுய நலம் மேலோங்கியிருந்ததே இல்லை எனலாம்.

இன்று அரசியலாரிடமிருந்து அவர் பெற்றுள்ள விருதுகள் அவரைத் தேடி வந்தவை.அவர் சமூகத்தில் பெற்றுவரும் பேரும் புகழும் அவரது உழைப்பாலும் அவரிடம் குடிகொண்டிருக்கும் நல்லெண்ணத்தாலும் – சமுதாயம் வாழவேண்டும் என்ற லட்சிய உணர்வாலும் புரிந்துணர்வாலும் பெறப்பட்டவை.

தமிழகத்து இராம.அரங்கண்ணல் இங்கு வந்திருந்தபோது,''நீங்கள் தமிழகத்திலேயே தங்கியிருந்தால் இன்று ஒரு மந்திரியாகி இருப்பீர்கள் அல்லது பல லட்சங்களுக்கு அதிபதியாகி இருக்கலாம்.நீங்கள் இருக்கவேண்டிய இடத்தில் யார்............ யாரோ'' எனக் குறிப்பிட்டார். அப்போது நானும் உடனிருந்தேன். எனக்கு ஒரே ஆச்சரியம்!

பத்திரிகைத்துறை நிர்வாகத்தில் நானும் பல பழம்புலிகளிடம் வேலை பார்த்துள்ளேன்.ஆனால் முருகுவின் நிர்வாகத்திறன், செய்திகளைப் பிரசுரிக்கும் முறை, செய்திகளைத் தேர்வுசெய்யும் சாதுர்யம் அவருக்கு உரிய தனிக்கலையாகும்.

இன்று தமிழ்நேசன் மலேசியாவில் மட்டிமின்றி உலகின் தமிழறிந்தோர் இல்லமெலாம் ஒரு நினைவாக விளங்குதற்கு மறுகு அண்ணாவின் அறிவாற்றல் – தமிழாற்றல் – நிர்வாகத்திறன் – சக ஊழியர்களிடம் அவர் கொண்டுள்ள பற்று ,பாசம் – அவர்கள் முருகு மீது கொண்டுள்ள பணிவு –மரியாதை – நம்பிக்கை ஆகியவையோடு சமுதாயம் முருகு மீது கொண்டுள்ள அசைக்கமுடியாத நம்பிக்கையும் காரணமாகும்.

முருகுவின் எல்லாப் பணிகளுக்கும் சிகரம் போன்றது அவர் துவக்கிய தமிழ்ப்பள்ளி மாணவர் கல்வி நிதி ஆகும். இந்நிதி துவக்கி அவர் அடைந்த இன்னல்களை சமுதாயம் நன்கு அறியும்.

ஆனால் கால ஓட்டம் அந்நிதிக்கு எல்லா வகையிலும் ஆதரவையும்- எதிர்த்தோரின் இன்முக ஆதரவையுங்க்கூட பெருமனதுடன் வழங்கியிருக்கிறது. தமிழ்நேசன், தமிழ்ப்பள்ளிகள் முருகுவின் வரலாற்றில் முக்கியப்பகுதிகளால் இக்கல்விநிதி நிச்சயம் விளங்கமுடியும்.

''தோன்றின் புகழோடு தொன்றுக் அ ஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று ''

என்பதை முருகுவின் இத்தமிழ்ப்பணி என்றும் வரலாற்றுக்காலம் தொட்டுப் போற்றிவரும்.

பின்னிணைப்பு - 7

இராம. கண்ணபிரானுடன் நேர்காணல்

24 – 4 – 2016 அன்று சிங்கப்பூரில் இராம. கண்ணபிரான் அவர்களின் இல்லத்தில் நூலாசிரியர் முனைவர் எம் எஸ் ஸ்ரீ லக்ஷ்மி அவர்கள் முருகு சுப்பிரமணியன் பற்றி நிகழ்த்திய நேர்காணல்.

1) உங்களின் எழுத்துவளர்ச்சிக்கு உதவியோர் யாவர்?

தமிழவேள் கோ. சாரங்கபாணி அவர்கள், தம் சிங்கைத் 'தமிழ் முரசு' பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் பணியாற்றுவதற்காக, தமிழகத்திலிருந்து வரவழைத்த ஆசிரியர்களுள் இருவர், என் படைப்பிலக்கிய ஆக்கத்திற்கு மிகவும் உறுதுணையாக இருந்துள்ளனர். தொடக்கத்தில் திரு. முருகு சுப்பிரமணியன் அவர்களும், பின்னர் திரு. வை. திருநாவுக்கரசு அவர்களும் என் எழுத்து வளர்ச்சிக்கு உதவியிருக்கிறார்கள்

2) முருகு. சுப்பிரமணியனின் அறிமுகம் உங்களுக்கு எப்படி வாய்த்தது?

சிங்கை நாடாளுமன்றத்தில் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றிய திரு.எஸ். நாராயணன் அவர்களின் மைத்துனர் திரு.சுப்பிரமணியன் செட்டியார் அவர்களே, முரசின் துணை ஆசிரியரான முருகுவை எனக்கு அறிமுகப்படுத்தினார்

3) முருகு. சுப்பிரமணியன் உங்களின் வாசிப்புப் பழக்கத்திற்கு எவ்வாறு தூண்டுகோலானார்?

வாசிப்பதிலும், சிறுகதை எழுதுவதிலும் ஆர்வம்கொண்டிருந்த என்னை, *1956*ஆம் ஆண்டுவாக்கில், முருகு சுப்பிரமணியனிடம் அறிமுகம்செய்து வைத்தார், திரு. எஸ். நாராயணனின் மைத்துனர்.

அப்போது முருகு அவர்கள், பப்ளோ சாலையில் 63ஆம் எண் கொண்ட இரண்டு தளமுடைய வீட்டில் தங்கியிருந்தார். அங்கு

அவரைச் சிலமுறை சந்தித்திருக்கிறேன். பள்ளிச் சிறுவனான என்னிடம் அவர் மரியாதையாகப் பேசினார். தம் 'பொன்னி' இதழ்களை எல்லாம் ஒரு பெரும் புத்தகமாகப் 'பைண்ட்' செய்து வைத்திருந்தார். அவர் அதை என்னிடம் வாசிக்கத் தந்தார். அவர் அறையிலேயே அமர்ந்து, தொகுதியில் இருந்த எழுத்தாளர் அகிலனின் சில சிறுகதைகளைப் படித்தேன். 'அகிலன் எழுத்து உங்களுக்குப் பிடிக்குமா?'' என்று கேட்டார்.'' ஆம், '' என்று சொன்னதும் திருச்சி பழனியப்பா பிரதர்ஸ் என்னும் பதிப்பகம் வெளியிட்டிருந்த அகிலனின் ' வாழ்வில் இன்பம் ' என்ற நாடகநூலைத் தந்தார். அடுத்த இரு நாட்களுக்கு, முருகுவின் இருப்பிடம் சென்று அங்கேயே ஜமக்காளத்தில் அமர்ந்து, டி.கே.எஸ்.சகோதரர்கள் நடித்த அந்த நாடக்கப் பனுவலையும் வாசித்துமுடித்தேன்.

4) இராபிள்ஸ் கல்வி நிலையம் திரு. முருகு. சுப்பிரமணியன் அவர்களை எவ்வாறு பயன்படுத்திக்கொண்டது?

1958 இல் என்னுடைய இரண்டு சிறுகதைகள் தமிழ்முரசில் பரிசுபெற்ற கதைகளாக வெளிவந்தன. மறுஆண்டு, நான் படித்துக்கொண்டிருந்த இராபிள்ஸ் கல்வி நிலையத்தின் தமிழ்க்கலாசார மன்றம் முருகு சுப்பிரமணியன் அவர்களைச் சிறப்புப் பேச்சாளராக அழைத்தது. என் தமிழ் ஆசிரியர் திரு குமாரசிங்கம் என்னை முருகுவிடம் அறிமுகம் செய்தபோது ''கண்ணபிரானை எனக்கு ஏற்கெனவே தெரியுமே'' என்றார். அன்றைய நிகழ்வில் முருகு சுப்பிரமணியன் ஔவையாரின் ' மூதுரை'ப் பாடல்களைப் பற்றி , மாணவர்களாகிய எங்களிடம் பேசினார்.

5) தமிழ்முரசின் 'எழுத்தாளர் அறிமுகம்' என்னும் பகுதியில் தாங்கள் அறிமுகமானது பற்றிக் கூறுங்கள்.

1960 இல் 'அமைதி பிறந்தது ' என்ற தலைப்பில் ஒரு சிறுகதையை எழுதித் தமிழ் முரசுக்கு அஞ்சலில் அனுப்பினேன். முரசு ஞாயிறுப் பதிப்புக்கு அப்போது பொறுப்பு வகித்த முருகு சுப்பிரமணியன் அவர்கள் அந்தக் கதையை *09.10.1960* ஞாயிறு பதிப்பில் பிரசுரித்து, 'எழுத்தாளர் அறிமுகம் 'என்ற பகுதியில் என்னைப் பற்றிச் சில வரிகள் எழுதி,முரசு வாசகர்களுக்கு என்னை அறிமுகம் செய்தார். சிராங்கூன் சாலையில் இருந்த என்

தந்தையார் ஜவுளிக்கடையில் தங்கியிருந்த தமிழ்முரசு அச்சுக்கோப்பாளரான திரு மு.பொன்னழகு மூலம் சொல்லி, என் புகைப்படத்தைப் பெற்று, அதையும் ' எழுத்தாளர் அறிமுகம் ' பகுதியில் பதிவேற்றினார் முருகு சுப்பிரமணியன்.

6) முருகுவின் குணங்களுள் தங்களை வசீகரித்த / கவர்ந்த பண்புகள் பற்றிக் கூற முடியுமா?

முருகுவின் அடக்கமும் எளிமையும் எல்லோரையும் கவரும் பண்புகள் என்றாலும் அவர் வயதில் சிறியவர்களைக் கூட மரியாதையோடு நடத்துவதும் பேசுவதும் என்னை மிகவும் கவர்ந்தது. முருகுவின் மூத்த மகன் செல்வம் சிங்கைக்கு முதன்முதலாக வந்திருந்த நேரம். ஒருநாள் மாலை வேளையில், முருகு சுப்பிரமணியன் என்னைப் பார்க்க, எங்கள் கடையின் மேல்மாடிக்கு வந்தார். எனக்குப் புல்லரித்துப்போனது. தம் மகனின் கல்விப் பயன்பாட்டிற்கு, என்னிடமிருந்து ஆங்கிலம், கணக்கு, வரலாறு தொடர்பான சில பள்ளிப்பாடப் புத்தகங்களைப் பெற்றுச் செல்வதற்காக, அவர் வந்திருந்தார் என்பதைப் பின்னர் உணர்ந்தேன்.

7) தமிழ்நேசன் ஆசிரியராக முருகு பணியாற்றிய வேளையில் உங்களுக்கும் அவருக்கும் இடையே தொடர்பு எவ்வாறு இருந்தது?

*1973*ஆம் ஆண்டு, 'தமிழ் நேசன்' நடத்திய 'பவுன்பரிசுக் கதைகள்' விருதளிப்பு விழா நிகழ்ச்சிக்கு நான் கோலாலம்பூர் சென்றேன். அப்போது முருகு சுப்பிரமணியன் 'தமிழ் நேசன்' ஆசிரியராகப் பணியாற்றிக்கொண்டிருந்தார். என் 'இருபத்தைந்து ஆண்டுகள்' சிறுகதையைப் பரிசுக்குத் தேர்ந்தெடுத்த ஐந்து நீதிபதிகளுள் அவரும் ஒருவர். நிகழ்ச்சியின்போது, ''மலேசியாவின் தென்பகுதியிலுள்ள சிங்கப்பூரிலிருந்து, கண்ணபிரான் நம் நிகழ்வுக்கு வந்துள்ளார்,'' என்று தம் தலைமை உரையில் மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

8) முருகுவின் நினைவுகள் உங்களிடம் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தியது?

*1977*இல் சிங்கப்பூர்ப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேரவை நடத்திய 'சிங்கப்பூரில் தமிழும் தமிழ் இலக்கியமும்' என்ற

முதலாவது ஆய்வரங்கில், 'சிங்கப்பூரில் தமிழ்ச் சிறுகதை' என்ற தலைப்பில் நான் ஒரு கட்டுரையை வாசித்தேன். அதில்,முருகு சுப்பிரமணியன் அவர்கள் தமிழ்முரசில் சிறுகதைகள் எழுதி யிருக்கிறார். அவற்றுள் ஒரு படைப்பு 'சின்னப்பயல்' என்ற சிறு கதை. 1955இல் வெளிவந்த அக்கதை, தொடக்கம், பின்னோட்ட நிகழ்ச்சி, முடிவு என்ற பின்னலுடன் புனையப்பட்டுள்ளது,' எனக் குறிப்பிட்டபோது, நான் மிகவும் நெகிழ்ந்துபோனேன்.

9) எழுத்தாளர்க்கு வழிகாட்டி என முருகு அவர்களை வருணிப்பது பொருந்துமா? உங்கள் கருத்து என்ன?

முருகு அவர்களை எழுத்தாளர்க்கு வழிகாட்டி என வருணிப்பது முற்றிலும் பொருந்தும். முருகு சுப்பிரமணியன் அவர்களை இன்றைய பொழுதில் நினைவுகூர்கையில், அவர் என்னைப்போன்ற பலரைப் படைப்பிலக்கியத் துறையில் ஊக்குவித்து, வளர்த்தார் என்றும், வயதில் சிறியவர்களிடத்தும் மரியாதையுடன் பழகினார் என்றும், சிறுகதை – கவிதை – கட்டுரை முதலிய இலக்கிய வகைகளில் நேர்த்தியுடன் எழுதக்கூடியவர் என்றும், 'பொன்னி' என்ற இலக்கிய ஏட்டை நடத்திய ஒரு சிறந்த இதழாளர் என்றும் 'தமிழ் நேசன்' என்ற மலேசியத் தேசிய நாளேட்டின் ஆசிரியராகப் பணியாற்றி, அரசியல், சமுதாய, இலக்கியத் தலையங்கங்களைக் கருத்துடன் எழுதியவர் என்றும் நான் கூறுவேன்.தாம் எழுத்தாளராக மட்டுமின்றிப் பன்முக ஆளுமையாக விளங்கியதோடு அவர் ஒரு முன்மாதிரியாகவும் விளங்கினார். எம்.கே.நாராயணன், வலயன்வயல் முத்து போன்ற எழுத்தாளர்களையும் அவர் ஊக்குவித்தார்.எனவே அவரை எழுத்தாளர்க்கு வழிகாட்டி என வருணிப்பது சாலப் பொருந்தும்.

10) முருகுவின் பன்முக ஆளுமை பற்றி வெகுவாக சிலாகிக்கும் தாங்கள் முருகுவிடம் ஏன் தங்களின் முதல் சிறுகதைத் தொகுப்பிற்கு ஏன் முன்னுரை பெறவில்லை?

என் முதல் சிறுகதைத் தொகுப்பிற்கு, என் மாணவப் பருவத்தில் கதைத்துறையில் என்னை ஊக்குவித்த முருகு சுப்பிரமணியன் அவர்களிடமிருந்துதான் ஒரு முன்னுரையைப் பெறவேண்டும் என்று உறுதிபூண்டிருந்தேன். அதற்குள் அவர் அமரத்துவம் எய்திவிட்டார். இதை நான் பெரும் இழப்பாகவே கருதுகிறேன்.

பின்னிணைப்பு -8

17.05.2016 அன்று திரு சை.பீர் முகமது அவர்களுடன் நடத்திய இணையப் பேட்டி.

1. தாங்கள் திரு முருகு சுப்பிரமணியன் அவர்களின் அறிமுகத்தை எப்படிப் பெற்றீர்கள் ?

சிங்கப்பூரில் எழுத்தாளர்கள் பலர் உருவாவதற்குமட்டுமல்ல; மலேசியாவிலும் அக்காலகட்டத்தில் எழுதிய எழுத்தாளர்கள் பலரும் அவரின் அரவணைப்பிற்குள் தெரிந்தோ தெரியாமலோ இருந்துள்ளார்கள். அப்படி வளர்ந்தவர்களில் நானும் ஒருவன்.

2. திரு முருகுவை முதன்முதலில் சந்தித்த அனுபவம்பற்றிக் கூறமுடியுமா ?

1961 ஆம் ஆண்டு அவரைச் சந்திக்க நானும் முத்தமிழ்ப் படிப்பகத்தில் பொறுப்பாளர்களாக இருந்தவர்களும் அவரைச் சந்திக்கச் சென்றோம். அரைக்கை வெள்ளை பனியன் அணிந்து கைலியுடன் காட்சியளித்தார். பேச்சுக்கிடையில் அடிக்கடி வெற்றிலையை மென்றுகொண்டே எல்லா விஷயங்களையும் சுற்றிவந்தார்.அன்று எனக்கு அவரின் முகத்தைவிட அந்த வெடிச்சிரிப்புதான் மனதில் நின்றது.

3. தங்களுக்கு இடையில் நிலவிய நட்பு எத்தகையது?

முதல் சந்திப்புக்குப்பிறகு அவரைக் காணும் வாய்ப்பு ஏற்பட்டாலும் ஒரு வெட்கப்பட்ட சங்கோஜத்துடன் தான் பழகி வந்தேன். மேலும் 1962 ஆம் ஆண்டு மலாயா தமிழ் எழுத்தாளர் சங்கம் பதிவு பெற்றபோது அதன் அமைப்புக்குழுவிலும், அதன் பிறகு தொடர்ந்து சில ஆண்டுகள் சங்கச்செயலவையில் நான் தீவிரமாக இருந்து செயல்பட்டேன்.

சங்கத்தின் வழி நானும் சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முருகு அவர்களும் நெருங்கிப்பழக

வாய்ய்ப்புக்கிடைத்தது. பின்னர் இந்த நட்பு என்னை அவர் குடும்பத்தில் ஒருவராகவே ஆக்கிவிட்டது.

4. மக்கள் ஓசை பத்திரிகையில் சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு முருகு சுப்பிரமணியன் பற்றிய தொடர் கட்டுரை ஒன்று மூன்று வாரங்களுக்கு எழுதினீர்கள்? அக்கட்டுரையில் முருகு சுப்பிரமணியன்- கண்ணதாசன் தொடர்பு பற்றி எழுதியதாக நினைவு.அதுபற்றிக் கூறுங்கள்.

முருகு சுப்பிரமணியம் நினைவுகள் பற்றி '' சிந்தையே என் சித்தமே'' என்னும் தொடரில் 25,26 ஆம் பகுதிகளில் எழுதியிருந்தேன். அதில் இடம்பெற்ற பகுதியை அப்படியே கீழே தருகிறேன்.'' தமிழ்நாட்டில் முருகு இருந்த காலக்கட்டத்தில் 'பொன்னி' என்ற இலக்கிய இதழை நடத்தினார். இலக்கியவட்டங்களில் மட்டுமல்லாது, தி.மு.க. வட்டத்திலும் இப்பத்திரிகை மிகப்பிரபலமாக விளங்கியது.

இப்பத்திரிகையில்தான் அவர் 'பாரதிதாசன் பரம்பரை' என்ற தலைப்பில் புதிய புதிய கவிஞர்களை அறிமுகப்படுத்தினார். வாணிதாசன், முடியரசன், சுரதா போன்ற கவிஞர்கள் இங்கேதான் அறிமுகமானார்கள்.அக்காலக்கட்டத்தில் இளைஞராக இருந்த கண்ணதாசன் ஒரு கவிதை எழுதி அதை முருகுவிடம் தந்து பாரதிதாசன் பரம்பரை பகுதியில் பிரசுரிக்குமாறு கேட்டுள்ளார்.

கவிதையை வாங்கிப்பார்த்த முருகு ,''உனக்குக் கவிதை வராது. கதை எழுதிக்கொண்டு வா'' என்று கூறி அனுப்பிவிட்டார். அந்தக் கண்ணதாசன்தான் பிறகு தனது முயற்சியால் முன்னேறிக் கவியரசு கண்ணதாசன் என்று புகழ் பெற்றது மட்டுமல்ல. இன்றும் திரையிசைப்பாடல்களில் அவரை மிஞ்சுவார் யாருமில்லை என்ற சரித்திரத்தையும் உண்டுபண்ணிவிட்டுச் சென்றுவிட்டார்.

5. மலாயா எழுத்தாளர் சங்கத்தின் தொடக்ககாலத்தில் முருகுவின் பணிபற்றி அவருடன் அணுக்கமாகப் பழகியவர் என்ற முறையில் தகவல்கூற முடியுமா?

1962ஆம் ஆண்டு பதிவு ரத்தாகிவிட்ட மலாயா தமிழ் எழுத்தாளர் சங்கத்தை உயிர்ப்பிக்க கவிஞர் சி.வேலுசுவாமி அவர்கள் முயற்சிகள் மேற்கொண்டார். முருகு மலாயா வந்ததும்

எழுத்தாளர்களிடத்திலும் ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டது என்பது மறுக்கமுடியாத உண்மை.

மலாயா எழுத்தாளர் சங்கத்தின் முதல் அமைப்புக் கூட்டம் 37ஆம் நம்பர் ஜாலான் அம்பாங்கில் அப்பொழுது இருந்த தமிழ்நேசன் பத்திரிகை அலுவலகத்தின் மேல்மாடியில் இருந்த நாட்டுக்கோட்டை செட்டியார்கள் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அதன் முதல் அமைப்புத் தலைவராக முருகு சுப்பிரமணியன் தேர்ந்தெடுக்கப்பட்டார். சீ.வி.குப்புசாமி,சி.வேலுசுவாமி,கணபதி, தி.சு.சண்முகம், கு.ஏழுமலை, எம்.துரைராஜ், ப.சந்திரகாந்தம், க.கிருஷ்ணசாமி, சா.ஆ அன்பானந்தன் போன்றவர்களோடு நானும் கலந்துகொண்டேன்.

அப்போதைய அமைப்புச்செயலாளராக திரு. கணபதி இருந்தார். சங்கத்தின் பதிவுக்காக அதன் சட்டதிட்டங்களை ஒழுங்குபடுத்தி அரும்பாடுபட்டவர் திரு கணபதி அவர்களே. 1962 ஆம் ஆண்டு சங்கம் பதிவு பெற்றதிலிருந்து முருகுவுடன் நான் அணுக்கமாக இருத்து பற்றி முன்னர்க் குறிப்பிட்டு விட்டேன். அப்போது செயலாளராக இருந்த கு.சா.பெருமாள் தன்னால் தொடர்ந்து அப்பணியில் இருக்கமுடியாது எனக் கூறவே முருகு என்னைச் செயலாளராக இருக்கும்படிக் கேட்டுக்கொண்டார்.

அவ்வாண்டு அப்பர் தமிழ்ப்பள்ளியில் நடந்த பொதுக்கூட்டத்தில் நான் செயலாளராகவும், முருகு அவர்கள் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டோம்.

6. முருகுவின் தலைமைத்துவத்தில் எழுத்தாளர் சங்கம் செய்த பணிகள் பற்றிக் கூறுங்கள்.

முதன்முறையாகப் பத்துமலைக் கலைக்கூடத்தில் தேசிய எழுத்தாளர் சங்கத்துடன் இணைந்து மிகப் பெரிய கருத்தரங்கு ஒன்றை நடத்தினோம். தேசிய எழுத்தாளர் சங்கத்தின் (கபேனா)தலைவர் இஸ்மாயில் ஹுசைன், கீரிஸ்மாஸ், அகமட் போஸ்த்தமம், கமேலா, கவிஞர் ஒஸ்மான் அவாங், ரஹீம் ரசாலி, டாக்டர் சனோன் அகமட் ஆகியோர் இக்கூட்டத்தில் பேசினார்கள். இக்கூட்டம் தேசிய எழுத்தாளர் சங்கத்துடன் நாமும்

இணைவதற்கான ஒரு பாலம் போடப்படட்டது வகையில் அமைந்தது. அப்போது துணைச் செயலாளராக இருந்த திரு. பொன்முகம் அவர்கள் தேசிய மொழி வளர்ப்பு நிறுவனத்துடன் (டேவான் பஹாசா டான் புஸ்தாகா) மிக அணுக்கமாகச் மாதாமாதம் சிறுகதைக் கருத்தரங்கு ஒன்றை நடத்தி எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவரும் சிறுகதைகளில் சிறந்த ஒன்றைத் தேர்ந்தெடுத்து ஐம்பது வெள்ளி பரிசு வழங்குவது என்னும் திட்டத்தை நான் பரிந்துரைத்தேன். அப்போது பணவசதி போதாது என்பதால் முருகு இத்திட்டத்தை ஏற்கமறுத்தார்.பின்னர் நான் அரசியல்வாதிகள், பொதுநலத்தொண்டர்கள், நண்பர்கள் ஆகியோரோடு தொடர்பு கொண்டு இக்கருத்தரங்கு பற்றிப் பேசினேன். அவர்களின் அமோக ஆதரவு கிடைத்ததும் சிறுகதைக் கருத்தரங்கு நடத்தும் திட்டத்திற்கு முருகு ஒப்புதல் தந்தார். முதல் சிறுகதைக்கருத்தரங்கு பத்துமலைக் கலைக்கூடத்தில் வெற்றிகரமாக நடந்தேறியது. சாரதா கண்ணனின் கதை சிறந்த கதையாகத் தெரிவு செய்யப்பட்டது. பின்னர் அடுத்தமாதம் நடந்த கதைத் தேர்வில் சாமி மூர்த்தியின் நேர்கோடுகள் கதை சிறந்த கதையாகத் தேர்வானது. கிள்ளான் கருத்தரங்கத்திற்குப் பிறகு கருத்தரங்கு நின்றுபோனது. எழுத்தாளர் சங்கம் பிரபலம் அடைந்தாலும் பத்திரிகைகளுக்கு இடையில் போட்டாபோட்டி நிகழ்ந்து பலரும் முகம் சுளிக்கும் நிலை உருவானது.

7. பொதுப்பணி செய்வோர் பலரும் அவதூறுகளுக்கு ஆளாவர் என்பது தமிழ்ச்சமுதாயத்தின் பொதுப்போக்காகிவிட்டது என்ற அடிப்படையிலும் எழுத்தாளர் சங்கத் தலைவர் என்ற முறையிலும் முருகு பல பழிப்புரைகளைச் சம்பாதித்துள்ளார். அத்தருணங்கள் பற்றி விரிவாகச் சொல்லுங்கள்.

கிள்ளான் கருத்தரங்கில் கலந்துகொண்டவர்கள் மட்டமான கதை ஒன்றுக்குப் பரிசு தரவேண்டும் என்று கலாட்டடா செய்தனர். மேலும் அவ்வாறு சண்டையிட்டதற்குப் பத்திரிகைகளுக்கு இடையே நிலவிய போட்டி தான் பின்னணி என்று முருகுவுக்கு நன்கு தெரிந்திருந்தாலும்அவர் தலைவர் என்ற முறையில் பொறுமையாகப் பதில் சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால் யாரும் கேட்கவில்லை.இதனை அடுத்து தெலுக் இந்தான் கருத்தரங்கில் கலாட்டா செய்வதற்கென்றே தாடி

அண்ணாமலையை அழைத்து வந்திருந்தார்கள். கூட்டத்தின் ஆரம்பத்திலேயே 'முத்தமிழ் வித்தகர்' என்ற அடைமொழியைக் கொச்சசைப்படுத்தி 'முத்தமிழ் விற்றவர்' என்று தாடி அண்ணாமலை பேசினார்.

கதைகளை விமர்சிப்பதை விட்டுவிட்டு முருகுவையே விமர்சித்துக்கொண்டிருந்தார் தாடி அண்ணாமலை. அங்கு வந்திருந்த எழுத்தாளர்களில் சிலர் தாடி அண்ணாமலைக்குப் பக்கபலமாக இருந்தனர்.பொறுமையிழந்த நான் நாற்காலியை விட்டு எழுந்தேன்.

ஆனால் பாதாசன், சந்திரகாந்தம் போன்றோர் பிடித்து இழுத்து உட்காரவைத்தார்கள். தலைவரான முருகு அவமதிக்கப்படுவதை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இக்கருத்தரங்கத் திற்குப் பிறகு முருகு சுப்பிரமணியன் எழுத்தாளர் சங்கத்திற்குத் தலைவராக இருக்கக்கூடாது என்று தமிழ்மலர் பத்திரிகையில் பக்கம் பக்கமாக எழுதினார்கள்.

குறிப்பாக எம் துரைராஜ் இந்த எதிர்ப்புக்குழுவினருக்குத் தலைமையேற்று ஒரு பத்திரிகையாசிரியர் எழுத்தாளர் சங்கத்திற்குத் தலைமை வகிக்கக் கூடாது என்ற வாதத்தை முன்வைத்து எழுதினார்.

ஏகப்பட்ட பத்திரிகைக் கலாட்டாக் களைப் பார்த்த நடுநிலை வாதிகளான பைரோஜி நாராயாணன், சி.வடிவேல், சி.வேலுசுவாமி, சா.ஆ.அன்பானந்தன் ஆகியோர் கொண்ட ஒரு சமாதானக் குழு முருகு, துரைராஜ் ஆகிய இருவரையும் சந்தித்துப் பேசுவது என்று முடிவாகி அப்பர் தமிழ்ப் பள்ளியில் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

இதற்கிடையில் தமிழ்நேசன் தரப்பு முருகு தலைவர் பதவிக்கு நிற்கவேண்டாமென்று முடிவு செய்தது. இது பற்றி என்னை அழைத்துப்பேசினார்கள்.நான் என் தரப்பில் பிடிவாதமாக இருந்தேன். அப்பர் தமிழ்ப்பள்ளிக் கூட்டத்தில் நான் கலந்துகொள்ளக்கூடாது என்று துரைராஜ் பிடிவாதமாக மறுத்ததால் முருகு அவர்கள் நான் கலந்துகொள்ளுவதைத் தவிர்க்கும்படி கேட்டுக்கொண்டார்.

அதே கூட்டத்தில் முருகுவோ துரைராஜோ தலைவராக

நிற்பதில்லை என்றும் புதியவர்கள் சி.வடிவேல் தலைவராகவும் ,பைரோஜி நாராயணன் துணைத்தலைவராகவும், சி.வேலுசுவாமி செயலாளராகவும், சா.ஆ.அன்பானந்தன் பொருளாளராகவும் இருப்பதாக முடிவெடுக்கப்பட்டதாக என்னிடம் கூறினார்கள். பின்னர் முருகு எழுத்தாளர் சங்கக் கூட்டங்களுக்கு வருவதை நிறுத்திக்கொண்டார். முருகு இல்லாத இடத்தில் எனக்கு வேலை இல்லை என்று நான் ஒதுங்கிவிட்டேன். செயலாளர் பதவிக்கு நிற்கச்சொல்லிப் பலர் வற்புறுத்தியபோதும் நிற்கவில்லை.

8. முருகு சிறுகதை எழுத்தாளரும் ஆவார். அவர் எழுதிய 'சின்னப்பயல்' என்னும் சிறுகதை பலமுறை பல மலர்களில் இடம்பெற்றுள்ளது. இக்கதை தவிர அவர் எழுதிய வேறு சிறுகதைகள் பற்றித் தாங்கள் அறிவீர்களா?

அவர் சிறுகதைகள் எழுதியுள்ளார் என அறிவேன். ஆனால் அக்கதைகள் பற்றிய விவரங்கள் என் நினைவில் இல்லை.

9. முருகு நல்ல சமுதாயத்தொண்டர் என்பதை நன்கு அறிவோம். அவருடன் நெருங்கிப் பழகியவர் என்ற முறையில் அவருடைய சமுதாய்ப்பணி பற்றிக் கூறுங்கள்.

முத்தமிழ்ப்படிப்பக வளர்ச்சியில் முருகு காட்டிய அக்கறை அவருடைய சமூக அக்கறைக்குச் சான்று பகர்வதாகும். எழுத்தாளர் சங்க வளர்ச்சியில் அக்கறை காட்டுவதற்கு முன்பே முருகு அவர்களின் உள்ளத்தில் முத்தமிழ்ப் படிப்பகம் தனக்கென ஒரு கட்டடத்தைப் பெறவேண்டும் என்பதற்காகத் தமிழ்நேசனில் பல கட்டுரைகள் வர ஏற்பாடு செய்ததோடு தலையங்கமும் தீட்டினார்.

ஒரு முறை சிலாங்கூர் மாநிலம் முழுவதும் முத்தமிழ்ப்படிப்பகத் தொண்டர்கள் ஒரு தீபாவளியன்று உண்டியல் ஏந்தி வீடுவீடாகவும், தெருவில் நின்றும் வசூல் செய்த பணத்தை எண்ணிப்பார்க்கும்பொழுது அவரே முன்வந்து எண்ணிக்கையில் கலந்துகொண்டார்.

அவர் சிங்கையிலிருந்து மலேசியா வந்த காலத்திலிருந்து முத்தமிழ்ப்படிப்பகத்தின் வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டினார். எழுத்தாளர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் பயன்படும் ஒரு நூலகம் வேண்டும் என்பதை அடிக்கடி கூறுவார்.

11. தமிழ்க்கல்வி பற்றிய பிரச்னைக்குத் தீர்வு காண்பதில் முருகுவின் நிலைப்பாடுபற்றி விரிவாகக் கூறுங்கள்.

1970 களில் தமிழ் மூன்றாம் வகுப்பு வரை ஆரம்பக் கல்வியோடு போதும்.அதன் பிறகு தேசிய மொழிக் கல்வியைத் தொடரலாம் என்ற ஒரு புதிய ஆலோசனையை டாக்டர் பி பி நாராயணன், இராம.சுப்பையா போன்றவர்கள் கொண்டு வந்தார்கள்.

இதுகுறித்து ஒரு தீர்மானமும் போட்டு அரசாங்கத்துக்கு அனுப்பிவைத்தார்கள். இந்தக் கல்விக்கொள்கையை மணிமன்றம் மிகக் கடுமையாக எதிர்த்தது. நாடு முழுவதும் கூட்டங்கள் போட்டு இதற்கான எதிர்ப்பை மணிமன்றங்கள் வெளிப்படுத்தின.

தோட்டத் தொழிலாளர்கள் சங்க மண்டபத்தில் இராம சுப்பையா தரப்பும் மணிமன்றம் மற்றும் பொது அமைப்புக்களும் இந்தக் கல்விக்கொள்கையில் நேரிடையாக விவாதங்களை நடத்தின. நிலைமை மிகவும் சூடாகிவிட்டது.

அந்த நேரத்தில் ஆறாம் வகுப்புவரையில் இப்பொழுது இருப்பது போலவே இருக்கவேண்டும் என்ற நிலையில் முருகு சுப்பிரமணியன் மிகவும் பிடிவாதமாக இருந்ததோடு தலையங்கமும் தீட்டினார்.

நாடு முழுவதும் மணிமன்றக் கூட்டங்களில் முருகு, சா.ஆ .அன்பானந்தன், க.கிருஷ்ணசாமி, நான் இன்னும் பலரும் கலந்து மக்களுக்கு விளக்கங்கள் அளித்த நேரத்தில் டத்தோஸ்ரீ சாமிவேலுவும் எங்களுக்குப் பக்க பலமாக இருந்தார். அப்பொழுதுதான் அவர் நாடளுமன்றத்துக்கு சுங்கை சிப்புட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்.

தமிழ்க்கல்விப் பிரச்னை மிகவும் சூடாகிப் போகவே அப்போதைய கல்வி அமைச்சர் துன் மகாதீர் முகமட்டைச் சந்திக்க மணிமன்றக்குழு ஏற்பாடு செய்தது. இந்த ஆலோசனையை முருகுவே வழங்கினார்.

கல்வி அமைச்சர் துன் மகாதீரைச் சந்திக்க உடனே அனுமதி கிடைத்தது. பிற்பகல் 3.30 மணிக்கு எங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. பேரவைத் தலைவராக இருந்த சா. ஆ. அன்பானந்தன், செயலாளராக இருந்த க.கிருஷணசாமி,

துணைச்செயலாளராக இருந்த நான் மற்றும் வீரசிங்கம், காஜாங் மன்றத் தலைவர் முருகையா ஆகியோர் கல்வி அமைச்சரைச் சந்திக்கச் சென்றோம்.

மணிமன்றத்துக்கு அப்பொழுது அரசாங்கத்தில் இருந்த மரியாதையை அன்று தெரிந்துகொண்டோம். எங்களுக்கு முன்பே அமைச்சரைக் காணச் சென்ற ஒரு குழு வெளியேறுவதற்கு அரை மணி நேரம் கூடுதலாக ஆகிவிட்டது.

அதாவது பிற்பகல் 3.30 மணிக்கு உள்ளே செல்லவேண்டிய நாங்கள் 4.00 மணி வரை காத்திருந்தோம். உண்மையில் எங்களுக்கு முன்பே உள்ளே சென்று அமைச்சரைக் காணவேண்டிய பாகிஸ்தானிலிருந்து வந்த கல்விக்குழு காத்திருந்தது. அவர்கள் சென்று வந்த பிறகுதான் நாங்கள் செல்லவேண்டும். அரைமணி நேரம் மட்டுமே எங்களுக்குத் தரப்பட்டிருந்தது.

துன் மகாதீர் அவர்கள் பாகிஸ்தான் குழுவை மறுநாள் வரச் சொல்லிவிட்டு,எங்களே உள்ளே அழைத்தார். அரை மணிநேரம் ஒதுக்கப்பட்ட அந்தக் கலந்துரையாடல் முடிந்தபொழுது இரண்டுமணி நேரமாகி விட்டது.என்றாலும் அது மிகுந்த மனநிறைவளிக்கும் சந்திப்பாக அமைந்தது.

தமிழர்கள் விரும்பும் வரையிலும் தமிழ்ப்பள்ளிகளில் ஆறாம் வகுப்பு வரை தமிழ் இருக்கும். நீங்கள் இப்பொழுது சண்டை போட்டுக்கொள்றீர்கள்.இதையும் அரசாங்கம் கண்காணித்துக் கொண்டுதான் இருக்கிறது.

உங்களுக்குள் ஒரு தீர்க்கமான முடிவு ஏற்பட்டாலும் அரசாங்கத்தில் இந்தியர்களின் பிரதி நிதிகள் தரும் முடிவைத்தான் அரசாங்கம் அமல்படுத்தும் என்ற விபரத்தை மிகத் தெளிவாக துன் மகாதீர் எங்களிடம் கூறினார்.

அக்காலகட்டத்தில் ஏற்பட்ட இந்தச் சச்சரவினால்தான் நமக்கு ஒரு தெளிவும் கிடைத்தது.மறுநாள் தமிழ்நேசன் பத்தரிகையின் தலைப்புச்செய்தியாக அரசாங்க நிலையையும் மணிமன்றம் கல்வி அமைச்சரைச் சந்தித்ததால் ஏற்பட்ட தெளிவான நிலையையும் முருகு சுப்பிரமணியன் விளக்கமாக வெளியிட்டார். அதோடு தமிழ்ப்பள்ளிகளைப் பற்றிய விவாதங்கள் முடிவுற்றன.

11. முருகு தமிழ்ப்பள்ளி அறநிதியைத் தமிழ்நேசனில் ஆரம்பித்ததுபற்றி விளக்க முடியுமா?

தமிழ்க்கல்வி குறித்த பிரச்னை முடிந்ததும் முருகு தமிழ்ப்பள்ளிகளுக்காக ஒரு அறநிறுவனத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் ''தமிழ்ப்பள்ளி மாணவர் அறநிதி''யைத் தமிழ்நேசனில் ஆரம்பித்தார்.நூறு லட்சம் நமது லட்சம்(ஒரு கோடி) என்ற பிரச்சாரத்துடன் ஆரம்பிக்கப்பட்டது.நாட்டின் சாதாரண தோட்டப் பாட்டாளிகள் முதல் பெரும் தனவந்தர்கள் வரை இந்தத் தமிழ்ப்பள்ளி மாணவர் அறநிதிக்குச் சிறிதும் பெரிதுமாக நிதியை அள்ளிக் கொடுத்தார்கள்.

தமிழ்ப்பள்ளிகளின் தரத்தை உயர்த்தவும், மாணவர்களுக்கு உதவி நிதிகள் வழங்கவும் இன்னும் தமிழ்ப்பள்ளிகளுக்குத் தேவையான சிலவற்றையும் செய்வதற்கு இந்த அறவாரியம் அமைக்கப்பட்டது. முருகு அவர்கள் நாடு முழுவதும் பயணம் செய்து கூட்டங்களில் பேசி இந்நிதி பெருக ஒத்துழைத்தார்.

இதன் பிறகு முருகுவிற்கும் 'தமிழ்நேசன்' நிர்வாகத்திற்கும் சில கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு முருகு தமிழ்நேசனிலிருந்து விலகிவிட்டார்.அவர் விலகும் பொழுது தமிழ்ப்பள்ளி மாணவர் அறநிதி ஏறக்குறைய எட்டு லட்சத்தைத் தாண்டி இருந்தது. தமிழ்நேசனிலிருந்து வெளியே வந்த முருகு 'புதிய சமுதாயம் ' என்ற மாத இதழைத் துவங்கினார். பிறகு அந்தப்பத்திரிகையும் கைமாறிவிட்ட நிலையில் முருகு மிகவும் மனமுடைந்துபோனார்.

10. முருகுவுடன் தாங்கள் கொண்டிருந்த நட்பில் மறக்க முடியாத, சுவையான சம்பவங்கள் பற்றிச் சொல்லுங்கள்.

மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தலைவராக முருகு சுப்பிரமணியன் செயலாற்றிய வேளையில் கவிஞர் கண்ணதாசன் மலேசியாவுக்கு வரவழைக்கப்பட்டார். அவருக்குத் தம் வீட்டில் விஸ்கி இல்லாத விருந்துக்கு ஏற்பாடு செய்தார் முருகு. மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கச்செயலாளராக நான் முருகுவுடன் பணியாற்றிய சமயத்தில் விருந்துக்கு அசைவம் சமைக்க என் பெரியப்பா முருகுவின் வீட்டிற்குச் சென்றார்.

முருகுவின் துணைவியார் என் சகோதரியின் திருமணத்தில் கலந்து கொண்டதால் என் பெரியப்பாவின் சமையல் பற்றி

அவருக்கு நன்றாகத் தெரியும்.ஓயாமல் புகழ்ந்து சொல்லிக் கொண்டே இருந்ததால் முருகுவும் அதற்குச் சம்மதித்து என் பெரியப்பாவை அழைத்தார்.

என் பெரியப்பா தமிழ்நாட்டில் செட்டிநாட்டுப் பகுதியான தேவகோட்டையைச் சேர்ந்தவர். கண்ணதாசன் வந்தார்.உணவு பரிமாறப்பட்டது.உணவைச் சுவைத்து உண்ட கண்ணதாசன் ''என்ன உணவில் செட்டிநாட்டு மணம் கமழ்கிறதே'' என்று முருகுவிடம் கேட்டார். முருகு என் பெரியப்பா பற்றிக் கூறினார். கண்ணதாசன் முருகு அளித்த விருந்தைச் சுவைத்து உண்டதும் என் பெரியப்பாவின் நளபாகமும் என் மனக்கண்ணில் நிழலாடுகிறது.

மற்றொரு சுவையான சம்பவம் முருகுவின் கணக்குப்பார்க்கும் பழக்கத்தைக் குறித்தது. செட்டியார்கள் கணக்குப்பார்த்துச் செட்டாகத்தான் செலவழிப்பார்கள் என்று எனக்குத்தெரியும். முருகு விதிவிலக்கா என்ன? முதல் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் கலந்துகொண்ட பேராளர்களைச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லும் பொறுப்பை முருகு ஏற்றுக் கொண்டிருந்தார். அறிஞர் மு. வரதராசன் அவர்களை

பின்னிணைப்பு – 9

தமிழ்நாட்டின் தனிப்பெருங் கவியரசர் பாரதிதாசன் அவர்கள் முருகு சுப்பிரமணியன் - வள்ளியம்மை திருமணத் திருநாளில் வழங்கிய வாழ்த்துப்பா

திருவளர் செல்வன் முருகென அழைக்கும்
மருவுசீர்ச் சுப்பிர மணியன் ''குமரனாம்''
கவின்தாள் உதவிக் கணக்காயன் பேர்
நவிலினும் உள்ளம் நனிஉவப் புறுமோர்
புகழும் நல்லொழுக்கமும் புதியன போற்றும்
தகைமையும் எழுத்திலோர் தனித்த வன்மையும்
அமைந்தோன் தன்பேரன்பினை இந்நாள்
அமிழ்துமொழி வள்ளிக் களிக்க லுற்றான்!
புள்ளிமான் நிகர்த்த வள்ளிதானும்
கொள்ளும் உள்ளன்பை அள்ளி முருகினில்
சேர்க்க லானாள்இத் திருமணச் செய்தியைக்
கேட்கலானோம் கிளர்ந்தது மகிழ்ச்சி !
தெள்ளியதமிழ் இசை சேர்ந்தென மணங்கொள்
வள்ளியும் முருகும் பிள்ளைகள் பெற்றும்
பெருவாழ்வுற்றுப் பேரின் பெய்துக !
திருவோங்கு தமிழர் வாழிய
உருவோங்கு செந்தமிழ் உயர்ந்து வாழியே !

பின்னிணைப்பு – 10

சமுதாயக் காவலன் சாயாப் பெற்றியன்
சுவாமி இராமதாசர்

ஓங்குமா புகழ்சால் உயர்வுடைச் செழும்பதி
தீங்கிலாக் கோலாலம் பூரதிற் சிறப்பொடு
செந்தமிழ்ச் செய்திகள் தினந்தினங் கொணர்ந்து
நந்தமிழ்க் குழாந்தனை நலமுறச் செய்யும்
நேசன் றனக்குநல் லாசா னாகிப்
பாச முடன்பணி பலபட வாற்றிடும்
முத்தமிழ் விரகன் முருகுடைச் செம்மல்

சித்தம் உயர்ந்த செழுங்குணத் தோன்றல்
சமுதாயக் காவலன் சாயாப் பெற்றியன்
அமுதார் செஞ்சொல் அமைவுடன் பேணும்
முருகு சுப்பிர மணியன் றனக்கிவண்
உருகு நெஞ்சத் துவகை யாளர்கள்
அன்னார் செயன்முறை யாவையு மாய்ந்து
பொன்னார் நல்விழாப் பொருந்தச் செய்குவான்
தமிழத் தலைவர்கள் தமையெலாங் கூட்டி
தமிழர் செழுநிலை தாழா வண்ணம்
நன்னிலை யோடு நடாத்து மிந்தப்
பொன்விழாச் சிறப்புறப் பெருமகிழ் வோடு
வாழ்த்துவேம் முருகு வளமுட னோங்கிட
வாழ்த்துதும் அகவை வளர்ந்து நலம்பெற
வாழ்த்துதும் இறையருள் மல்க
வாழ்த்துதும் இசையொடு வாழிய நலனே !

பின்னிணைப்பு -11

முத்தமிழ் வித்தகம் மூடாத புத்தகம்
கவிவாணர் ஐ. உலகநாதன்

முத்தமிழ் வித்தகம்
மூடாத புத்தகம்
முருகாகித் தமிழினத்தின்
எருவாகித் திருவானவன்!
மூடத்தனம் எரிய
மூட்டிய நெருப்பினிலே
முறியாத விறகானவன்!

சத்தமிட்டார்ப் பரிக்கும்
சராசரியார் கூட்டத்தில்
சங்கீதக் கடலானவன் –இவன்

எத்தனைநாள் வாழ்ந்தானோ
அத்தனைநாளும் இங்கே
யாம் எழுதும் மடலானவன்-இவன்

இனிக்கின்ற தமிழ்வாழ
நினைக்கின்ற நெஞ்சத்தால்
இளைக்கின்ற உடலானவன்!
உறுமுகின்ற மனிதர்கள் முன்
இருமுகிற வேளையிலும்
தருமமரத் தமிழ் செய்தவன் – இவன்
பூருமுகிற பகைமுறித்து
பூந்தமிழர் தொகை வளர்த்து
வரும்மர வாழ்வு கொய்தவன்!

பொன்னிநதி நடைபோட்டு
மண்முழுதும் வளம்செய்து
கன்னித்தமிழ்ப்பயிர் காத்தவன் – இவன்
எண்ணியதால் இயற்றியதால்
இயக்கியதால் இயங்கியதால்
எம்மினத்தின் துயர்தீர்த்தவன் !

பகுத்தறிவுப் படைநடத்திப்
பாசறைகள் பலகண்டு
பாவேந்தர்க்கணி யானவன் – இவன்
வகுத்தநெறி தமிழ்முரசம்
வாழ்ந்ததடம் தமிழ்நேசம்
வாழும்வரை மணியானவன்!

நோய்ப்படுக்கை மீதினிலும்
நூலெழுதித் தமிழுலகின்
நோய்தீர்க்கப் பாடுபட்டவன் – இவன்
தாய்த்தமிழைச் சாகடிப்போர்

சாயத்தை வெளுப்பதற்கு
சாகும்வரை ஈடுபட்டவன் !
நேற்றுவரை எழுதியவன்
நேற்றிருந்தான் இன்றில்லை
நீர்விழிகாள் நீர்பாடுங்கள்! – இவன்
காற்றுபடும் இடமெல்லாம்
கவிதைகளைக் கேட்டிருக்கும்
காதுகளே ! இனிமூடுங்கள்!

(முருகு நினைவுமலரிலிருந்து எடுக்கப்பட்டது)

பின்னிணைப்பு - 12

முருகு எனும் செம்மல் வாழ்க!

ரெ. சண்முகம்

பிறவியெடுத்த மனிதரெல்லாரும்
பெருமைக்குரியவர் இல்லை –அப்
பெருமையைத் தேடிப்பெற்றவர் இருந்தால்
அவரில் பெரியவர் இல்லை.
கருவில் உதித்த கணமே தமிழைக்
காப்பேன் எனுமோர் நினைவாய் –வந்த
முருகு எனும் அண்ணலின் பெருமையைப் பேச
முந்திடும் வாயே திருவாய்.
முருகன் என்பார் கருணை என்பார்
முழுதும் அவனருள் என்பார்- அந்த
திருவே தமிழைத் தந்தது என்று
திருப்புகழ் பாடிப் பணிவார்
உருவாய்த் தமிழ்க்குப் பணிசெய அழைத்தால்
உதவா மொழியென உரைப்பார் ! – நடுவில்
திருவாய் அமைந்த எம்முடைத் தலைவன்
ஏந்தல் முருகே வாழக.

நினைவும் எழுத்தும் செயலும் பிறவும்
நெஞ்சில் இனிக்கும் தமிழாம் – பெரும்
பணிவும் அடக்கமும் கொண்டான் உள்ளத்தில்
படர்ந்த தனைத்தும் தமிழாம்
துணிவொடு வீரம் துளைக்கும் – எந்தன்
தூய்தமிழ்க் கோரிடர் வந்தால் – ஓ
ரிணையே இல்லா முத்தமிழ்ச் செல்வன்
முருகெனும் செம்மல் வாழ்க.
இன்றுள சிறந்த கவிஞர் பலரும்
இன்தமிழ் 'பொன்னியின்' மரபாம் – பல
கன்றினை ஈந்தே மகிழ்ந்திடும் பசுபோல்
கனியும் மனமே முருகாம்
இன்றும் நாளையும் என்றும் அவரோர்
இனிக்கும் செந்தமிழ்ப் பழமாம் –குணக்
குன்றினில் நிலைத்த நற்றமிழ்த் தலைவனின்
குணநலம் ஏற்றுப் புகழ்வோம்
எத்தனை வளத்தில் வாழ்ந்திருந்தாலும்
இன்றமிழர் மொழியே தமிழாம் – இதை
சித்தமதில் நிலைநிறுத்தி வாழ்ந்திடும்
செம்மலின் மனமே மனமாம்
உத்தமச் சான்றோன் உயர்தமிழ்த் தலைவன்
ஊழியும் ஊழியும் வாழ்க – தமிழ்ச்
சத்தியம் வாழ நிலைத்திட வேண்டும்
ஞாலம் வேண்டுதல் இதுவே.

(முருகு பொன்விழா மலரிலிருந்து எடுக்கப்பட்டது)

பின்னிணைப்பு – 13

முருகு அவதாரம்

பாதாசன்

தமிழ்குறைக்கப் படவேண்டும் என்போர் முன்னே
தணற்கண்ணாள் காளியென வடிவு கொண்டான்!
தமிழ்ப்பள்ளி மாணவர்தம் நலத்தைக் காக்க
சகலகலா வல்லிஅந்தச் சக்தி ஆனான்
அமைதியொடு வளமாக நாமும் வாழ
அரசியலில் நமக்கெல்லாம் ;குகனாய்' வந்தான்
நமதரசி யல்வாழ்வில் தவறு கண்டால்
நயமாகக் கடிவதிலே 'குறளோன்' ஆவான்

வல்லிருளாய் உள்ளநம தறியா மையை
மணிக்கருத்தால் அழிப்பதிலே 'திருமால்' ஆனான்
நல்லஎழுத் தாளர்களின் அழிப்பதிலே உருவாக் கத்தில்
நான்முகனாய் உருவெடுத்தான்! தேசி யத்தில்
உள்ளபொது நலன்காக்க 'சிவனாய்' வந்தான்
உயர்தமிழை ரசிப்பதிலே முதன்மை யோனாய்ச்
சொல்லவரும் தமிழ்க்கடவுள் முருக னானான்
தமிழ்க்காவ லன்எங்கள் முருகு வாழ்க !

பின்னிணைப்பு -14

ஆறறிவும் கலங்குதய்யோ!

கவிஞர் காசிதாசன்

அமிழ்துக்குச் சுவைதந்து அரிதான பொருள்தந்து
அணிசசேர்த்து ஒளிசிந்திடும்
தமிழுக்குத் துணையாகித் தமிழர்க்கும் அரணாகி
தக்கபுகழ் தனைப்பெற்றவன்
குமிழுக்குள் இருக்கின்ற காற்றாகி உலகையே
குவிகின்ற இருளாக்கினான்
கமழ்கின்ற பூவாகி கருத்தாறும் கடலாகி
கவிதந்த முருகானவன்


பாரதியின் தாசனும் பகுத்தறிவும் கலைஞரும்
பொன்னிதனில் நீராடினர்
பேரறிஞர் அண்ணாவும் பெரும்புலவர் மேதையும்
பெருநட்புக் கொண்டாடினர்
ஊரறியும் உலகறியும் உன்திறமை யாவுமே
உரைப்பதற்குச் சொல்லில்லையே !
ஆறுதல்யார் சொன்னாலும் அதையேற்க மனமில்லை
ஆறறிவும் கலங்குதையோ!

வல்லினமும் மெல்லினமும் தெரியாமல் தடுமாறி
வகைகெட்டு எழுதியோரை
புள்ளினம் குஞ்சுக்கு அமுதூட்டும் தன்மைபோல்
புதுப்பார்வை தனைக்காட்டினாய்
வில்லிலே விரைகின்ற அம்பினும் கூர்மையே
வழிகாட்டும் உந்தன்கருத்து
சொல்லிலே கொள்ளுமா சாதனைப் பட்டியல்
சொல்லிமுடி யாதுகணக்கு !

★★★



திரு முருகு சுப்பிரமணியன் –
திருமதி வள்ளியம்மை



முருகு சுப்பிரமணியன், தமிழவேள்
திரு கோ சாரங்கபாணி, வயினாகரம்



முருகு சுப்பிரமணியன்,
புலவர் சேதுராமன்



முருகு அறிஞர்
அண்ணாதுரையுடன்



முருகுவும் துன் வீதி சம்பந்தன்
அவர்களும்



முருகுவும் அறிஞர் மு.வரதராசன்
அவர்களும்



முருகு, துன் வீ தி சம்பந்தன், பைரோஜி நாராயணன் உரையாற்றும் முருகு, தமிழவேள் திரு கோ.சா ,வயினாகரம் இராமநாதன்



துங்கு அப்துல் ரஹுமான்(மலேசியப் பிரதமர்) துன் வீதி சம்பந்தத்தை அடுத்துப் புன்னகைத்தபடி நிற்பவர் முருகு